இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 159 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 21 வியாழக்கிழமை 04.05.2017

## புதிய பதவியில் சவேந்திர சில்வா

கொழும்பு, மே 4
இலங்கை இராணுவத்தின் கஜபா படைப் பிரிவின் 11ஆவது தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா பதவியேற்றுள்ளார்.
கஜபா படைப் பிரிவின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றிய வந்த மேஜர் ஜெனரல் உதய >> 06



## ஆயுதங்களுடன் ராணுவம் முல்லையில் நடமாட்டம்

யாழ்ப்பாணம், மே 4
முல்லைத்தீவுமாவட்டத்தில் கடந்த சில தினங்களாக, ஆயுதங்களுடன் இராணுவத்தின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. முக்கிய சந்திகளில் காலையிலிருந்து மாலை வரை இராணுவத்தினர், தமது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த மாதம் வடக்கு கிழக்கில் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அன் >> 25

## 17 மோட்டார் குண்டுகள் உருத்திரபுரத்தில் மீட்பு



கிளிநொச்சி, மே 4
கிளிநொச்சி உருத்திரபுரத்தில் 17 மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். >> 06

## வெயிலால் மக்களுக்கு பல நோய்கள்

### அடிக்கடி தண்ணீர் அருந்துமாறு அறிவுறுத்தல்

கொழும்பு, மே 4
தற்போது நிலவும் வெப்ப கால நிலையுடன், சூரிய ஒளி உடலில் ஊடுருவுவதால் பல்வேறு நோய்கள் ஏற்படக்கூடும். எனவே அனைவரும் அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும். இவ்வாறு கொழும்பு தேசிய மருத்துவமனையின் >> 06

## சித்திரவதை புரிந்த 6 பொலிஸாருக்கு 10 வருடங்கள் கடூழியச் சிறை

### யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மே 4
சந்தேகநபரைத் தடுப்புக்காவலில் வைத்து சித்திரவதை செய்த 6 பொலிஸாருக்கு 10 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.
இந்த வழக்கில் மனித குலத்துக்கு எதிரான கொடுமை செய்தனர் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தால் இனங்காணப்பட்ட சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார, பொலிஸ் உத்தியோகத்தர்களான மயூரன், ராஜபக்ச, ஜெயந்த, சோமதாஸ வீரசிங்க மற்றும் கோபிகிருஸ்ணா ஆகியோருக்கே தண்டனை வழங்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட மேலும் இரு பொலிஸார் விடுவிக்கப்பட்ட னர்.
குற்றவாளிகள் 6 பேரும் தலா 2 லட்சம் ரூபாவை சித்திரவதைக்குள்ளான சுமணனின் குடும்பத்துக்கு இழப்பீடாக வழங்க வேண்டும். செலுத்தத் தவறின் ஒரு வருடம் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். குற்றவாளிகள் 6 பேரும் தலா 25 ஆயிரம் ரூபாவை தண்டமாகச் செலுத்த வேண்டும். அதனையும் >> 25

## மயிலிட்டி கிணற்றிலும் வெடிபொருள்கள் மீட்பு



யாழ்ப்பாணம், மே 4
அண்மையில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டி வடக்குத் துறையில், கிணற்றிலிருந்து பெருமளவு வெடிபொருள்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. >> 06

## இரட்டைக் குடியுரிமை வைத்திருந்த காரணத்தால் கீதா குமாரசிங்கவின் எம்.பி. பதவி பறிப்பு



கொழும்பு, மே 4
இரட்டைக் குடியுரிமை வைத்திருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான கீதா குமாரசிங்க, நாடாளு >> 06

## முச்சந்தி முரளி



சாத்தான் வேதம் ஓதுறது எண்டு சொல்லுறது இதைத்தானோ...

## மேலும் சிலரின் எம்.பி பதவிகளும் பறிபோகும்

கொழும்பு, மே 4
கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோனதுபோன்று இரட்டைக் குடியுரிமை வைத்துள்ள மேலும் சிலரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் விரைவில் பறிபோகும் என்று சிறிலங்கா சுதந்திரக் >> 06

## குருநாகலில் தாதி டெங்கினால் சாவு

### ஐந்து மருத்துவர்களுக்கும் 15 தாதியர்களுக்கும் தொற்று

கொழும்பு, மே 4
குருநாகல் வைத்தியசாலையில் பணிபுரியும் தாதி ஒருவர் டெங்கினால் உயிரிழந்துள்ளார். மேலும் ஐந்து வைத்தியர்களும் 15 தாதியர்களும் டெங்குத் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. >> 24

## சட்டவிரோத மணல் அகழ்வால் கவலையடைகிறாராம் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மே 4
கனரக இயந்திரங்களைப் பயன்படுத்திச் சுற்றுச் சூழலுக்குப் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் மணல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், மணல் அகழ்வுப் பிரதேசங்களைத் துப்புரவு செய்து மரங்களை எரித்துத் தட >> 06

## இடைக்கால அறிக்கை இறுதி செய்வதற்காக 4 நாள்கள் 5 அமர்வுகள்

### வழிநடத்தல் குழுவின் நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 4
வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை இறுதி செய்வதற்காகத் தொடர்ச்சியாக நான்கு நாள்கள் 5 அமர்வுகளை >> 06

## இனவாத முத்திரையை கிழித்தெறிந்துள்ளது சு.க.

### மகிந்த அமரவீர பெருமிதம்

கொழும்பு, மே 4
இனவாதக் கட்சியென்று சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இருந்த முத்திரை அரசதலைவரும் சு.கவின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் கண்டி இம்முறை நடை >> 25

## வடக்கில் 131 விகாரைகள் பதிவுள்ளவை 61 மட்டுமே

கொழும்பு, மே 4
வடக்கு மாகாணத்தில் தொல்பொருள் திணைக்களத்துக்குரிய 131 விகாரைகள் இருந்தபோதிலும் அவற்றுள் 61 விகாரைகள் மாத்திரமே பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி பதில் நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண எழுப்பிய கேள் >> 06

## தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கணித, விஞ்ஞான ஆசிரியர்கள்

### அழைத்து வர நடவடிக்கை என்கிறார் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, மே 4
மலையகத்தில் கணித விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கடும் பற்றாக்குறை நிலவுகிறது. வடக்கு-கிழக்கிலிருந்தும் உரிய ஆசிரியர்களைப் பெறமுடியவில்லை. பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேறுவழியின்றித் தமிழ் நாட்டிலிருந்து கணித, விஞ்ஞான ஆசிரியர்களை அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். மலையகம் மீபேயில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் தேசிய கல்வி நிறுவனத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பெருந்தோட்டப் பாடசாலைகள் சம்பந்தமான கலந்துரையாடலின் >> 06

## ஐ.நா. வேகம் காட்டியிருப்பின் பலர் உயிர் பிழைத்திருப்பர்

### அந்த அமைப்பின் குழுவினரிடம் சுட்டிக்காட்டினார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், மே 4
ஐ.நா. சற்று வேகம் காட்டியிருந்தால் இறுதிப்போரில் கொல்லப்பட்ட மக்களில், அதிகமானோரைப் பாதுகாத்திருக்க முடியும் என ஐ.நாவின் திட்டமிடல் அதிகாரி விக்னராஜாவிடம் சுட்டிக்காட் >> 24

## ஈரானில் உயிரிழந்த இரு தமிழர்களின் உடலங்களை கொண்டு வருவதில் சிக்கல்

### அதற்காக 11 இலட்சம் ரூபா செலவாகுவதால்

யாழ்ப்பாணம் மே 4
சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்டவேளை ஈரானில் உயிரிழந்த 2 தமிழ் இளைஞர்களின் உடலங்களையும் இலங்கைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உள்ள பிராந்திய அயலுறவுத்துறை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.
ஆயினும் அதற்கான கட்டணமான 11 இலட்சம் ரூபாவைச் செலுத்துவதற்குப் பாதிக்கப்பட்ட குடும்பங்களால் முடியாதுள்ளமையால் உடலங்களைக் கொண்டுவருவதில் சிக்கல் நிலமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஐரோப்பிய நாட்டுக்குச் செல்வதற்காக முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு பேர் ஆள்கடத்தல்காரர்களை நம்பிப் பல இலட்சம் ரூபா பணத்தையும் கொடுத்து முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.
வெளிநாட்டுக்குச் சென்றவர்கள் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 19 திகதி ஈரான் நாட்டில் இருப்பதாகவும், சில தினங்களில் வேறு நாட்டுக்குச் சென்று விடுவோம் எனவும் முல்லைத்தீவில் உள்ள தங்கள் உறவினர்களுடன் தொலைபேசியில் பேசியுள்ளனர்.
அதன் பின்னர் அவர்களிடம் இருந்து எந்தத் தொடர்பும் கிடைக்கவேயில்லை. வெளிநாடு சென்ற இளைஞர்களை மீட்டுத் தருமாறு அவர்களது உறவினர்கள் கடந்த 20ஆம் திகதி ஈரான் தூதரகத்திலும், அயலுறவுத்துறை அலுவலகத்திலும் முறையிட்டனர்.
இதன்படி ஈரானில் சிக்கியிருந்த இருவரையும் மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த வேளை ஈரானில் இரண்டு பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து இரண்டு பேரினதும் புகைப்படங்கள் கொழும்பு அயலுறவுத்துறை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.
ஏற்கனவே ஈரானில் இருவர் தவித்து வருவதாக வடக்கில் இருந்து முறைப்பாடுகள் கிடைத்தமையால் படுகொலை செய்யப்பட்ட இருவரினதும் புகைப்படங்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இயங்கும் பிராந்திய அயலுறவுத்துறை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அங்கு வருகை தந்த முறைப்பாட்டா ளர்கள் இறந்த இருவரும் தமது உறவினர்கள்தான் என அடையாளம் காட்டினார்கள்.
இதனையடுத்து கடந்த 26ஆம் திகதி ஈரானில் இறந்த இருவரினதும் உடலங்களை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கான விண்ணப்பம் பிராந்திய அயலுறவுத்துறை அலுவலகத்தில் உறவினர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. விண்ணப்பங்களை ஏற்ற அதிகாரிகள் துரிதமாக உடலங்களைக் கொண்டு வருவதற்கான நடவடிக்களை மேற்கொண்டுள்ளனர். ஆயினும் அதற்கான செலவினமாக 11 இலட்சம் ரூபாவைச் செலுத்த முடியாத நிலையில் உறவினர்கள் உள்ளதால் உடலங்களைக் கொண்டு வருவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. (த-8)



## ஊடகவியலாளர் படுகொலைகளை விசாரிக்கக் கோரி போராட்டங்கள்

### வடக்கிலும் கிழக்கிலும் நேற்று முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே 4
பன்னாட்டு ஊடகச் சுதந்திர நாளான நேற்று ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும், படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் தொடர்பான நீதியான விசாரணைகளை நடத்தக் கோரியும் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் நேற்றுப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
மட்டக்களப்பில், நேற்று நண்பகல் 12 மணிக்கு, மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தும் வாசகங்கள், கடந்த காலத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மீதான படுகொலைக்கு நீதி கோரிய வாசகங்களைத் தாங்கியவாறு ஊடகவியலாளர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். சுமார் ஒரு மணி நேரம் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.
யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. அதற்கு முன்



னதாக, யாழ்ப்பாண நகரில் அமைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியில் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது. அதன் பின்னர் யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்தின் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. இதில் பெருமளவு ஊடகவியலாளர்களும், அரசியல்வாதிகளும் கலந்துகொண்டனர். (த-5)

## பாக். கடற்படையின் கப்பல் கொழும்பில்



கொழும்பு, மே 4
பாகிஸ்தான் கடற்படையின் கடல்சார் பாதுகாப்புக் கப்பலான பி.எம்.எஸ்.எஸ். டாஸ்ட் நல்லெண்ணப் பயணமாகக் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது.
நேற்றுக் காலை பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு வந்தபோது, இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.
எதிர்வரும் மே 6ஆம் திகதி இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

### யாழ்ப்பாணம் மாநகர சபையில்

## 28 இலட்சம் மோசடி செய்தவரால் 170,000 ஆயிரம் மட்டுமே மீளளிப்பு

யாழ்ப்பாணம், மே 4
யாழ்ப்பாணம் மாநகர சபையில் 7 மாதங்களுக்கு முன்பு 28 லட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்டவர் இன்றுவரை சபைக்கு ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா மட்டுமே மீளச் செலுத்தியுள்ளார் என மாநகர ஆணையாளர் வாகீசன் தெரிவித்தார்.
2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மாநகர சபையில் ஒரு ஊழியரால் பல இலட்சம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டிருந்தது. குறித்த மோசடியுடன் தொடர்புள்ள ஊழியரிடம் இருந்து இதுவரை எவ்வளவு தொகைப் பணம் மீளச் செலுத்தப்பட்டுள்ளது எனக் கேட்டபோதே ஆணையாளர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
குறித்த பெண் ஊழியர் கடந்த ஆண்டு 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சபைக்குச் சொந்தமான பல லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. அதன் பிரகாரம் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளில் குறித்த உத்தியோகத்தர் 28 லட்சம் ரூபா மோசடி செய்தமை கண்டறியப்பட்டது. ஒழுக்காற்று விசாரணையின்போது ஊழியரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் குறித்த விடயம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டோம்.
பொலிஸார் நீண்ட இடைவெளியின் பின்னர் குறித்த விடயம் தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். அதன் பிரகாரம் கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதியும் வழக்கு இடம் பெற்று இம்மாதம் இறுதித் திகதியில் திகதியிடப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த மோசடி தொடர்பில் ஊழியரினால் இதுவரை ஒரு லட்சத்து 70 ஆயிரம் மட்டுமே மீளச் செலுத்தப்பட்டுள்ளது.
குறித்த விடயமானது தற்போது நீதிமன்றில் உள்ளமையால் அடுத்த தவணை நீதிமன்றத்தின் உத்தரவையடுத்தே மேற்கொண்டு ஆராய முடியும் - என்றார். (த-101)

## ராஜிதவுக்கு எதிராக மைத்திரிபாலவிடம் முறையிட்டார் ஜோன்

கொழும்பு, மே 4
சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தம்மை நேரடியாக விமர்சனம் செய்தார் என ஜோன் செனவிரட்ன அரச தலைவரிடம் கூறியுள்ளார்.
இந்த நடவடிக்கை குறித்து வருந்துவதாகவும், இது பிழையான செயல் எனவும் அரச தலைவர் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் மாலை அமைச்சரவைக் கூட்டத்தின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
“அரச தலைவரே, அமைச்சர் ராஜித அமைச்சரவையின் இணைப் பேச்சாளர். அவர் சொல்லும் விடயங்கள் பொறுப்புடன் சொல்லப்பட வேண்டும். மே தினக் கூட்டத்தில் நான் மகிந்தவின் செருப்பை நக்குவதாக நேரடியாகக் குற்றம் சுமத்தியுள்ளார். அவ்வாறாயின் நாம் எல்லோரும் செருப்பு நக்குபவர்களே. ராஜிதவும் மகிந்தவின் அமைச்சரவையில் அங்கம் வகித்திருந்தார். இவ்வாறு கருத்து வெளியிட அனுமதிக்கவேண்டாம்” என்று ஜோன் செனவிரட்ன கோரியுள்ளார்.
“இவ்வாறான விடயங்கள் நடக்கக்கூடாது. ஒரே அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சகோதர அமைச்சர்களை விமர்சனம் செய்வது நல்லதல்ல. இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.” என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.
இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் ராஜித சேனாரத்ன பங்கேற்கவில்லை. (த-4)

### சுமந்திரன் கொலை முயற்சி

## சந்தேகநபர்கள் மீதான விசாரணைகள் நிறைவு

கிளிநொச்சி, மே 4
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சுமந்திரன் கொலை முயற்சி வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள ஐந்து சந்தேக நபர்கள் மீதான விசாரணைகள் முடிவடைந்துள்ள நிலையில், அதன் அறிக்கை சட்டமா அதிபரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் தெரிவித்தனர்.
பிரமுகர் ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கடந்த ஜனவரி மாதம் 14ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்த முன்னாள் போராளிகள் ஐந்து பேர் மீதான வழக்கு விசாரணை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது.
சந்தேகநபர்கள் ஐவரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் நேற்றையதினம் நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டு முன்னிலைப் படுத்தப்பட்டனர். நீதிவான் முன்னிலையில் தோன்றிய பயங்கரவாத தடுப்புப்பிரிவு அதிகாரி,
பன்னாட்டுப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள ஆறாவது சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மேற்படி சந்தேகநபர்கள் ஐந்து பேர் மீதான அனைத்து விசாரணைகளும் முடிவடைந்துவிட்டன என்றும், விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.
இந்த வழக்கு யாழ்.மேல்நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளதாலும், விசாரணைகள் முடிவடைந்துள்ளதாலும் சந்தேகநபர்களை யாழ்.சிறைச்சாலைக்கு மாற்றுவது தொடர்பான கோரிக்கையை முன்வைக்குமாறு சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளை அறிவுறுத்திய நீதிவான், ஐவரையும் எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
சந்தேகநபர்களை யாழ்.சிறைச்சாலைக்கு மாற்றுவது தொடர்பான கோரிக்கை முன்னதாகவே விடுக்கப்பட்டிருந்தது. எனினும் விசாரணைகள் முடிவடையாததைக் காரணம் காட்டிப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் அதற்கு ஆட்சேபனை தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் யாழ். வடமராட்சி கிழக்கு மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த சந்தேகநபர்கள் ஐந்து பேரும் கடந்த ஜனவரிமாதம் 14ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.
காராளசிங்கம் குலேந்திரன், வேலாயுதம் விஜயகுமார், முருகையா தவேந்திரன், லூசி மரியநாயகம் அஜந்தன் மற்றும் ஞானசேகரலிங்கம் னராஜ்மதன் என்ற ஐவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். (த-ய)

# சுற்றுலா நியதிச் சட்டம்:

## நாடாளுமன்ற நிலைப்பாட்டை கோருகிறது வடமாகாண சபை

கொழும்பு, மே 4

வடக்கு மாகாணத்துக்குரிய சுற்றுலா நியதிச்சட்டம் தொடர்பில் குறித்த மாகாண சபை நாடாளுமன்றத்தின் நிலைப்பாட்டைக் கோரியுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் தனக்கு கிடைத்துள்ளது என்று சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சபாநாயகர் அறிவிப்புவேளையிலேயே, நிலையியல் கட்டளையின் 46(அ)3(அ) பிரிவின்கீழ்தான் இந்த அறிவிப்பை விடுப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த அறிவித்தல் பன்னாட்டு விவகாரங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும். அத்துடன், நியதிச்சட்ட வரைவின் பிரதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

# இந்தியப் படகுகள் விடுவிப்பதற்கு வடக்கு மீனவரின் ஒப்புதல் அவசியம்

## நாடாளுமன்றில் கூறினார் அமரவீர

யர்ப்பாணம், மே 4

இந்தியாவின் அழுத்தத்துக்காக இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளை விடுவிக்க முடியாது. வட பகுதி மீனவர்களின் ஒப்புதலே முக்கியமானது என மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற அமர்வில் இந்தியத் தலைமை அமைச்சர் மோடியின் வருகையை முன்னிட்டு இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்ட 138 படகுகளை விடுவிக்க போவதாக வரும் தகவல் உண்மையா எனக் கூட்டு எதிரணியால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியத் தலைமை அமைச்சரின் வருகைக்காகப் படகுகளை விடுவிக்குமாறு ஒரு கோரிக்கை இதுவரை முன்வைக்கப்படவில்லை.

அவ்வாறு ஓர் அழுத்தம் முன்வைக்கப்பட்டாலும் அதற்கு அடிபணிந்து படகுகள் விடுவிக்கப்படமாட்டாது. இருப்பினும் மூன்று ஆண்டுகளுக்கு முன் பிடிக்கப்பட்ட 36 படகுகள் சேதம் அடைந்து உள்ளதாகத் தகவல் கூறப்படுகின்றது.

அந்தப் படகுகளை விடுவிப்பது தொடர்பில் ஆலோசிக்கப்படுகின்றது. வடக்கு மாகாண மீனவர்கள் ஒப்புதல் தெரிவித்தால் மட்டுமே அது குறித்தும் ஆலோசனை செய்யப்படும்.

தொடர்ந்தும் எல்லை தாண்டும் மீனவர்கள் கைது செய்யப்பட்டாலும் மீனவர்கள் மட்டுமே விடுவிக்கப்படுகின்றனர். ஆனால் கடந்த காலத்தில் மீனவர்களுடன் படகுகளும் விடப்பட்டன - என்றார். (த-105)

# பொன்சேகாவுக்கு ராணுவப் பதவி; தீர்மானமில்லை என்கிறார் ரணில்

கொழும்பு, மே 4

முப்படைகள் உட்பட ஒட்டுமொத்த பாதுகாப்பு விவகாரங்களையும் கையாளும் உயர்நிலைப் பதவிக்கு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை நியமிப்பது தொடர்பில் அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொன்சேகாவை இப்படியொரு பதவிக்கு நியமிப்பதற்குரிய யோசனை அரச தலைவரால் முன்வைக்கப்பட்டதா? இந்த விடயம் பற்றி அமைச்சரவையில் பேசப்பட்டதா? என்று கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ரணில் மழுப்பல் போக்கில் பதிலளித்தார். "அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் இறுதித் தீர்மானம் பற்றியே என்னால் கருத்து வெளியிட முடியும். அங்கு பேசப்படும் விடயங்கள் சம்பந்தமாகக் கருத்து வெளியிடமுடியாது" என்றார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது, அரசியல் களத்தில் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ள சரத் பொன்சேகா விவகாரம் தொடர்பில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தலைமை அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பினார். முப்படைகளையும் வழிநடத்துவதற்குரிய பதவியை சரத் பொன்சேகாவுக்கு வழங்குவது தொடர்பில் அமைச்சரவைக்கு அரச தலைவரால் யோசனை முன்வைக்கப்பட்டதா? அதற்கு அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டதா? இப்படியானதொரு யோசனை நல்லாட்சிக்கும், ஜனநாயகத்துக்கும் எதிரானது அல்லவா" என்பதே அவரின் வினாக்கள்.

இவற்றுக்குப் பதிலளித்த தலைமை அமைச்சர் ரணில், "சரத் பொன்சேகாவை முப்படைகளின் பிரதானியாக நியமிப்பது குறித்து அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்படவில்லை. கூட்டுப் படைகளின் பிரதானிப் பதவிக்கு ஒருவரை நியமிக்க வேண்டுமென்றாலும் அதற்கு அரசமைப்பின் பிரகாரமே நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். எனவே, சட்டத்தின் பிரகாரம்தான் அரசு செயற்படும்.

முப்படைகளின் தளபதியாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே இருக்கின்றார். அதற்குரிய திறமை, தகுதி சரத் பொன்சேகாவுக்கு இருப்பதாலேயே 2010 இல் அவரை பொதுவேட்பாளராக களமிறக்கினோம். சரத் பொன்சேகா திறமையானவர் என்பது அரச தலைவருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் தெரியும். அத்தியாவசிய சேவைகள் தொடர்பிலேயே அமைச்சரவையில் பேசப்பட்டது" என்றார்.

"நபர்கள் எமக்கு பிரச்சினை இல்லை. இது கொள்கை ரீதியான பிரச்சினை. அரச தலைவரால் அப்படியொரு யோசனை முன்வைக்கப்பட்டதா?" என்று மீண்டும் கேள்வி எழுப்பினார் விஜித ஹேரத்.

"அமைச்சரவையால் அவ்வாறான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. அரசமைப்பின் 49(2) ஆம் சரத்தின் பிரகாரமே சபையில் பதிலளிக்கின்றேன்.

அதற்கு அப்பால் செல்லமுடியாது. அமைச்சரவைக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களை குறிப்பிட முடியாது" என்று ரணில் பதிலளித்தார்

இதையடுத்து சரத் பொன்சேகா தலைமையில் உருவாகும் எனக் கூறப்பட்ட சிறப்புச் செலயணி தொடர்பில் அமைச்சர்கள் வெளியிட்ட கருத்துகளை மையப்படுத்தி விஜித ஹேரத் கேள்விகளை எழுப்பினார்.

இவற்றுக்குப் பதிலளித்த ரணில், "சிறப்பு இராணுவமொன்றை அமைப்பதற்குரிய தேவை இல்லை. ஜனநாயகத்தைப் பலப்படுத்தி நல்லாட்சியை ஏற்படுத்தவே ஆட்சிக்கு வந்தோம். அந்த இலக்கிலிருந்து விலகிச் செல்லவில்லை. அமைச்சர் ராஜித கூறிய விடங்களை அவரிடம்தான் கேட்கவேண்டும்" என்றார் ரணில். (த-4)

# ஆயிரம் லீற்றர் குடிதண்ணீரை 12 ரூபாவுக்கு வழங்கும் அரசு

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்



கொழும்பு, மே 4

கடைகளில் ஒரு லீற்றர் குடிதண்ணீர் 60 ரூபாவுக்கு விற்கப்படும்போது அரசு ஆயிரம் லீற்றரை வெறும் 12 ரூபாவுக்கு வழங்கிவருவதாக நீர் வழங்கல் மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கிறார்.

2 ஆயிரத்து 520 கோடி (25,200 மில்லியன்) ரூபா செலவில் பொத்துஹர, பொல்காவலை மற்றும் அளவ்வ நீர் வழங்கல் திட்டத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த 27ஆம் திகதி பொத்துஹரவில் நடந்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆயிரம் லீற்றர் நீரைச் சுத்திகரித்து மக்களுக்கு வழங்குவதற்குப் பல்வேறு செலவுகள் உள்ளன. நீரைக் கொண்டு செல்ல நிலத்தடி குழாய்கள் அமைக்கப்படவேண்டும். அவை அடிக்கடி வெடிப்பதால் பழுதுபார்க்கும் செலவுகள் உள்ளன.

நீர் முகாமைத்துவத்துக்கு ஏராளமான பொறியியலாளர்களும், தொழில்நுட்பவியலாளர்களும், ஏனைய ஊழியர்களும் தேவைப்படுகின்றனர்.

அவர்களின் சம்பளங்கள் மற்றும் இதர கொடுப்பனவுகளுக்குப் பெருந்தொகைப் பணம் செலவாகின்றது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தத் திட்டத்தின் மூலம் ஐந்து பிரதேச செயலாளர்கள் பிரிவுகளைச் சேர்ந்த 167 கிராமங்கள் பயன்பெறவுள்ளன. மாஓயாவின் நீரைப் பிரதானமாகக் கொண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது.

இந்திய வங்கியினதும், இலங்கை அரசினதும், இலங்கை வங்கியினதும் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ள இந்தத் திட்டம் நிறைவேறிய பின் இந்தப் பிரதேசத்தின் நீர்ப்பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்படும் - என்றார். (த-4)

# மருத்துவர் போராட்டம்; மகிந்த அணியும் ஆதரவு

கொழும்பு, மே 4

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கவுள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு மகிந்த அணியும் ஆதரவு வழங்கியுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மகிந்த அணி நாடாளுமன்ற உறப்பினர்களான மகிந்தானந்த அளுத்கமகே, ரஞ்சித்டி சொய்சா, ரமேஸ் பத்திர ஆகியோர் இந்தத் தகவலை வெளியிட்டனர்.

"மக்களின் கோரிக்கைக்குச் செவிமடுக்காது அரசு எதேச்சாதிகாரமாக பயணிக்கின்றது. தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அரசால்நிறைவேற்றமுடியும். ஆனால், அது கண்டுகொள்வதில்லை. இதனால்தான் போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சைட்டம், இந்தியாவுடனான உடன்படிக்கை உட்பட 4 கோரிக்கைகளை முன்வைத்தே ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. இதற்கு ஆதரவு வழங்குவதற்கு பொது எதிரணியும் (மகிந்த அணி) முடிவு எடுத்துள்ளது.

அரசின் அசமந்தப்போக்காலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு அரசுதான் பொறுப்புக் கூற வேண்டும்" என்று அவர்கள் அவர் மேலும் தெரிவித்தனர். (த-4)

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க மாபெரும் பரப்புரை

## முன்னெடுக்கவுள்ளது ஜே.வி.பி.

யாழ்ப்பாணம், மே 4

நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிக்குமாறு கோரி மாபெரும் பரப்புரைப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மைத்திரிபால சிறிசேன, அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிடும்போது நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிப்பேன் என்று வாக்குறுதி வழங்கியிருந்தார். அவர் அதனை நிறைவேற்றவேண்டும். 19 ஆவது திருத்த சட்டத்தின் ஊடாக, அரச தலைவருக்கான சில அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் நிறைவேற்று அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படவில்லை. இதனை ஒழிக்கக் கோரி, தொடர் பரப்புரைப் போராட்டத்தை நாம் முன்னெடுக்கவுள்ளோம். புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடன் ஏற்கனவே பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது என்றார். (த-5)

# புங்குடுதீவு மாணவி கொலை; 10 பேரின் மறியலும் நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 4

புங்குடுதீவு மாணவி கொலை வழக்குச் சந்தேகநபர்களான 10 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 17ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டு உள்ளது.

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர்கள் பத்து பேரும் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் பத்து பேரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இதேவளை, குறித்த வழக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 10 ஆவது மற்றும் 12 ஆவது சந்தேக நபர்களை போதிய ஆதாரங்கள் இல்லாமையால் வழக்கில் இருந்து விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் பரிந்துரை செய்தது. இதனை அடுத்து அவர்கள் இருவரும் கடந்த 28ஆம் திகதி வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த-37)

# குடாநாட்டுக் கால்நடைகளுக்கு நடமாடும் மருத்துவ சேவைகள்

யாழ்ப்பாணம், மே 4

கால்நடைகளுக்கான நடமாடும் மருத்துவ சேவைகள் யாழ்ப்பாண மாவடத்தில் 4 பிரதேசங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

"கால்நடைகளுக்கான மருத்துவ சேவைகளை மக்கள் குடியிருப்புகளுக்கு நேரில் சென்று வழங்கவுள்ளோம். இந்தச் செயற்பாட்டின் முதற்கட்டமாக எதிர்வரும் 27ஆம் திகதி சாவகச்சேரி எழுதுமட்டுவாள் பகுதியில் இந்த நடமாடும் சேவையை நடத்தவுள்ளோம். இதன் ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொள்வார்.

இதன் தொடர்ச்சியாக தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்படும். இதன்போது கால்நடைகளுக்கான கருத்தடை, சத்திரசிகிச்சை போன்ற பல்வேறு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. மேலும் பறவைகளுக்கான சிறப்பு மருத்துவ சிகிச்சை பிரிவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒரு நடமாடும் சேவையை மட்டும் நடத்துவதற்கான நிதி எமக்கு கிடைத்திருந்தது. அதன்படி கோப்பாய், இடைக்காடுப் பகுதியில் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

ஆனால் இந்த வருடம் 4 நடமாடும் சேவைகளை நடத்துவதற்கான நிதி எமக்கு கிடைத்துள்ளது. அதன்படி கால்நடை அதிகமாக வளர்க்கப்படும் பிரதேசங்களை இனம்கண்டு இந்த 4 நடமாடும் மருத்துவ சேவையை நடத்தவுள்ளோம்" என்று யாழ்ப்பாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(வ-ரி)

# கடல்அட்டை வளர்த்த குற்றச்சாட்டில் சீனக் குடிமகன் அரியாலையில் கைது

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணம், அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டு வந்த சீனநாட்டுக் குடிமகன் ஒருவர் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

"யாழ்ப்பாண நீரியல் வளத் திணைக்களத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அரியாலை கிழக்குப் பகுதிக்கு சென்று கடல் அட்டை வளர்ப்புக்கு பயன்படுத்தப்பட்ட இடத்தை திணைக்களப் பரிசோதகர் குழுவினர் கண்டறிந்தனர். கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சீனக் குடிமகன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சீமெந்தால் அமைக்கப்பட்ட பெரிய அளவிலான தொட்டி ஒன்றில் கடலட்டையை அவர் வளர்த்து வந்தார். அந்தத் தொட்டியில் 150 இற்கும் மேற்பட்ட பெரிய கடலட்டைகளும் பெருமளவிலான கடலட்டைக் குஞ்சுகளும் காணப்பட்டன.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். தொட்டியில் வளர்க்கப்பட்ட கடலட்டைக் குஞ்சுகளும் நீதிமன்ற உத்தரவின்படி உடனடியாக அரியாலை கிழக்கு கடற்பகுதியில் விடுவிக்கப்பட்டன" என்று கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

(வ-17)

# திருச்சபையின் வாலிபர் பாசறை வட்டுக்கோட்டையில் நடந்தது



கிளிநொச்சி, மே 4

தென்னிந்திய திருச்சபையின் வாலிபர் பாசறை நிகழ்வு வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள திருச்சபை அலுவலகத்தில் 3 தினங்கள் இடம்பெற்றது.

தென்னிந்திய திருச்சபையின் வாலிபர் பாசறை கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி திங்கட்கிழமை வரை இடம்பெற்றது. தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி டி.எஸ் தியாகராஜா தலைமையில் சிறப்பு வழிபாடு இடம்பெற்றது. வழிபாட்டில் முறிகண்டி தென்னிந்திய திருச்சபையின் பாடகர் குழுவால் பாடல்கள் இசைக்கப்பட்டதுடன் வாலிபர் பாசறையில் கலந்துகொண்ட வாலிபர்களுக்கு வேதாகம படிப்பு, பாடல்கள் பயிற்றுவிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-6)

# முன்னோடிப் பரீட்சை மே 15இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 4

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் 2017ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் சகலதுறை மாணவர்களுக்கான முன்னோடி மாதிரிப் பரீட்சை கொக்குவில் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 15ஆம் திகதியிலிருந்து ஜூன் 3ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பரீட்சைக்கான நேர அட்டவணை கல்லூரி விளம்பரப்பலகையில் உள்ளது. அனைத்து மாணவர்களையும் பரீட்சைக்குத் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

(வ)

# மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஒரு வார யாகம்

யாழ்ப்பாணம், மே 4

இணுவில் மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி வரை தொடர்ச்சியாக ஒருவார காலம் சுந்தரகாண்ட மங்கல யாகம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

"இலங்கையில் முதன் முறையாக வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சிறப்புக்குரிய யாகம் இதுவாகும். இந்த யாகத்தின் மூலம் ஆன்மிக அனுபவமும் முத்திப்பேறும் கிடைக்கும். இந்த யாகம் ஆஞ்சநேயரின் பராக்கிரமக் கதையாக இருப்பதால் இதில் கலந்து கொள்பவர்களுக்கு சகல கிரக தோச நிவர்த்தி, சிறந்த புத்திக் கூர்மை, நாவன்மை, ஆயுள் ஆரோக்கியம், நீதி, புகழ், வம்சவிருத்தி முதலான உலகியல் பேறுகளும் கிடைக்கும்.

இறுதிநாள் ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் பெருவிழாவும், சிவாச்சாரியப் பெருமக்கள் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளன" என்றும் தெரிவிக்கப்பட்டது.

(வ)

# யாழ்ப்பாணள இளையோருக்கு கோப்பாயில் வள நிலையம்

## இளைஞர் நாடாளுமன்றம் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாண மாவட்ட இளையோர் வள நிலையம் கோப்பாய் பிரதேசத்தில் அமைக்கப்படும் என்று இளைஞர் நாடாளுமன்றின் இரண்டாவது அமர்வில் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று வட்டுக்கோட்டை பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் இன்பராஜ் தெரிவித்தார்.

"தேசிய இளைஞர் நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் எரந்த வெலியங்கே தலைமையில் மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் நாடாளுமன்ற சபையரங்கில் கடந்த 27, 28ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதன்போதே இந்த முடிவெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இளையோரின் உடல், உள, சமூக மற்றும் தொழில் சார்ந்த துறைகளை விருத்தி செய்வதற்காக யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் இளையோர் வள நிலையம் நிறுவப்படும். அதற்கான கட்டடத்தொகுதி புதிதாக அமைக்கப்படும். அதன் ஊடாக இளைஞர்களுக்கான பல்வேறு முன்னேற்றகரமான செயற்பாடுகள் முன்னெக்கப்படவுள்ளன.

மேலும் ஒவ்வொரு பிரதேச செயலகமும் அரச காணியொன்றை கொடுக்கும் பட்சத்தில் அந்தப் பிரதேசத்துக்கான இளைஞர் கழக சம்மேளன நிறுவப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது" என்று அவர் மேலும் தெரிவித்தார். இளைஞர் நாடாளுமன்றில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 11 உறுப்பினர்கள் உட்பட 225 உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த இரண்டாவது அமர்வில், முதன்மை விருந்தினராக நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ச கலந்துகொண்டார்.

(வ-ரி)

# சமூகத்துக்குத் தேவையான செய்திகளை துணிவோடு முன்வைப்பவனே கவிஞன்

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் லலீசன் தெரிவிப்பு

அச்சுவேலி, மே 4

காலத்தின் தேவை அறிந்து மக்களுக்கும் சமூகத்துக்குமான செய்திகளைத் துணிவுடன் முன்வைப்பவனே மக்கள் கவிஞனாகப் போற்றப்படுவான். தமிழ்க் கவிதை இரண்டாயிரம் வருடகாலப் பழைமையைக் கொண்டதாக இருக்கும் நிலையில் காலத்தின் தேவையுணர்ந்து கவிதை படைத்தவர்களையே காலம் தேர்வு செய்து இன்று நினைவு கூர்கின்றது .

இவ்வாறு தெரிவித்தார் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் லலீசன்.

அண்மையில் அமரத்துவமடைந்த கவிஞர் கலாபூசணம் புத்தூர் வே. இளைய குட்டியின் கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பாக இளையகுட்டி கவிதைகள் என்ற நூல் வெளியிடப்பட்டது. அதன் வெளியீட்டு விழா ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஒரு கவிதை எப்படி அமைய வேண்டும் என வரைவிலக்கணப்படுத்துவது கடினம். ஆயினும் யாப்பறி புலவர்கள் அதற்கு வரையறைகளையும்,

இலட்சணங்களையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர். புவியில் உள்ள மக்களுக்கு அணிகலனாகவும் உறுதியான பொருள்களைப் பேசுவதாகவும் புலமைக்குரியதாகவும் அகத்துறைகள் பற்றிப் பாடுவதாகவும் திணை ஒழுக்கங்களைப் பேசுவதாகவும் சான்றோர் கவிதை அமைய வேண்டும் என்று கம்பர் குறிப்பிடுகின்றார்.

பாரதியாருடைய வருகையோடு யாப்பு மரபில் ஒரு மாற்றம் ஏற்பட்டு நவீன கவிதைக்குரிய அடித்தளம் இடப்பட்டது. மொழிகளின் அரசியாகக்கொள்ளப்படும் கவிதை வடிவத்தில் மரபுசார் கவிதை வடிவங்களையும், நவீன கவிதை வடிவத்தையும், சமதையாக ஆளக்கூடிய திறமை பெற்றவராகப் பாரதியார் எம் கண்முன் விரிகின்றார். அவருடைய வழியில் எங்கள் மண்ணில் மரபு மற்றும் நவீனம் என இரண்டு துறைகளிலும் ஆளுமை பெற்ற கவிஞர்களாகச் சிலரையே அடையாளப்படுத்த முடியும் அவர்களுள் ஒருவராகப் புத்தூர் வே. இளைய குட்டியைக் குறிப்பிடலாம்.

கவிஞன் ஒரு ஊடகவியலாளன் முற்காலத்தில் அரசனுடைய வெற்றியை மக்களிடம் கொண்டு சென்றவன் அவன் அரசன் எவ்வாறு ஆட்சியை நடத்த வேண்டும் என மக்களின் சார்பாக நின்று குரல் எழுப்பியவன் அவன் தமிழர் வாழ்வியலை - வரலாற்றை இன்றைக்கு நாம் அறிந்து கொள்வதற்கு ஊடகக்காரனாக நின்று பதிவு மேற்கொண்ட கவிஞருடைய பங்களிப்பே பிரதான காரணமாக அமைந்துள்ளது.

போர் இந்த மண்ணில் முழு வீச்சாக இடம்பெற்ற வேளையில் தான் கவிஞர் இளைய குட்டியும் கவிதைகளைப் படைத்தார் மக்கள் குரலாக அவரது கவிதைகள் ஒலித்தன. இராணுவத்தின் தொல்லைகளை இளையோர் எதிர்கொண்டமையை வெளிக்கொணரும் விதமாக அவரது" தலையே நீ நரையாய்" என்ற கவிதையும்.

ஆசிரியர்களுக்கு தொழில் மீதான நேசிப்பை வலியுறுத்தும் விதமாக "புதிய வாத்தியாருக்கு பழைய வாத்தியார்கூறுவது" என்ற எள்ளல் நடையில் அமைந்த உபதேசக் கவிதையைக் கொள்ளலாம்.

இளைய குட்டியின் எழுச்சியில் உதயன், சஞ்சீவி பத்திரிகைகளுக்கு தனியான இடம் உண்டு அவரது பெரும்பாலான கவிதைகளை தமிழுக்கு சேர்த்த பணியை உதயன், சஞ்சீவி பத்திரிகையே மேற்கொண்டிருக்கின்றது. உதயன் பத்திரிகையின் வெள்ளிவிழாவை முன்னிட்டு நடைபெற்ற கவிதைப் போட்டியில் அவரின் கவிதை முதலாம் பரிசை பெற்றது.

காலத்தின் தேவை அறிந்து மக்களுக்கும் சமூகத்துக்குமான செய்திகளைத் துணிவுடன் முன்வைப்பவர்களே மக்கள் கவிஞர்களாகப் போற்றப்படுகின்றனர் - என்றார்.

(ற - 11)

## மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மைத்திரியிடம்

கொழும்பு, மே 4
இலங்கை மத்திய வங்கியின் 2016 ஆண்டு அறிக்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியினால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முற்பகல் கையளிக்கப்பட்டது.
அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து இந்த அறிக்கை கையளிக்கப்பட்டது.
இதில் மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கலாநிதி பீ.என். வீரசிங்க, உதவி ஆளுநர் கே.எம்.எம். சிறிவர்தன, மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர் கலாநிதி வை.இந்துரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-4)

## இலங்கை விசா முறையில் விரைவில் மாற்றம் வரும்

கொழும்பு, மே 4
இலங்கை நுழைவிசைவு வழங்கும் முறையில் சில மாற்றங்களைக் கொண்டு வரக் குடிவரவுகுடியகல்வுத் திணைக்களம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
நாட்டின் தற்போதைய சுமுகமான நிலையால் சுற்றுலாப் பயணிகள் மற்றும் முதலீட்டாளர்களின் வருகை அதிகரித்துள்ளது. அவர்களின் நலனுக்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (த-4)

## சு.க. அமைச்சர்கள் ஐவர் ஓகஸ்டில் மகிந்த பக்கம்

*ரஞ்சித் சொய்சா எம்.பி. திட்டவட்டம்*



கொழும்பு, மே 4
ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து நடத்தும் இந்தக் கூட்டு அரசு எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும்போது அந்த அரசிலுள்ள ஐந்து சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் பொது எதிரணியுடன் இணைந்துகொள்வது நிச்சயமெனப் பொது எதிரணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானரஞ்சித்சொய்சா தெரிவித்திருக்கிறார்.
இந்த ஐந்து அமைச்சர்களும் தற்சமயம் பொது எதிரணியுடன் கலந்துரையாடி வருவதாகவும், எதிர்வரும் ஓகஸ்ட் 21ஆம் திகதி அந்த மாற்றம் நிச்சயம் நிகழும் எனவும் அவர் கூறினார்.
கூட்டு அரசு கைச்சாத்திட்டுள்ள இரண்டு வருடப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் நீடிப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு இவர்கள் ஐவரும் தமது கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்துவருவதாகவும் ரஞ்சித் சொய்சா குறிப்பிட்டார். (த-4)

## வெளிநாட்டுப் பணம் கடத்தியவர் கைது

வெளிநாட்டுப் பணத்தைச் சிங்கப்பூர் கொண்டு செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் கண்டி அக்குறணைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் வானூர்தி நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். 1 கோடி 39 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணத்தைச் சிங்கப்பூர் கொண்டு செல்ல முற்பட்டவேளையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-4)

## இலங்கையில் உள்ளன 68 லட்சம் வாகனங்கள்

*மோ. சைக்கிள் மட்டும் 37 இலட்சமாம்*

கொழும்பு, மே 4
இலங்கையில் மொத்தமாக 68 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 37 இலட்சம் மோட்டார் சைக்கிள்கள் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
திணைக்களத்தின் பதிவேடுகளின் பிரகாரம் கடந்த பெப்ரவரி மாதம் வரை 68 இலட்சத்து 69 ஆயிரத்து 379 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 37 இலட்சத்து 54 ஆயிரத்து 835 மோட்டார் சைக்கிள்கள் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.
மொத்த வாகனங்களில் ஓட்டோக்களின் எண்ணிக்கை 11 இலட்சத்து 20 ஆயிரத்து 589. இலங்கையில் வாகனப் பதிவுகள் ஆரம்பமாகி 80 ஆண்டுகள் நிறைவடைந்திருப்பதாகவும் அவர் கூறினார். (த-4)

## புலிகளின் துப்பாக்கியை மறைத்து வைத்திருந்த முன்னாள் சிப்பாய் கைது

யாழ்ப்பாணம், மே 4
தமிழீழ விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை மறைமுகமாக வைத்துப் பயன்படுத்தி வந்த குற்றச்சாட்டில் ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கொழும்பு மட்டக்குளி மோதர பிரதேசத்தில் வைத்துக் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்.
இவருடன் கடந்த 2016 ஆம் ஆண்டு அரலகங்வில பிரதேசத்தில் வைத்துத் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் சந்தேக நபர் ஒருவரையும் குற்றப்புலனாய்வுப் பிரிவு கைது செய்துள்ளது.
இவ்வாறு கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாயிடம் நடத்திய விசாரணையில், குறித்த துப்பாக்கி களுத்துறை பயாகல பிரதேசத்தில் இராணுவத்திலிருந்து சட்ட ரீதியாக விலகிய சிப்பாய் ஒருவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என்பது தெரிய வந்துள்ளது.
எனினும் அந்தத் துப்பாக்கியில் எழுத்துக்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டுள்ளதாகவும், சந்தேக நபரிடம் இருந்து மேலும் இரண்டு ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.
கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (த-4)

## கடலில் விழுந்த கடற்படை அதிகாரியை காணவில்லை

யாழ்ப்பாணம், மே 4
மன்னார் கடற்பரப்பில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படை அதிகாரி ஒருவர் கடலில் தவறிவீழ்ந்த நிலையில் காணாமல் போயுள்ளார் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.
லெப்ரினன்ட் விஜயசிங்க என்னும் அதிகாரியே இதன்போது காணாமற்போயுள்ளார்.
குறித்த அதிகாரி கடந்த சனிக்கிழமை நடவடிக்கையின்போது கடலில் காணாமற்போயுள்ள நிலையில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அவரைத் தேடும் பணி தொடர்வதாகக் கடற்படையினர் கூறினர். (த-101)

## வடக்கு மாகாண சபை உறுப்பினர்

# அஸ்மினின் பதவியை பறிப்பதற்கு தீர்மானம்



யாழ்ப்பாணம், மே 4
வடக்கு மாகாண சபை உறுப்பினரான அய்யூப் அஸ்மினைப் பதவி விலக்கி அந்த இடத்துக்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேறொருவரை நியமிக்கநல்லாட்சிக்கானதேசியமுன்னணியின் தலைமைத்துவ சபை தீர்மானித்துள்ளது.
இவ்வாறு குறித்த முன்னணி மின்னஞ்சலில் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.
நல்லாட்சிக்கான தேசி ய முன்னணியின் தலைமைத்துவ சபை சார்பாக, தவிசாளர், பொதுச் செயலாளர்என்றுபதவிநிலைகுறிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,
2013 செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.
அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைக்கும் போனஸ் ஆசனங்களில் ஒன்றை, நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கு வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டது. அந்த இணக்கத்திற்கமைய நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் முன்மொழிவின் அடிப்படையில், அய்யூப் அஸ்மின் மாகாண சபை உறுப்பினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நியம்னம் செய்யப்பட்டார்.
முன்னணியின் அங்கத்தவராக நியமிக்கப்படுபவர் கூட்டமைப்பின் அங்கத்தவராக அல்லாது, முன்னணியின் கொள்கைகளுக்கும் தலைமைத்துவச் சபையின் வழிகாட்டல்களுக்கும் அமையவே செயற்படுவார் எனவும் அதன்போது உடன்பாடு காணப்பட்டது.
வடக்கு மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து, இந்தப் பதவியை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துடன் கொழும்பில் விரிவான கலந்துரையாடலொன்றும் நடத்தப்பட்டது.
அந்தக் கலந்துரையாடலின்போது, பதவிகள் குறித்த முன்னணியின் கொள்கைகள், முன்னணியின் பிரதிநிதி கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய செயற்பாட்டு ஒழுக்க விழுமியங்கள் குறித்து விளக்கப்பட்டது. அவசியம் ஏற்படும் பட்சத்தில், குறித்த பதவியிலிருந்து இரண்டரை வருடங்களின் பின்னர், முன்னணியினது உறுப்பினரை மீளழைப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் முன்னணி தெரிவித்திருத்தது.
கிடைக்கும் பதவிகளை எவரும் நிரந்தரமாக்கிக் கொள்வது அல்லது சொந்தமாக்கிக் கொள்வது அனுமதிக்கப்பட முடியாதது என்பது முன்னணியின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று. இதற்கிணங்க மக்கள் பிரதிநிதிகளை 'மீளழைத்தல்' என்ற நடைமுறை முன்னணியினால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.
முன்னணியின் கொள்கை நடைமுறைகளை உத்தரவாதப்படுத்துவதற்கான 19 அம்ச ஒழுக்கக் கோவையை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலும், 'மீளழைக்கும் தீர்மானங்களுக்கு எவ்வித இழுத்தடிப்புகளுமின்றி முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன்' என்று வழங்கப்பட்ட சத்திய வாக்குறுதியைப் பகிரங்கமாக வழங்கியதன் அடிப்படையிலுமே, அய்யூப் அஸ்மின் இந்தப்பதவிக்கு முன்னணியினால் நியமிக்கப்பட்டார்.
அஸ்மின் வடக்கு மாகாண மக்களுக்கு முன்னணி வழங்கிய பதவி மூலமாக ஆற்றிய பணிகளுக்கும் சேவைகளுக்கும் முன்னணி மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.
வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று சுமார் இரண்டரை வருடங்கள் கடந்த நிலையில், வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் குறித்த முன்னணியினது அவதானங்கள், அப்போதைய சூழ்நிலைகள் மற்றும் முன்னணி உறுப்பினரின் நடவடிக்கைகள் மீதான எமது பார்வை என்பவற்றின் அடிப்படையில், முன்னணி பிரதிநிதியை மீளழைக்கவேண்டுமென்ற தீர்மானத்தை அய்யூப் அஸ்மினின் பங்கேற்புடன் கூடிய தலைமைத்துவச் சபை அமர்வில், ஒரு இரகசிய வாக்கெடுப்பின் மூலம் 2016 மார்ச் மாதம் 2 ஆம் திகதி முன்னணி நிறைவேற்றியது.

> *நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் முன்மொழிவின் அடிப்படையில், அய்யூப் அஸ்மின் மாகாண சபை உறுப்பினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நியமனம் செய்யப்பட்டார்.*

இந்தத் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்த வேண்டி இருந்ததாலும், அப்போது உடனடியாக மாற்றீடாக அந்தப் பதவிக்கு ஒருவரை நியமிப்பதில் இருந்த குறிப்பான சில சட்டச் சிக்கல்கள் காரணமாகவும், இந்தத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டது.
அஸ்மினை மீளழைப்பதற்காக முன்னணி ஏற்கனவே மேற்கொண்ட தீர்மானத்தின் காரணமாக அமைந்த நியாயங்கள் தொடர்ந்தும் உறுதி செய்யப்பட்டிருப்பதனாலும், அந்த இடத்திற்கு இன்னுமொரு முஸ்லிம் பிரதிநிதியை நியமிப்பதற்குச் சட்ட ரீதியாக தற்போது சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதனாலும், இந்தத் தீர்மானத்தை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்க வேண்டுமென முன்னணியின் தலைமைத்துவச் சபை தற்போது தீர்மானித்துள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இது தொடர்பாக முன்னணி தொடர்ச்சியான பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருக்கிறது. இதற்கான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேச்சுக்களின்போது முன்னணியிடம் உறுதியளித்திருந்தது.
கடந்த ஜனவரி 13ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுடனும், நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுடனும் நடத்திய பேச்சில் இவ்விடயம் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.
அந்தச் சந்திப்பின் போது "உங்களது கட்சிக்கும் எமது கட்சிக்கும் இடையில்தான் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதனடிப்படையில், உங்களால் பிரேரிக்கப்பட்டதன் காரணமாகவே அய்யூப் அஸ்மினை மாகாண சபை உறுப்பனராக நாம் நியமித்தோம். அவரை மீளழைக்க வேண்டும் என்று உங்கள் கட்சி தீர்மானித்தால், அதனை மதித்துநிறைவேற்றவேண்டியது எமது பொறுப்பு" என்று முன்னணியின் பிரதிநிதிகளிடம் இரா. சம்பந்தன் கூறியிருந்தார்.
கடந்த 7ஆம் திகதி இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர், கிழக்கு மாகாண சபை விவசாய அமைச்சர் கே.துரைராசசிங்கத்துடன் இது குறித்து கலந்துரையாடப்பட்டது. அவரும் இது தமது கட்சியால் முன்னணிக்கு வழங்கப்பட்ட பதவி என்று அடிப்படையில் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த தமது கட்சி ஒத்துழைப்பதாகவும், மாற்றீடாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி பிரேரிக்கும் ஒருவரை நியமிக்க தாம் தயாராக உள்ளதாகவும் உறுதியளித்திருந்தார். இந்த உத்தரவாதம் தமது கட்சியினது உத்தியோகபூர்வ நிலைப்பாடு.
அந்த அடிப்படையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினை மீளழைத்து, அவ்விடத்திற்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த புதிய அங்கத்தவர் ஒருவரை நியமிக்க நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறதுஎன்றுள்ளது.
இது குறித்து மாகாண சபை உறுப்பின் அஸ்மின் மற்றும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோரிடம் தொடர்பு கொண்டபோது இந்த விடயம் தொடர்பில் எதுவித தகவலும் தங்களுக்குக் கூறப்படவில்லை என்று தெரிவித்தனர். (த-48)

# 70 நாள்களைத் தொட்டது உறவுகளைத் தேடும் போராட்டம்

வவுனியா, மே 4

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுதலையை யும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டங்களை நடத்துகின்றனர். வவுனியாவில் அவர்களால் நடத்தப்படும் போராட்டம் இன் றுடன் 70 நாள்களைத் தொடுகின்றது. கிளிநொச்சியில் நடத்தப்படும் போராட்டம் ஏற்கனவே 70 நாள்களைக் கடந்து தொடர்கின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், அரசியல் கைதிகள், இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் ஆகியோரின் விடுதலை மற்றும் தெளிவான வெளிப்படுத்தலை வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் 73 ஆவது நாளாகவும், வவுனியாவில் 69 ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 58 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 51ஆவது நாளாகவும், திருகோணமலையில் 61ஆவது நாளாகவும் போராட்டங்கள் தொடர்கின்றன. (ந-21)

## சட்டவிரோத...

யங்களை அழித்துப் புவிச் சரிதவியல் சுரங்கங்கள் பணியகத்துக்கு தெரியாமலும், சுற்றுச் சூழல் மத்திய நிலையகத்துக்கு ஆரம்பச் சூழல் பரிசோதனை மதிப்பீட்டு அறிக்கை மற்றும் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை போன்ற அனுமதிகள் எதுவும் பெறப்படாமலும், மாதத்திற்கு சுமார் 2 ஆயிரத்து 500 கியூப்புகளுக்கும் அதிகமான மணல் சட்டவிரோதமான முறையில் அகழப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் நாடாளுமன்றில் உரையாற்றியதாகத் தெரிவிக்கப்பட்டு ஈ.பி.டி.பி.யினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள ஜே/425 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடாரப்பு வடக்குக் கிராமத்தை மையமாகக் கொண்டு, அந்த மக்களது பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மணல் அகழ்வு நடவடிக்கைகள் சட்டத்துக்கு புறம்பான வகையில் முன்னெடுக்கப்படுகின்றது. அந்தப் பகுதி மக்களும் பெரிய பாதிப்புகளுக்கு உட்பட்டு வருகின்றனர் என்றும் அந்தப் பகுதி மக்களால் தொடர்ந்து முறையிடப்பட்டு வருகின்றது.

சட்டத்துக்குப் புறம்பான விதிமுறைகளை வகுத்து மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்குவோர் தங்களுக்கு நெருக்கமான ஒரு சில ஒப்பந்தக்காரர்களுக்கு மாத்திரம் மேற்படி அனுமதிகளை வழங்குவதாகவும், இதன் ஊடாக மணலுக்கு யாழ்ப்பாணத்தில் செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு, அதனது விலையை அதிகரித்தும், அளவுகளில் குறைபாடுகளைக் கொண்டும் அதிக இலாப மீட்டி வருவதாகவும் தெரிய வருகின்றது.

தற்போதைய நிலையில், யாழ்ப்பாணத்தில் மணலுக்கான அனுமதிப் பத்திரம் ஒன்று சுமார் 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும், இதனைப் பெறுகின்றவர்களால், மணல் அகழ்வுகளுக்குச் சட்டரீதியாக அனுமதி வழங்கப்படாத, இயற்கைக்குப் பெரிய அழிவுகளைக் கொண்டுவரக்கூடிய இடங்களில் எல்லாம் மணல் அகழப்படுவதாகவும், இரவுவேளைகளில் பயனாளிகளுக்கு மணல் ஏற்றி இறக்கப்படுவதால், அவற்றின் தரம் மிகவும் குறைந்து, களி மண் மற்றும் களி மண் கட்டிகள் மணலில் அடங்கியுள்ளதாகவும், இதனைக் கொண்டு கட்டடங்கள் அமைக்கப்படும் நிலையில் அவை மிகவும் தரமற்ற கட்டடங்களாகவே காணப்படுவதாகவும், தற்போதைக்கு அங்கு மூன்று கியூப் மணலின் விலை 45 ஆயிரம் ரூபா முதல் 55 ஆயிரம் ரூபா வரையிலான விலைகளுக்கு விற்கப்படுவதாகவும், ஒரு டிராக்டர் மணல் 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் தெரிய வருகிறது. இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் மணலுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டு, பல கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் இதனால் பல தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிய வருகிறது.

மனல் அகழ்வு தொடர்பில் உரிய பொறிமுறை வகுத்து, பயனாளிகள் நியாய விலையிலும், இலகுவாகவும், தரமானதாகவும் அதனைப் பெறக்கூடிய ஒரு நிலைப்பாட்டை புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியகத்தின் நேரடிக் கண்காணிப்பாளர்களின் கீழ் கொண்டு வருவதற்கும், இதுவரையில் மேற்படி பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள காடழிப்பு உட்பட்ட சட்டவிரோத சூழல் பாதிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள அந்தப் பகுதியில் மீள்நடல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும், மேற்படி மணல் அகழ்வு காரணமாக யாழ்ப்பாணத்தில் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளை தடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார் என்றுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த ஆட்சியில் அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். அப்போது, அவரது தாயாரின் பெயரில் உருவாக்கப்பட்ட மகேஸ்வரி நிதியம் யாழ்ப்பாணத்தில் மணல் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## இடைக்கால...

நடத்துவதற்கு நேற்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அதிகாரப் பகிர்வு, தேர்தல் முறைமை, நிறைவேற்று அதிகாரம் ஒழிப்பு ஆகிய விடயங்களே இந்த இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்படவுள்ளன.

வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று 57 ஆவது தடவையாகவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுக் கூடியது.

வழிநடத்தல் குழுவின் கடந்த மாதக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை, வழிநடத்தல் குழுவில் நேற்று விநியோகிக் கப்பட்டது. இந்த அறிக்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்தது.

வழிநடத்தல் குழுவில் இடம்பெற்றுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதியான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயத்துடன், தேர்தல் முறைமை, நிறைவேற்று அதிகாரம் ஆகிய விடயங்களையும் இடைக்கால அறிக்கையில் உள்ளீர்க்குமாறு நேற்றைய கூட்டத்தில் கோரியுள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் உருவாக்கப்பட்டிருந்த இடைக்கால அறிக்கையில், மேற்படி விடயங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. இன்றைய அமர்வில், அந்த அறிக்கையும் வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

அதிகாரப் பகிர்வு, தேர்தல் முறைமை, நிறைவேற்று அதிகாரம் ஒழிப்பு ஆகிய மூன்று விடயங்களையும் உள்ளடக்கிய இடைக்கால அறிக்கை தொடர்பில், வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்கள் தமது கட்சிகளுடன் ஆலோசனை நடத்தி எதிர்வரும் 23 ஆம் திகதி முடிவுகளைத் தெரிவிக்க வேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

23 ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் மதியத்திலும், 25 ஆம் திகதி காலையும், மதியமும், 26 ஆம் திகதி காலையுமாக நான்கு நாள்களில் 5 அமர்வுகளை நடத்தி, இடைக்கால அறிக்கையை இறுதி செய்வது என்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (த-5)

## புதிய...

பெரேரா, கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி ஓய்வு பெற்றிருந்த நிலையில் அவர் தற்போது பொறுப்பேற்றுள்ளார்.

இதையடுத்தே, கஜபா படைப்பிரிவின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கடந்த ஏப்ரல் 27ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டார். அனுராதபுர சாலியபுரவில் உள்ள கஜபா படைப் பிரிவு தலைமையகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கஜபா படைப்பிரிவின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளில் ஒருவராகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்.

இவருக்கு இலங்கை இராணுவத் தலைமையகத்தில், இராணுவத் தளபதியின் பொது உதவி அதிகாரியாக அண்மையில் நியமனம் வழங்கப்பட்டபோது, அனைத்துலக மனித உரிமை அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் கடும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே கஜபா படைப்பிரிவின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

## கீதா...

மன்ற உறுப்பினராக இருக்கும் தகுதியை இழந்துள்ளார் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. இதனால் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின் 19 ஆவது திருத்தத்துக்கு அமைய, இரட்டைக் குடியுரிமை பெற்ற ஒருவர் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகிக்க முடியாது. எனவே, கீதா குமாரசிங்க நாடாளுமன்ற உறுப்பினராகத் தகுதியற்றவர் என்று அறிவிக்கக் கோரி நான்கு பேர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுச் செய்திருந்தனர்.

கீதா குமாரசிங்க சுவிற்சர்லாந்தில் இன்னமும் குடியுரிமையை வைத்திருப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தெரிவித்திருந்தார். அரசமைப்பின் 91(1) பிரிவின் கீழ் கீதா குமாரசிங்க நாடாளுமன்றச் சிறப்புரிமைகளைப் பெறுவதற்கோ, நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகிப்பதற்கோ தகுதியற்றவர் என்று பிரதி சொலிசிற்றர் ஜெனரல் ஜனக் டி சில்வா நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே கீதா குமாரசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக தகுதியற்றவர் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் காலி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கீதா குமாரசிங்க, மகிந்த ராஜபக்சவின் தீவிர ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

## வடக்கில்...

விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் தொல்பொருள் திணைக்களத்துக்குரிய விகாரைகள் 131 உள்ளன. அதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 6 விகாரைகளும், வவுனியா மாவட்டத்தில் 35 விகாரைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 67 விகாரைகளும், மன்னார் மாவட்டத்தில் 20 விகாரைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 03 விகாரைகளும் அமைந்துள்ளன.

இதற்கு மேலதிகமாக உறுதி செய்யப்படாத 218 தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் வடக்கு மாகாணத்தால் இனங்காணப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் விகாரைகளின் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் 61 விகாரைகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் 9 விகாரைகளும், வவுனியாவில் 29 விகாரைகளும், முல்லைத்தீவில் 13 விகாரைகளும், மன்னாரில் 9 விகாரைகளும், கிளிநொச்சியில் ஒரு விகாரையும் மாத்திரமே அவ்வாறு பதிவுசெய்யப்பட்டுள்ளன - என்றார். (த-4)

## மயிலிட்டி...

இன்றைய தினமும் வெடிபொருள் மீட்புப் பணி தொடரும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியமர்வுக்காக வீட்டுக் கிணற்றைத் துப்புரவு செய்தபோதே, இந்த வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 3 ஆயிரம் துப்பாக்கி ரவைகள், 15 கைக்குண்டுகள், அடையாளம் காணப்படாத குண்டுகள் 20 என்பன நேற்று மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கிணற்றினுள் இன்னமும் வெடிபொருள்கள் காணப்படும் நிலையில், அவற்றை மீட்கும் பணி இன்று தொடரும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-5-12-26)

## மேலும் சிலரின்...

கட்சி அறிவித்துள்ளது.

கொழும்பு டார்லி வீதியில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் தயாசிறி ஜயசேகர இவ்வாறு தெரிவித்தார்.

"கீதா குமாரசிங்க நாடாளுமன்றில் அங்கம் வகிக்கத் தகுதியற்றவர் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கீதா குமாரசிங்கவைப் போன்று நாடாளுமன்றில் பலர் உள்ளனர். அவர்களுக்கும் இந்நிலையே விரைவில் ஏற்படும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

## 17 மோட்டார்...

உருத்திரபுரம் பூநகரி வீதியில் நீவில் பகுதியிலுள்ள குளத்துக்கு அருகில் கிணறு ஒன்று காணப்படுகிறது. அந்தக் கிணற்றைக் கனரக இயந்திரம் மூலமாக மண் போட்டு மூடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே மோட்டார் குண்டுகள் வெளிவந்தன என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த மோட்டார் குண்டுகளை மீட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4-35)

## வெயிலால்...

இயக்குனர், மருத்துவர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த நோய் நிலைகள் தொடர்பில் தெளிவுப்படுத்திய அவர், அதிக வெப்பம் காரணமாக தலைவலி, தலைச்சுற்று, களைப்பு போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படும்.

சுத்தமான உடை பயன்படுத்தல், தகுதியான கண்ணாடிகளை பயன்படுத்தல், நீரை அடிக்கடி பருகுதல் ஆகியன அந்த நிலைகளை தவிர்த்துக்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் என மருத்துவர் அனில் ஜயசிங்க மேலும் கூறினார். (த-4)

## தமிழகத்திலிருந்து...

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட பல முயற்சிகளுக்கும் பல முட்டுக்கட்டைகள்தான் ஏற்பட்டன. எங்களிடமும் கணித, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் இல்லை. இதற்கு ஒரு தீர்வாக இந்தியாவின் தமிழ்நாட்டில் இருந்து ஆசிரியர்களைக் கொண்டு வருவதற்குத் தற்பொழுது இந்தியத் தூதரகம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது மலையகத்தில் 25 கணித, விஞ்ஞானப் பாடசாலைகளையும் 35 பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எங்களுக்கு வளங்களைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

குறிப்பாகப் பாடசாலைகளின் கட்டட வசதி, மலசலகூட வசதிகள், நீர் வசதிகள், ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் போன்ற விடயங்களைப் பூர்த்தி செய்ய முடியும். ஆனால் கணித, விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நாம் பல முயற்சிகளை மேற்கொண்டபோதும் நாம் எதுவும் நிறைவு செய்ய முடியவில்லை.

வடக்குகிழக்கில் இருந்து ஆசிரியர்களைக் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டபோதும் அது முடியாமல் போய்விட்டது. ஓய்வுபெற்ற ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடு செய்தபோது அதுவும் முடியாமல் போய்விட்டது. எனவேதான் இறுதியாக இந்தியத் தூதரகத்துடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினேன். என்னுடைய கோரிக்கையை அதாவது இந்தியாவின் தமிழ்நாட்டில் இருந்து கணித, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களைப் பெற்றுத் தர வேண்டும் என்று அவர்களிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அதனைச் செய்ய முடியும் என்று தூதரகத்தினர் என்னிடம் கூறினார்கள்.

இந்த விடயம் தொடர்பாக முறையாக மனு ஒன்றைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டார்கள். நாம் இந்த மனுவைத் தயாரித்து வருகின்றோம். மிக விரைவில் அதனை இந்தியத் தூதரிடம் கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

தமிழகத்திலிருந்து ஆசிரியர்களை பெற்றாவது இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும். நாம் இதனை பேசிக் கொண்டு இருப்பதால் எந்தவிதமான பயனும் இல்லை. இந்திய ஆசிரியர்களின் வருகையின் மூலமாக எமது 25 பாடசாலைகளையும் அபிவிருத்திசெய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறேன் என்றார். (த-4)

# தானிய பயிர்ச் செய்கைகள் வறட்சியால் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 4
வடக்கு மாகாணத்தில் தானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்களில் 8 ஆயிரத்து 826 விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர் என வடக்கு மாகாண விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாணத்தில் சோளம், நிலக்கடலை, கௌப்பி, உழுந்து, பயறு போன்ற தானியப் பயிர்ச் செய்கைகள் 16 ஆயிரத்து 404 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டன. அண்மைக்காலமாக காணப்பட்ட வறட்சியான கால நிலை காரணமாக பயிர்ச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளன.




நிலக்கடலைப் பயிர்ச் செய்கையாளர்களே அதிகம் பாதிப்படைந்துள்ளனர். நிலக்கட லைச் செய்கை 3 ஆயிரத்து 372 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட போதும் ஆயிரத்து 806 ஹெக்ரெயர்நிலப்பரப்பிலேயே முழுமையான விளைச்சல் பெறப்பட்டுள்ளது. 3 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

கௌப்பி, உழுந்து, பயறு, சோளம் போன்ற பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளும்பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.பாதிப்படைந்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக இழப்பீடுகள் வழங்கப்படக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற - 8)

# 160 நெல் முடைகள் 7 நாள்களில் ‘அபேஸ்’

## இருவர் சந்தேகத்தில் கைது

வவுனியா, மே 4
வவுனியாவில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் 7 நாள்களில் 160 நெல் மூடைகள் திருடப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. அரிசி ஆலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் உட்பட இருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இலுப்பைக்குளம் பகுதியிலுள்ள அரிசி ஆலை ஒன்றில் கடந்த மாதம் 23 ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதிக்குட்பட்ட காலப்பகுதியில் 160 நெல் மூட்டைகளும், 6 குறுணல் மூட்டைகளும் திருட்டுப் போயுள்ளன. அரிசி ஆலை உரிமையாளர் நேற்று முன்தினம் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அரிசி ஆலையில் கடமையாற்றிய பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணைகளின்போது திருடப்பட்டன என்று சந்தேகிக்கப்பட்டும் நெல் மூட்டைகள் சில மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டவர்களை வவுனியா மாவட்ட நீதவான் மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற - 21)

# இயந்திரம் மூலம் கரைவலை வளைக்க ஐவருக்கு அனுமதி

முல்லைத்தீவு, மே 4
முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைவலைத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் இயந்திரத்தின் உதவியுடன் கரைவலை வளைப்பதற்கு பரீட்சார்த்த அடிப்படையில் ஐந்து பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பலர் கரைவலைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இயந்திரத்தின் உதவியுடன் கரைவலை வளைப்பதற்கு அனுமதிகள் மறுக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்தமாக ஐந்து பேருக்குத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. பரீட்சிக்கப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் அனுமதி வழங்குவது தொடர்பாக முடிவெடுக்கப்படும் என்று திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ற -7)

# இரணைதீவை விடுவிக்கக் கோரி உணவு ஒறுப்புத் தொடர்கின்றது



கிளிநொச்சி, மே 4
தமது பூர்வீக இடமான இரணைதீவை விடுவிக்க வேண்டும் என்றும், அங்கு தங்கி நின்று தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இரணைமாதா நகரில் ஆரம்பிக்கப்பட்ட உணவு ஒறுப்புப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது.

1992ஆம் ஆண்டு இரணைதீவில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் முழங்காவில், இரணைமாதா நகரில் குடியேற்றப்பட்டனர். இரணைதீவு கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

2009ஆம் ஆண்டு முதல் தமது பூர்வீக இடமான இரணைதீவை விடுவிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். பூநகரி பிரதேச செயலகம், கிளிநொச்சி மாவட்ட செயலகம் என்பற்றில் நடைபெற்ற கூட்டங்களிலும் அவர்கள் இது தொடர்பாகப் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஒருங்கிணைப்புக் கூட்டமொன்றில் இணைத் தலைவர்கள் இரணைதீவுக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. எனினும் அதற்குக் கடற்படை அனு மதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் இரணைதீவுக்குச் சென்றார். இன்னும் சில வாரங்களில் மக்கள் இரணைதீவுக்கு செல்லலாம் என்றார். அவ்வாறு எதுவும் இதுவரை நடக்கவில்லை.

வேறு பல அரசியல்வாதிகளும் இரணைதீவுக்கு மக்கள் செல்வதற்கு அனுமதி பெற்றுத் தருவோம் என்று கூறினர். அவையும் நடக்கவில்லை.

பல தரப்பினரிடம் கோரிக்கைகள் விடுத்து நிறைவேறாத பட்சத்தில் இரணைமாதர் நகர் மக்கள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அது நேற்று 3 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

இரணைதீவுக்குச் செல்வதற்கு விருப்பம் தெரிவித்து 336 குடும்பங்கள் பூநகரி பிரதேச செயலகத்திலும், கிளிநொச்சி மாவட்ட செயலரிடமும் பதிவுகள் மேற்கொண்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற - 21,35)

# ஒலுமடுப் பாடசாலையில் உயர்தரத்துக்கு அனுமதி

வவுனியா, மே 5
வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் ஒலுமடு பாடசாலையில் உயர்தரம் ஆரம்பிப்பதற்கான பாடசாலைச் சமூகத்தின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உள்ள ஒலுமடு பாடசாலையில் தற்போது க.பொ.த. சாதாரணம் வரையிலேயே வகுப்புக்கள் உள்ளன. இங்கு க.பொ.த உயர்தரம் வரையில் ஆரம்பிப்பதற்கான பாடசாலைச் சமூகத்தின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பாடசாலையில் தற்போது 450 மாணவர்கள் வரையில் கல்வி கற்கின்றர். அவர்களில் அநேகர் 10 கிலோ மீற்றருக்கும் அப்பால் இருந்தே வருகை தருகின்றனர்.

மாணவர்கள் உயர்தரம் கற்பதற்காக மேலும் 3 கிலோ மீற்றர் தூரம் பயணிக்கும் நிலை காணப்படுகின்றது. ஒலுமடு வித்தியாலயத்தில் உயர்தரத்துக்கான அனுமதியையும் வழங்குமாறு ஓர் வேண்டுகோளைச் சமர்ப்பித்திருந்தனர். அதனை நேரில் ஆராய்வதற்காக வட மாகாண கல்வி அமைச்சர் தலைமையில் என்னுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளர் , வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் கடந்த மாதம் நேரில் சென்று பார்வையிட்டனர். இது தொடர்பில் மாகாணத்தில் கூடி ஆராயப்பட்டது. பாடசாலையில் உயர்தரத்துக்கான அனுமதியை 2018ஆம் ஆண்டு முதல் வழங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது - என்றார். (ற- 101)



# கட்டுப்பாட்டை இழந்து கடலில் பாய்ந்தது டிப்பர்

கிளிநொச்சி, மே 4
யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் சங்குப்பிட்டிப் பாலமருகில் வீதியை விட்டு விலகிக் கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. சாரதி காயங்களின்றித் தப்பிக் கொண்டார்.

வீதியை விட்டு விலகிய டிப்பர் வாகனம் வீதியோரமிருந்த சூரிய மின்கல விளக்குக் கம்பத்தைச் சேதமாகி கடலுக்குள் பாய்ந்தது. விபத்துத் தொடர்பாக பூநகரிப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர்.

சாரதியின் தூக்க கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. (ற -101)

# லைக்கா நிறுவன வீடுகளில் மக்களை குடியமர்த்த ஏற்பாடு

வவுனியா, மே 4
வவுனியா நெடுங்கேணி சின்ன அடம்பன் பகுதியில் லைக்கா நிறுவனத்தால் அமைக்கப்பட்ட வீடுகளில் வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 45குடும்பங்களை இன்று குடியமர்த்துவதற்கு வவுனியா மாவட்டச் செயலகம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் றோஹன புஸ்பகுமார தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் 20 வருடங்களுக்கு மேலாக நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து தங்கியிருந்த பொதுமக்களுக்காக நெடுங்கேணி சின்ன அடம்பன் பகுதியில் லைக்கா நிறுவனத்தால் ஒரு தொகுதி வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அனைத்துவசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மக்களை அங்கு குடியமர்துதற்கான சகல வசதிகளையும் வவுனியா மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்துள்ளது. நாளை (இன்று)அப்பகுதியில் சென்று குடியேறவுள்ள 45 பேருக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அவர்களின் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு பாரஊர்தி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பணம், வாழ்வாதார உதவிகளையும் மேற்கொண்டுள்ளோம். தண்ணீர் வழங்குவதற்கு தண்ணீர் பவுசர் ஒன்றையும் நாளை அங்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார்.

**பின்னணி**

வவுனியா மாவட்டத்தில் காணி, வீடுகள் அற்ற மக்களுக்கு லைக்கா நிறுவனம் 150 புதிய வீடுகளை கட்டி மாவட்டச் செயலகத்திடம் கையளித்தது. வவுனியா, புளியங்குளம், பரசங்குளம் பகுதியில் 67 வீடுகளும், நெடுங்கேணி சின்னடம்பன் பகுதியில் 83 வீடுகளும் அமைக்கப்பட்டன. பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் உள்ள 97 குடுடும்பங்கள் இந்த வீட்டுத் திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டனர். அவர்கள் குலுக்கல் முறையின் மூலம் இரு கிராமங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டனர். கடந்த வியாழக்கிழமை அந்த வீடுகளை உத்தியோக பூர்வமாக கையளிப்பதற்கு மாவட்ட செயலகம் அழைப்பு விடுத்திருந்தது. சின்னடம்பன் பகுதியில் உள்ள வீடுகளுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தவர்களில் ஒருபகுதியினர் வீடுகளுக்கான சாவிகளை பெற்றுகொள்ள மறுப்புத் தெரிவித்தனர். சின்னடம்பன் பகுதியில் போக்குவரத்துக்கள் உட்பட அடிப்படை வசதிகள் எவையும் இல்லை என்பதனாலேயே தாம் அங்கு குடியமர மறுக்கின்றோம் என்று அந்த மக்கள் தெரிவித்தனர். (ற - 21)

## செயற்கை கால்களை சீரமைக்கலாம்

முல்லைத்தீவு, மே 4
முல்லைத்தீவு ஒளிரும் வாழ்வு அமைப்பினர் பழுதடைந்த செயற்கைக் கால்களை இலவசமாகச் சீரமைத்து வழங்கவுள்ளனர். கனடாவில் வதியும் புலம்பெயர் அன்பர்களின் பங்களிப்புடன் உடையார்கட்டில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனக் கிளையில் பழுதடைந்த செயற்கைக் கால்கள் சீரமைக்கப்படவுள்ளன. செயற்கைக் கால்கள் பழுதடைந்த நிலையில் உள்ளவர்கள் தொடர்பு கொண்டு இலவசமாகச் சீர் செய்துகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## புத்தாண்டு கொண்டாட்டம்

வவுனியா, மே 4
வவுனியா தெற்கு கல்வி வலய தமிழ் கோட்டம் முன்னெடுக்கும் தமிழ் சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டம் இன்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். நடராஜ் தலைமையில் பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வின் போது பல்வேறு விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ந - 402)


## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

கிளிநொச்சி, மே 4
முழங்காவில் மகாவித்தியாலயத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் ப.ஆனந்தராசா தலைமையில் நடை பெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகத்தெரிவும் பாடசாலை அபிவிருத்தி சார் விடயங்கள் பற்றிய கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (ந)

# வடக்கு வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்குத் தட்டுப்பாடு

### வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 4
வட மாகாண சுகாதார அமைச்சுக்கு உட்பட்ட 110 வைத்தியசாலைகளில் 119 நிபுணர்கள் இருக்க வேண்டிய நிலையில் 77 பேர் மட்டுமே கடமையில் உள்ளனர். 24 வைத்தியசாலைகளில் ஒரு வைத்தியர்கள்கூட இல்லாத நிலமையே காணப்படுகின்றது. மத்திய அரசின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.
இவ்வாறு வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
வட மாகாண சுகாதார அமைச்சின் கீழ் 5 மாவட்டங்களிலும் தற்போது 110 வைத்தியசாலைகள் உள்ளன. அவற்றில் 119 வைத்திய நிபுணர்கள் இருக்க வேண்டும். தற்போது 77 நிபுணர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர். 24 வைத்தியசாலைகளில் ஒரு சாதாரண வைத்தியாகள் கூட இல்லாத நிலமையும் காணப்படுகின்றது.
முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பணிபுரியும் அத்தகைய நிபுணர்களும் பயிற்சிக் காலத்தை நிறைவு செய்து நிரந்தர வைத்தியசாலைகளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களாகவே காணப்படுகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்துக்கென நியமிக்கப்பட்ட வைத்திய நிபுணர்கள் கிடையாது.
ஆண்டுதோறும் அங்கிருந்து நிரந்தர வைத்தியசாலையைப் பெற்று வெளியேறும் நிபுணர்களுக்காக பதிலீட்டு நிபுணர்களைப் பெறுவது பெரும் பிரச்சினையாகவுள்ளது.



அதனால் நிரந்தர நிபுணர்களைக் கோரியுள்ளோம். வடக்கில் ஒரு வைத்தியர்கள் கூட இல்லாது உள்ள 24 வைத்தியசாலைகளுக்கான வைத்தியர்களையும், ஒரேயொரு வைத்தியர்களுடன் இயங்கும் 29 வைத்தியசாலைகளுக்குமாக 42 நிபுணர்களும் குறைந்தது 70 வைத்தியர்களும் வடக்குக்குத் தேவை என்று கோரப்பட்டுள்ளது.
தாதியர்களைப் பொறுத்த மட்டில் மாகாணத்துக்கு உட்பட்ட வைத்தியசாலைகளில் தற்போது 826 பேர் கடமையில் உள்ளனர் . இன்னமும் 200 தாதியர்கள் தேவையாக உள்ளனர். தற்போது கடமையில் உள்ள 130பேர் மாகாணத்திற்கு வெளியில் செல்வதற்காக விண்ணப்பித்தனர். அதனை ஏற்கமுடியாத சூழலே மாகாணத்தில் காணப்பட்டது. இருப்பினும் மத்திய சுகாதார அமைச்சு ஆராய்ந்து கண்டிப்பாக 23பேரை விடுவிக்க வேண்டும் எனத் தீர்மானித்துள்ளது. 2013ஆம் ஆண்டுக்கு முன்பு பிற மாகாணங்களில் இருந்து இங்கு பணிக்கு வந்தவர்களே இவ்வாறு செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.
வடக்கில் இருந்து மீண்டும் புதிதாக தாதியர்களை இணைக்க விண்ணப்பம் கோரியதில் 200ற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. அவர்களில் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தற்போது 162 பேர் கோரப்பட்ட தகமையுடன் தகுதியானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 120 பெண்களும் 42 ஆண்களும் உள்ளனர்.
நாட்டில் உள்ள ஓர் சட்டத்தால் அதில் உள்ள 42 ஆண்களை இணைத்துக்கொள்ள முடியாத நில்மை கானப்படுகின்றது. மொத்தமாக தேர்வு செய்யப்படும் தாதியர்களில் 5 வீதம் மட்டுமே ஆண்களை இணைக்க முடியும் என்ற சட்டத்தின் பிரகாரம் கூடியது 7 பேரை மட்டுமே இணைக்க முடியும். அனைவரையும் இணைப்பதற்கான அனுமதியை கோரியுள்ளோம். - என்றார். (ந- 101)



மன்னார், மடு கல்வி வலயத்துக்குட்பட்ட பாலையடிப்புதுக்குளம் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் 6.2 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் நேற்று வடக்கு கிராமிய அமைச்சர் பா.டெனீஸ்வரனால் திறக்கப்பட்டது. இந்தக் கட்டடம் ரிஎஸ்ஈபி நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மடு வலையக் கல்விப்பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் கலந்து கொண்டார். அத்துடன் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் கிராமத்தின் மூத்த பிரஜைகள் என பலரும் கலந்து கொண்டனர், திறப்புவிழாவை பாடசாலையின் அதிபர் எப்.எக்ஸ். அன்டன் சேவியர் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

## மனைகள் உயர்கின்ற அளவு மனங்களில் நல்லுறவு இல்லை

### மனநல மருத்துவர் சிவதாஸ் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 4
மனிதரோடு இணைக்கப்படாத உறவுகள், மனச்சோர்வுக்கு ஆளாக நேரிடுகின்றது. மனைகள் உயர்கின்றன. மனங்களை நல்லுறவில் கட்டி எழுப்ப முடியவில்லை. இதுவே இன்று அதிக நோய்களுக்குக்காரணமாகும். இன்றைய யாழ்ப்பாணம் கட்டடங்களால் உயர்த்தப்பட்டு வருகிறதே தவிர மனித உறவுகளால் அல்ல. இது எமது சமுதாயத்துக்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்துகின்றது.
இவ்வாறு மனநல மருத்துவர் சிவதாஸ் தெரிவித்தா்.
"நான்" உளவியல் சஞ்சிகையின் 42ஆவது ஆண்டு விழா உளவியலாளர் அருட்பணி டேமியன் அடிகள் தலைமையில் யாழ். சுக வாழ்வு நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வில் "நபரிடைத் தொடர்பாடல்" எனும் தலைப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இன்று பலருக்கும் சொல்லமுடியாத நோய்கள் பல உருவாக மன நெருக்கீடுகளால் மருந்து மாத்திரைகளுக்காக இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடுவோர் பலராக காணப்படுகிறார்கள். இவற்றுக்குக் காரணமே நாம் அமைத்துக்கொண்டு வருகின்ற சூழல் என்பதை உணரமறுப்பதால் உள அழுத்தங்கள் அதிகமாகி அமைதிக்காக அலைவோரை காண்கின்றோம்.
சமூக நிலை உணரப்படாத தனிமனித வாழ்வு தனது இருப்பை அடையாளத்தை தொலைத்த வாழ்வாக நிறைவு அடைகிறது. மனித இணைப்புகள் இல்லாததால் ஏற்படும் தாக்கமே மனச்சோர்வுக்குக் காரணமாகிறது. அதனால் நபரிடை தொடர்பாடலை தூண்ட வேண்டியது ஒவ்வொருவரது ஆரோக்கிய வாழ்வுக்கும் வழியாகும். பலதோல்விகளுக்கு எம்மிடையே நபரிடைத் தொடர்பாடல் அருகியதே காரணமாகும். இவற்றுக்கு தொடர்பாடல் திறன், இணக்கப்பாடு, உந்துதல் மற்றும் தலையீட்டுத் திறன், முரண்பாடு தீர்த்தல், பிரச்சினைகளை எதிர்கொள்ளல், முடிவை எடுத்தல், குழுக்களுடன் இணைந்து செயற்படல் முக்கியமானது.
நபரிடை முரண்பாடு இன்று இங்கு மட்டுமல்ல உலகில் அதிகமாக காணப்படுகின்ற விடயங்களில் ஒன்றாகும், குடும்பத்தில், பணித்தளங்களில் இதன் தாக்கம் இலக்கை அடைவதற்குதடையாக அமைந்து விடுகிறது. முரண்பாடுகள் எப்பொழுதும் பாதகமாக அமைவதில்லை. நன்றாக அமையும் சாத்தியம் உள்ளது. உணர்ச்சிகள் வெளிப்பட்டு அதனால் நெருக்கீடுகள் குறைக்கப்பட்டு புதுவெளி காண ஏதுவாக அமைகிறது.
இவை எமது குடும்ப உறவுகளில் இருந்து ஏற்பட சகலரும் பங்காளராக மாறவேண்டும். இடம்பெயர்வுகளில் இருந்த குடும்ப, சமூக நல் உறவுகள் இன்று அதிக காரணம் என ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை உருவாக வேண்டும். பிள்ளைகள் படிக்க வேண்டும் என்பதற்காக தம்மை அர்ப்பணிக்கும் பெற்றோர் பரீட்சையின் சித்தி பற்றி கவனம் செலுத்துவது போல் குடும்ப சமூக உறவுக்கும் வழிகாட்டதவறுவதும் பின் பிள்ளைகளின் நடத்தை மாற்றத்தைக் கண்டு வேதனை அடைகிறார்கள் இவற்றுக்கு நபரிடைத் தொடர்பற்ற நிலைதான் காரணமாகும் என்றார். (ந - 10)

## உற்பத்தித் திறன் செயற்பாடுகளை பார்வையிட்டனர் புதிய அதிபர்கள்

### கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின்

கிளிநொச்சி, மே 4
கிளிநொச்சி மாவட்டச் செயலக உற்பத்தித் திறன் செயற்பாடுகளை வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் அதிபர்கள் சேவையில் முன்பயிற்சிகள் பெற்றுக்கொண்டிருக்கும் அதிபர்கள் நேரில் சென்று நேற்று முன்தினம் பார்வையிட்டனர்.
தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் என பல நிறுவனங்களுக்கிடையே ஆண்டுதோறும் உற்பத்தித் திறன் போட்டி நடைபெற்று வருகின்றது. இந்தப் போட்டியில் 2015ம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் முதன்முறையாக போட்டியிட்டு அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. அதையடுத்து



அண்மைக்காலமாக அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் எனப் பல அமைப்புகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தைப் பார்வையிட்டு வருகின்றார்கள். மாவட்டச் செயலகத்தின் உற்பத்தித் திறன் செயற்பாடுகள் மற்றும் பொதுமக்களுக்கான வினைத்திற னுடன் கூடிய சேவையைப் பார்வையிடுவதற்காகவும் செயலக பணியாட் தொகுதியுடனான அனுபவப்பகிர்வை மேற்கொள்ளும் பொருட்டு புதிதாக நியமனம் பெற்ற அதிபர்கள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்குச் சென்றனர். (ந - 21)

# தமிழ் பேசும் மக்களுக்கு நல்லாட்சி கிட்டவில்லை

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மே 4

கூட்டரசும், தமிழ் அரசியல் தலைமைகளும் மக்களுக்கு நல்லாட்சியைத் தரவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற மே தின நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் தெரிவித்ததாவது:

எங்களின் பிரச்சினைகளையும் உரிமைகளையும் வலியுறுத்தி தொழிலாளர் தினத்தில் ஒன்று கூடியிருக்கின்றோம். இலங்கையில் தொழிலாளர்களின் பிரச்சினைகள் ஏராளம் இருந்து கொண்டே இருக்கிறது. அதனால் தான் இலங்கை முழுவதும் தொழிலாளர்கள் போராட்டங்களை நடத்திக்கொண்டிருகின்றார்கள். ஆனால் அரசு தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்குப் பதிலாக பொலிஸாரைக் கொண்டு அடக்கிவிடவே நினைக்கிறது.

அதன் விளைவே முன்னாள் இராணுவத் தளபதிக்கு நாட்டில் ஏற்படுகின்ற போராட்டங்களை அடக்குவதற்கு அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று செய்திகள் மூலம் அறிகின்றோம். எங்கள் பகுதிகளிலும் தினமும் பல்வேறு போராட்டங்கள் இடம்பெறுகிறது. காணாமற் போனோர் போராட்டம், காணி மீட்புக்கான போராட்டம், விவசாயிகள் போராட்டம், பட்டதாரிகள் போராட்டம் . கடற்றொழிலாளர்கள் போராட்டம் என தினமும் ஏதோவொரு போராட்டம் இடம்பெற்றுக் கொண்டேயிருக்கிறது.

மக்களின் இவ்வாறான பெரும்பாலான போராட்டங்களுக்கு தீர்வு கிடைப்பது கிடையாது. இப்பொழுது இடம்பெற்று வருகின்ற மக்கள் போராட்டங்கள் என்பது மக்கள் தங்களின் தலைமைகள் மீது நம்பிக்கை இழந்ததன் விளைவே.

நாங்களும் இந்த நாட்டில் சம உரிமகளோடு வாழ வேண்டும் ஆனால் இரண்டாம் தர பிரஜைகளாகதான் வாழ்கின்றோம்.

இந்த நிலமை களில் இன்னும் மாற்றம் ஏற்படவில்லை, எங்களுடைய தலைவர்கள் இவற்றுக்கு எதிராக அகிம்சை வழியில் போராடினார்கள் சாத்தியப்படவில்லை, ஆயுதம் ஏந்திப் போராடினார்கள் அதுவும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. அதன் பின்னர் இன்றைய ஜனநாயக வழியில் எங்களுடைய தலைவர்களை வாக்குகளுக்கு ஊடாக நாளுமன்றம், மாகாண சபைக்கும் அனுப்பினோம் ஆனால் அவர்களும் எங்களைக் கைவிட்டுவிட்டார்கள். எதுவுமற்ற, தலைமைகள் அற்ற மக்களாக தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். அரசியல் கைதிகள் இன்னும் சிறைகளில், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு தீர்வில்லை, அரசியல் தீர்வு பற்றி எவ்வித முன்னெடுப்பும் இல்லை எந்தெந்த விடயங்கள் பற்றியெல்லாம் தேர்தல் விஞ்ஞாபனங்களில் உறுதிமொழி அளிக்கப்பட்டதோ அவை எவையும் நடைபெறவில்லை. பேரம் பேசாமல் எவ்வித உடன்பாடுகளும் இல்லாமல் அரசுக்கு தமிழ் தலைமைகள் ஆதரவளிக்கின்றார்கள். தமிழ் மக்களின் ஆணை தெற்கு அரசியலுக்கு விற்கப்படுகிறது. குறைந்த பட்சம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளாவது தீர்க்கப்பட வேண்டும் அதுவும் இல்லை.

நான் ஓய்வூதியம் பெற்றுவிட்டு அரசியலுக்கு வரவில்லை. மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய ஒரு போராளியாக இருந்தே அரசியலுக்கு வந்திருக்கின்றேன்.

மக்களை நேசித்தவர்கள் நாங்கள். அதனாலேயே ஆயுதம் ஏந்தினோம், அதன் வழியே அரசியலுக்கும் வந்திருகின்றோம். என்றார். (ற - 21,35)

## சித்த மருத்துவ உற்பத்தி நிலையம் கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், மே 5

வடக்கு மாகாணத்தில் இயங்கும் 68 சித்த மருத்துவமனைகள் மற்றும் 500 வரையான சித்த மருத்துவர்களின் மருந்து தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் ஓர் மருந்து உற்பத்தி நிலையத்தை கிளிநொச்சி மாவட்டம் கல்மடுப் பிரதேசத்தில் நிறுவுவதற்கு வடமாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கையின் வட மாகாணத்திலேயே சித்த வைத்தியம் அதிகமாக காணப்படுகின்றது. ஏனைய மாகாணங்களில் ஆயுள்வேத வைத்தியமுறையே காணப்படுகின்றது. சித்த வைத்திய முறையிலான வைத்தியர்களுக்கான மூலிகைகள் மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடி நிலை காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பிரதேசத்தில் ஓர் மருந்து உற்பத்தி நிலையம் காணப்படுகின்றபோதும் அங்கும் போதிய உற்பத்தி இல்லை.

சித்த வைத்தியத்தின் மருந்து வகைகள் தற்போது அதிகமாக இந்தியாவில் இருந்தே தருவிக்கப்படுகின்றன. அவற்றுக்கு விதிக்கப்படும் வரிகளும் பெறுமதிகளும் அதிகமாக வுள்ளன.

இவற்றைக் கருத்திற்கொண்டு கிளிநொச்சி கல்மடு நகரில் உள்ள 100 ஏக்கர் நிலத்தில் 75 ஏக்கரை மூலிகைப் பண்ணையாக மாற்றவுள்ளோம். அதில் பெறப்படும் மூலிகைகளில் இருந்து மருந்து உற்பத்தியையும் மேற்கொள்ளவுள்ளோம்.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களில் 40பேர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கான மூலிகைச் செடிகள் எம்மால் வழங்கப்பட்டு அரை ஏக்கர் நிலம் வீதம் இவர்களை செய்கையில் ஈடுபடுத்தியுள்ளோம். இவ்வாறு மேற்கொள்ளப்படும் செய்கை கடந்த 8 மாதங்களாக இடம்பெறுகின்றது. இந்தக் காலத்தில் இவ் உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 500 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

விரைவில் எஞ்சிய நிலத்திலும் மூலிகைகளைப் பயிரிடுவதோடு மருந்து உற்பத்தி நிலையத்தையும் ஆரம்பிக்க உள்ளோம். இதற்கான திட்ட அறிக்கையை மத்திய சுகாதார அமைச்சு கோரியிருந்தது.

திட்டம் தயார் செய்யப்பட்டு மத்திய சுகாதார அமைச்சிடம் கையளித்து அதற்கான தேவைகளும் எடுத்துக் கூறப்பட்டது. இவற்றின் அடிப்படையில் இதனை படிப்படியாக அமைக்க அமைச்சு இணங்கியுள்ளது. அதனால் மேற்படி மருந்தகம் அடுத்த ஆண்டுக்குள் அமைக்கப்படும். என்றார். (ற-101)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், மே 4

உரும்பிராய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை 5ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உரும்பிராய் மேற்கு திருக்குமரம் சன சமூக பொதுமண்டபத்தில் தலைவர் சி.கிருஷ்ணானந்தன் தலைமையில் இடம்பெற வுள்ளது. புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற வுள்ளதால் உரும் பிராய் மேற்கு கிராம சேவகர் பிரிவுக் குட்பட்ட பொதுமக்களை இதில் கலந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த, பூர நட்சத்திரம், 77 பாவமும், 8இல் செவ்வாயுமுடைய சுயதொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

077 254 3119

**வேலையாள்கள் தேவை**

வவுனியாவில் உள்ள விவசாய தோட்டமொன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாள்கள் உடன் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

071 867 6424

**தேவை**

சமையல் வேலை தெரிந்தவர்களும். உதவியாளர்களும் NEW AT Hotel க்கு தேவை.

077 741 2713, 077 306 6615

**வேலையாள்கள் தேவை**

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உணவகத்திற்கு (உணவு பரிமாறுபவர்) ஆண்/பெண் தேவை.

077 970 0385






**சிவன் ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள

**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**

076 585 9977 , 075 787 3073

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.

தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி.
(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.

நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

## கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர்

**திருமதி மகேஸ்வரி வல்லிபுரம்**

(உரிமையாளர் ஆஷா புடைவையகம் சாவகச்சேரி)

அவர்களின் அன்புக் கணவர்

**பொன்னையா வல்லிபுரம்**

அவர்கள் 02.05.2017 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

## கண்ணீர் அஞ்சலி

திருமதி

**யோகேஸ்வரி நமசிவாயம்**



மானிப்பாயை பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி நமசிவாயம் என்பவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**சிவலோகசுந்தரம் கமலாநந்தன்**
**(மருமகன்) மானிப்பாய்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **செல்லத்துரை கனகரத்தினம்**

தோற்றம்
13.06.1953

மறைவு
05.04.2017

05.04.2017 அன்று இறை பதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் 31 ஆம் நாளை நினைவுகூரும் வேளையில் இத் துயர்ச் செய்தி கேட்டு உதவிய உற்றார், உறவினர்,நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி, ரெலிமெயில் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் மற்றும் திரை மூலமும் பதாகைகள் மூலமும் தமது அனுதாபத்தையும் அன்பையும் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு. அன்னாரின் நினைவாக நாளை (05.05.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வீர கொடியார் வீதி,**
**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**
**077 923 3071**

(c.s.3700)(13.17)

அன்னாரின் பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



**கந்தையா அருணாசலம்**

(ஓய்வுநிலை அதிபர் 1978 - 1987)

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
வாழவைத்து பாருளோர் புகழ்ந்தேத்த
பெருமையாய் வாழ்ந்த ஆசான்
அகல் விளக்காய் ஒளி தந்து
ஆலமரம் போல் நாம் தழைத்தோங்கி
இகமதில் செழிப்புடன் வாழ்வதற்கு
அன்பினால் வழிகாட்டிய எம் அதிபர்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல நடராஜப்பெருமானைப்
பிரார்த்திக்கின்றோம்.

**பழையமாணவர் சங்கம்**
**யா/விக்டோரியாக் கல்லூரி, சுழிபுரம்.**



# மீதொட்டமுல்ல சேத மதிப்பீடு இவ்வார இறுதிக்குள் நிறைவு

கொழும்பு, மே 4

மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து வீழ்ந்ததால் தேதமடைந்த வீடுகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை இந்த வார இறுதிக்குள் நிறைவு செய்யப்படவுள்ளது.

மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து வீழ்ந்ததில் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினருக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு தொகுதி மக்களுக்கான வீடுகள் வழங்கப்படும் வரை கொலன்னாவ நெற் களஞ்சியசாலையில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன என்று கொலன்னாவப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். கடந்த மாதம் 14 ஆம் திகதி மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து வீழ்ந்ததால் 8 சிறார்கள் உள்ளடங்கலாக 32 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சூசைமுத்து ஜோசப் ஞானராஜா (ஜீவா)**

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 25.08.1950 | 04.05.2016 |

ஓராண்டு கடந்து சென்றாலும் – எம் நினைவோடு
என்றும் வாழும் எம் குலதெய்வமே அப்பா
காலங்கள் கடந்து சென்றாலும் – உம்
நினைவற்ற செயல் இங்கு இல்லை அப்பா
அப்பா அப்பா என்றழைக்கும் எம் உதடுகள் என்றும் ஓயாது

இன்று (04.05.2017) முற்பகல் 10.30 மணிக்கு முல்லைத்தீவு சம்பேதுருவானவர் ஆலயத்தில் திருப்பலியைத் தொடர்ந்து அன்னரின் இல்லத்தில் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சிவஜோதி வீதி,
முல்லைத்தீவு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**கந்தையா செல்வரத்தினம்**



தோற்றம்
24.02.1944

மறைவு
15.04.2016

திதி : வளர்பிறை நவமி

ஓரிடத்தில் இருக்காது
ஓடி ஆடித் திரிந்த நீங்கள்
ஓய்வெடுத்து
ஓராண்டு சென்றாலும் ஓயாது உங்கள் நினைவுகள்

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

மீசாலை வடக்கு ,
மீசாலை.

குடும்பத்தினர்.
(மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்)

# போதைப் பொருள் ஒழிப்பு சித்திரப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 4

அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த 2016 தீபாவளி திருநாளை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடத்திய மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு என்னும் தொனிப் பொருளிலான சித்திரப் போட்டியின் முடிவுகள் அகில இலங்கை இந்து மா மன்றத்தால் வெளியிடப்பட்டன.

*கீழ்ப்பிரிவு*

முதலாம் இடம்: பி.மோகனாம்பாள் - தரம் 8 இரத்தோட்டை இந்து மகாவித்தியாலயம்.
இரண்டாம் இடம்: என். தர்சன் - தரம் 8 யா/ கரந்த்ன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
மூன்றாம் இடம்: வி.தர்மிகன் - தரம் 8 மன்/ தட்சனாமருதமடு மகா வித்தியாலயம்.
ஆறுதல் பரிசுகள்: சந்திரகுமார் ரம்யா - தரம் 8 மாத்/ பாக்கியம் தேசிய பாடசாலை, துலக்சினி கோகிலன் - தரம் 7 யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, பா.அபிஷானி - தரம் 7 மாத் / பாக்கியம் தேசிய பாடசாலை.

*மத்தியபிரிவு*

முதலாம் இடம்: தங்கையா திலக்சன் - தரம் 10 யா/மயிலணி சைவ மகாவித்தியாலயம்.
இரண்டாம் இடம்: ராஜ்குமார் கஸ்தூரி - தரம் 10 யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.
மூன்றாம் இடம்: சண்முகநாதன் சரண்ராஜ் தரம் - 10 யா/கற்கோவளம் த.ம.மி.த.க பாடசாலை,
ஆறுதல் பரிசுகள்: வே.கவினுஜன் - தரம் 10 கவரவில தமிழ் மகா வித்தியாலயம் சாமிமலை, தி.தனுஜா - யா. வடமராட்சி இந்து மகளிர் பாடசாலை, ஜெ.சரணியா - தரம் 10இ கவரவில தமிழ் மகா வித்தியாலயம் சாமிமலை.

*மேற்பிரிவு*

முதலாம் இடம்: அ.குகவேதனன் - உயர்தரம் யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.
இரண்டாம் இடம்: சி.பிரபானுயா - தரம் உயர்தரம் - யா/இராமநாதன் கல்லூரி.
மூன்றாம் இடம்: பி.கஜானி உயர்தரம் யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.
ஆறுதல் பரிசுகள்: ஸ்ரீகாந்தன் நிவேதன் - தரம் 12 யா/இணுவில் மத்திய கல்லூரி, ஆர். ராகுலன் - தரம் 12 யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி, பிரியதர்ஷினி தரம் - 12 யா/இராமநாதன் கல்லூரி.
வெற்றிபெற்ற மாணவர்களின் விவரங்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-21)

# ரத்துபஸ்வல சூட்டுச் சம்பவம் சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மே 4

ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று இராணுவத்தினரும் இந்த மாதம் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா நீதிவான் நீதிமன்றால் இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சுத்தமான குடிநீர் வேண்டி 2013 ஆம் ஆண்டு ரத்துபஸ்வல மக்கள் வெலிவேரிய நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

அதில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். (ற-4)

# தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை இயந்திரப் பராமரிப்புக்கு ரூ. 15 மில்.

யாழ்ப்பாணம், மே 4

தெல்லிப்பழை வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் கதிர் இயந்திரங்களின் பராமரிப்புச் செலவாக ஆண்டு ஒன்றுக்கு 15 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிதி மாகாண சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து மாவட்ட சுகாதாரத் திணைக்க ளத்துக்கான நிதியில் இருந்தே வழங்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்ததாவது:

தெல்லிப்பழை வைத்தியசாலையில் உள்ள இரு இயந்திரங்களையும் பராமரிப்புச் செய்வதற்கான வசதி கொண்ட நிறுவனம் இலங்கையில் ஒன்றே உள்ளது. அவர்களிடம் முற்கூட்டியே ஆண்டுக்கான சேவை ஒப்பந்தம் கைச் சாத்திட்டிருந்தால் மட்டுமே 3 மாதத்துக்கு ஒரு தடவையான பராமரிப்பும் ஏதாவது பழுதுகள் ஏற்பட்டால் 24 மணிநேரத்தில் அதனை திருத்தம் செய்தும் வழங்குவார்கள். அந்தச் சந்தர்ப்பங்களில் எந்தக் கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. அவ்வாறு வழங்காதுவிடின் நாமும் சட்ட ரீதியில் நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

இவ்வாறு பராமரிக்கப்படும் இயந்திரங்கள் என்பது குறித்த நோயாளர்களுக்கு மிகவும் இன்றி அமையாதது. அவை இயங்காமல் போகுமாக இருந்தால் நோயாளிகள் கொழும்புக்கே செல்ல வேண்டிய நிலமையே ஏற்படும். இந்த இயந்திரம் உள்ள அனைத்து வைத்தியசாலைகளுமே இந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு முற் கூட்டியே பணத்தைச் செலுத்தியே மேற்படி சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மாகாணத்தின் குறைந்த ஒதுக்கீட்டில் இவ்வாறு ஒரு தொகையை பராமரிப்புச் சேவைக்காக நாம் வழங்குகின்றோம். இதை மத்திய அரசு பொறுப்பெடுத்து அவர்களே ஒப்பந்தம் செய்து மத்திய அமைச்சின் நிதியில் வழங்குமாறு கடந்த 27 ஆம் திகதி மாகாண சுகாதார அமைச்சர்கள் மாநாட்டில் என்னால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மத்திய சுகாதார அமைச்சர் ஏற்றுக்கொண்டு 2018ஆம் ஆண்டிலிருந்து அந்த நிதியையும், அதற்கான ஒப்பந்த விடயத்தையும் மத்திய சுகாதார அமைச்சே மேற்கொள்ளும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது - என்றார். (ற-101)

# வீதி பாதுகாப்பு ஆணைக்குழுவை அதிகாரமிக்கதாக மாற்றத் திட்டம்

கொழும்பு, மே 4

தேசிய வீதி பாதுகாப்பு ஆணைக்குழுவை அதிகாரமிக்க நிறுவனமொன்றாக மாற்றுவதற்கு சட்டமூலம் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பிலும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய வீதி பாதுகாப்பு ஆணைக்குழுவை நிறுவுவதற்கு 2010 ஆம் ஆண்டே அங்கீகாரம் கிடைத்தது. அது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

தற்பொழுது வீதி விபத்துக்களால் ஏற்படும் உயிர் மற்றும் உடைமைச் சேதங்களை கட்டுப்படுத்துவது அரசு எதிர்நோக்கும் பெருஞ் சவாலாக காணப்படுகிறது. இந்த நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு வினாசித்தம்பி (ஐயா)

(ஓய்வு நிலை சாரதி - பச்சிலைப்பள்ளி பிரதேச சபை)



பிறப்பு 05.11.1950 இறப்பு 02.05.2017

கிளாலியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு விநாசித்தம்பி 02.05.2017 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் அரியதவமலரின் அன்புக் கணவரும் தவச்செல்வம் விஜிதா (மாவட்டச் செயலகம் , கிளிநொச்சி), சசிகரன் விஜயகுமாரி (செலிங்கோ லைவ்), ஜீவனா(கலைப்பிரிவு மாணவி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ஸ்ரீரங்கன் (சாவகச்சேரி ஹிந்துக் கல்லூரி, உயர்தரம் 2016) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2017) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் நேரியதூ இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.

# கழிவகற்றும் திட்டத்துக்கு வெளிநாடுகளின் உதவிகள்

கொழும்பு, மே 4

புத்தளம் அருவக்காடு கழிவகற்றும் வேலைத்திட்டத்துக்காக இலங்கையில் அமைந்துள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மூலம் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ள அரசு எதிர்பார்த்துள்ளது.

மேல் மாகாணத்தில் வியாபித்துள்ள கழிவுப் பிரச்சினைக்கு நீண்ட காலத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் பணியானது, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள கழிவகற்றல் வேலைத்திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த வேலைத்திட்டங்களில் புத்தளம் அருவக்காடு கழிவகற்றும் வேலைத்திட்டத்தை செயற்படுத்த வெளிநாட்டுத் தூதுவர்கள் மூலம் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

# போதைப் பொருள் வைத்திருந்தவர் கைது

கொழும்பு, மே 4

2 லட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான போதைப் பொருளை கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் போதை மருந்து தடுப்பு பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளை கிங்சி வீதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்த போதை பொருள் ஒன்றின் விலை 3 ஆயிரத்து 500 ரூபா என போதை மருந்து தடுப்பு பிரிவு தெரிவித்தது. சந்தேகநபர் கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்தவர். சந்தேகநபர் இன்று மாலை மாளிகாகந்த நீதவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ற-4)

## மரண அறிவித்தல்

பிறப்பு
31
.
08
.
1978



இறப்பு
02
.
05
.
2017

### பாலசிங்கம் சாரங்கநாதன்

4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் 10ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சாரங்கநாதன் 02.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பாலசிங்கம் - சிவபாக்கியம் தம்பதிகளின் (முன்னாள் பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் - புதுக்குடியிருப்பு) தம்பதிகளின் அன்பு மகனும் நேறோஜினி(சட்டவாளர் - முல்லைத்தீவு) அவர்களின் அன்புக் கணவரும் பரமலிங்கம் - அன்னலட்சுமி (ஆசிரியர் - வேணாவில் சிறிமுருகானந்த வித்தியாலயம்) தம்பதிகளின் அன்பு மருமகனும் செந்தில்நாதன்(லண்டன்), சாந்தகுமார்(லண்டன்), குன்றக்குமரன்(லண்டன்), ஆனந்தி(பிரதேசசெயலகம் - புதுக்குடியி ருப்பு), உமையாளன்(ஆசிரியர் - கொக்கிளாய் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அங்கதன்(பிரான்ஸ்) அவர்களின் அன்பு மைத்துனரும் துசியந்தி(லண்டன்), திலைக்சனா (லண்டன்), கிருசாந்தி(லண்டன்), நவநீதன் (ஆசிரியர் - அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கேதுசன், திவ்யன், டேனுயன் ஆகியோரின் மாமனாரும் டர்மிகா, சபினயன், திசானி,சாமினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் பவிஸ்னா, தக்சனா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.05.2017 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு 10ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள அன்னாரின் மனைவியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

### யோன் அலெக்சாண்டர்

(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்)



மல்லாகத்தை பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை, நியூசிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட யோன் அலெக்சாண்டர் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்) 01.05.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லப்பா - அரியட் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற குணசேகரம், சின்னத்துரை, பொன்னையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாபரன், சுகன்யா, சால்ஸ், கருணாகரன், யாழினி, யெகு ஆகியோரின் அன்புத் தந்தையும், யேசுதாஸ், மகேந்திரகுமார், டொரின், குபித்தா, சுபாஜினி ஆகியோரின் மாமனாரும், நிறுஜா, சாறுஜா, பெனோனி, டிலன், ஜேமியன், ஜேய்டன், யேய்னி, பியங்கா, ஜெரமி, ஈத்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (04.05.2017) பி.ப ஒரு மணிக்கு மல்கரி, நியூசிலாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

+642 171 5646 அன்ரன் தயாபரன் +614 348 6965

திருமதி

### டொறின் மேரி அருள்வதனன்



மாகியப்பிட்டி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டொறின் மேரி அருள் வதனன் 02.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தேவபிரசாத் குணரட்ணம் - வில்விராணி (ஓய்வு நிலை முன்பள்ளி ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மகளும், அருட்பிரகாசம் (ஓய்வு நிலை நூலக உதவியாளர் - யாழ். பல்கலைக்கழகம்) - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், அருள்வதனனின் (வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்) பாசமிகு மனைவியும், சபிஷன் (தெல்லிப்பழை, மகாஜன கல்லூரி தரம் 9 மாணவன்), நிஷாநாத் (தெல்லிப்பழை, மகாஜன கல்லூரி தரம் 4 மாணவன்), நிபோஷன் ஆகியோரின் பாசமிகு தாயும், யேன்மேரி (இத்தாலி), கலிஸ்மேரி, மேரிகிறிஸ்ரீனா, செபஸ்ரீபன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (04.05.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்திலிருந்து மாகியம்பதி புனித செபஸ்ரியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மு.ப.10.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காக புனித செபஸ்ரியார் ஆலய சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(சி.எல் 3696) (13) 077 645 0304

# திருடர்களாக மாறியுள்ளனர் ஆட்சியாளர்கள்

## அநுரகுமார திசாநாயக்க சாடல்

கொழும்பு, மே 4



முன்னைய அரசிலிருந்த திருடர்களைப் பிடிப்போம் என்று வாக்குறுதியளித்து ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் பதவிக்கு வந்து ஐம்பதே நாள்களில் தங்களது திருட்டுகளை ஆரம்பித்து விட்டார்கள்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க எள்ளி நகையாடியுள்ளார்.

மே தின நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னைய அரசில் திருடர்களைப் பிடிப்போம் என்று கங்கணங்கட்டியவர்கள் இதுவரை எதையும் சாதிக்கவில்லை. அதற்குப் பதிலாகப் பிணைமுறி மோசடியால் கோடிக்கணக்கான ரூபா பணத்தைக் கபளீகரம் செய்யத் துணை போயிருக்கிறது அரசு. பொதுமக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் காற்றோடு போய்விட்டன.

மறுபுறம் மடகிந்த ராஜபக்ச கூட்டத்தைத் திரட்டி அரசைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில், நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகியிருப்பதை மக்கள் புரிந்துகொண்டு இவர்களின் பசப்பு வார்த்தைகளுக்குத் தொடர்ந்தும் ஏமாறாமல் இருக்கவேண்டும் - என்றார். (த-4)

## மின்சாரம் சேமிப்போருக்கு அரசின் சிறப்புச் சலுகைகள்

### திட்டம் தயாரென்கிறார் அமைச்சர்

கொழும்பு, மே 4



மின்சாரத்தைச் சேமிப்போருக்கு சிறப்புச் சலுகைகளை வழங்குவதற்கு தேவையான திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டிருப்பதாக மின்சக்தி மற்றும் நிலைபேறான எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியாம் பலாப்பிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காற்றுச்சீராக்கியைப்பயன்படுத்துவதற்கான புதிய சுற்றறிக்கை கொண்டுவரப்படும்.

மின்சாரத்தைச் சேமிக்கும் மூலோபாயமாக இந்தப் புதிய விதிகள் கொண்டுவரப்பட வுள்ளன.

சூரிய எரிசக்தியைப் பெற்றுக்கொடுப்பதற்கான புதிய திட்டமும் கொண்டுவரப்படவுள்ளது.

சூரிய எரிசக்தியைப் பெற்றுக்கொள்வதற்கு 40அடிக்கு மேற்பட்ட கூரையைக் கொண்ட வீடொன்றே தேவை - என்றார். (த-4)

## மகிந்தவின் மே தினத்தில் பங்குபற்றியவர்கள் மீது நடவடிக்கை வேண்டாம்

### சு.க.விடம் கோருகிறார் எஸ்.பி.

கொழும்பு, மே 4



இந்தமுறை மே தினத்தன்று கொழும்பு காலிமுகத்திடலில் நடந்த மகிந்தவின் கூட்டத்துக்குச் சென்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று அந்தக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடியோடு சரிந்துபோயிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி இன்று படிப்படியாக வளர்ச்சிபெற்று திருப்திகரமானதொரு நிலையில் இருக்கிறது. கட்சியின் ஒரு சிலர் எதிர்ப்பக்கம் தாவுவதால் கட்சிக்கு எந்தவித சேதமும் ஏற்படப்போவதில்லை.

ஜி.எல்.பீரிஸின் பொதுசன பெரமுன கட்சியால் கண்டியிலிருந்து 200 அங்கத்தவர்களைக் கூடத் திரட்டிக்கொள்ளமுடியாத பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

தேர்தல் சமயத்தில் மகிந்தவுடன் இருந்த தன்னைப் போன்ற ஏராளமானவர்கள் இன்று மைத்திரியுடன் இணைந்துள்ளனர். எவ்வாறாயினும் சுதந்திரக் கட்சியை விட்டு விலகிச் சென்றவர் வெகுவிரைவில் மீண்டும் அந்தக் கட்சியுடன் இணைந்துகொள்வது நிச்சயம். அதனால் வேறு கூட்டங்களுக் குச் சென்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் தங்களுக்குக் கிடையாது-என்றார். (த-4)

## ஒரு நாள் 12 மணி நேரப் பணி தமிழகத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ. 60 ஆயிரம் சம்பளம்

கொழும்பு, மே 4

இலங்கையில் பணியாற்றும் தமிழக தொழிலாளர்களுக்குத் தங்குமிட வசதிகள்வழங்கப்பட்டு60 ஆயிரம் ரூபா (25 ஆயிரத்து 253இந்திய ரூபா)சம்பளம் வழங்கப்படுவதாக தகவலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

சண்டே ரைம்ஸ் நாளிதழ் குழுவொன்று, இலங்கையில் பணியாற்றும் தமிழகப்பணியாளர்குழுவொன்றைச் சந்தித்தபோது, அவர்களால் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டதாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை அடங்கலாக வாரத்தில் ஏழு நாள்களும் தாம் பணியாற்றுவதாகவும், எந்தவொரு விடுமுறையும் இல்லை என்றும் தமிழகத் தொழிலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தாம் காலை 7.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை12 மணிநேரம்பணியாற்றுவதாகக் குறித்த பணியிடத்தில் பணியாற்றும் தமிழகப் பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எமது பணி முடிந்தவுடன், எமக்குத் தேவையான உணவுகளை நாமே தயாரித்துக் கொள்ளவேண்டும்.

அப்படி இல்லாவிட்டால், உழைக்கின்ற பணம் உணவுக்கே செலவாகிவிடும். இலங்கையில் உணவு விலை அதிகம் என அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை, இலங்கையர்களுடன் பணியாற்றும் போது, தொடர்பாடல் பிரச்சினையை தாம் எதிர்கொள்வதாகவும் தமிழகத் தொழிலாளர்கள் கூறியுள்ளனர். (த-4)

## அமைச்சர் செனவிரட்ணவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

பதுளை, மே 4

இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்ணவை செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி ருவந்திகா மாரசிங்க, மேற்படி உத்தரவைப் பிறப்பித்ததோடு அதற்கான அழைப்பாணையை அனுப்பும் படியும் பணித்தார்.

கடந்த ஊவா மாகாணசபைத் தேர்தல் பிரசா ரத்தின்போது, பதுளையில் மாகாணசபையின் உறுப்பினர் ஒருவரைத் தாக்கியதாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்தே, நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ய-41)

## அருங்காட்சியக வளாகம் பொலித்தீனற்ற வலயம்

கொழும்பு தேசிய அருங்காட்சியக வளாகம் பொலித்தீன் அற்ற வலயமாக பிரகடனப்படுத்தப்பட வுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ வைபவம் எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறவுள்ளது. தேசிய அருங்காட்சியகத்தைப் பார்வையிடச் செல்வோர் முறையான விதத்தில் கழிவகற்றும் பணிகளை மேற்கொள்ளாமையினால், அருங்காட்சிய வளாகத்தில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

பொலித்தீன், பிளாஸ்ரிப் போத்தல்கள், றெஜிபோம் என்பனவற்றை அங்கு எடுத்து வரவேண்டாம் என்று அருங்காட்சியக நிர்வாகிகள் மக்களைக் கேட்டுள்ளனர். (த-4)

## ஆலயக் காணி விற்பனையை கண்டித்து நேற்றுப் பேரணி



செங்கலடி, மே 4

மட்டக்களப்பு வாழைச்சேனை ஸ்ரீகைலாயப் பிள்ளையார் முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபைக்குச் சொந்தமான காணி மோசடி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்தும், காணியை மீட்டுத் தரக் கோரியும் நேற்று வாழைச்சேனையில் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

ஆலயப் பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கண்டனப் பேரணியில் கிராம அபிசிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

ஆலய முன்றிலில் ஆரம்பமான பேரணி கோறளைப்பற்று பிரதேச சபைவரை சென்று பிரதேசசபை முன்றிலில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. இதன்போது பிரதேசசபைச் செயலாளர் எஸ்.எம்.சிகாப்தீனிடம் மனு கையளிக்கப்பட்டது. மாவட்டச் செயலாளருக்கான மனுவைக் கோறளைப் பற்றுப் பிரதேச செயலாளர் வி.வாசுதேவனிடம் கையளித்தனர்.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

வாழைச்சேனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மற்றும் வ.கந்தையா என்போருக்குச் சொந்தமான குறித்த காணி இவர்களின் சீவியத்துக்குப் பின் வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமாகிவிடவேண்டும் என 1950ஆம் ஆண்டு ஜீன் மாதம் 26ஆம் திகதி உறுதி எழுதப்பட்டுள்ளது. குறித்த காணியைப் பிறருக்கு விற்கவோ நன்கொடையாக வழங்கவோ முடியாது என உறுதியில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது இந்தக் காணி கண்ணப்பன் வாமதேவி, திருமதி லலிதா நடேசமூர்த்தி, திருமதி சுகிர்தம் நிர்மலகாந்தன், மஹ்றூப் முகமது றபியுதீன் மற்றும் மஹ்றூப் முகமது றமீஸ் ஆகியோரின் பெயர்களில் சட்டவிரோதமாக மாற்றப்பட்டுள்ளது. தற்போது அந்தக் காணியில் தனிநபரொருவரினால் கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சட்டவிரோதச் செயலைக் கண்டித்தும் காணியை மீட்டுத்தரக் கோரியும் கண்டனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (த-ய-47)

## தள்ளுவண்டியில் பிரசவம் தவறி விழுந்ததில் சிசு சாவு

கொழும்பு, மே 4

கர்ப்பிணி ஒருவரை வைத்தியசாலை ஊழியர்கள் தள்ளுவண்டியில் (ட்றொலி) ஏற்றிச்சென்ற சமயம் அங்கேயே பிரசவமான குழந்தை தரையில் விழுந்து உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் கந்தவத்த, இஹலகுடலிகமவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பிரதேசவாசியான ஜோதி மோகன குமாரி எனும் 34 வயதுப் பெண்ணுக்குப் பிறந்த ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

இந்தப் பெண்ணின் கணவர் காலி, பூஸா சிறைச்சாலையில் எட்டு வருட சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார் எனவும், கடந்த செப்ரெம்பர் 6ஆம் திகதி ஒருவார விடுமுறையில் அவர் வீடு வந்திருந்தபோதே இந்தக் குழந்தை கருத்தரித்ததாக விசாரணைகளின்போது தெரிய வந்தது.

பிரசவ வலியுடன் பிம்புர வைத்தியசாலைக்கு ஓட்டோவொன்றின் மூலம் கொண்டுசெல்லப்பட்ட போதே சம்பவம் இடம்பெற்றது. விசாரணை நடப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த4)

## இலங்கைக்காகக் கட்டிய கப்பல் இந்தியாவில் வெள்ளோட்டம்

கொழும்பு, மே 4

இலங்கைக் கடற்படைக்காக இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பல் நேற்று முன்தினம் வெள்ளோட்டம் விடப்பட்டது.

இலங்கைக் கடற்படைக்காக இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை கோவா கப்பல் கட்டும் நிறுவனம் கட்டி வருகிறது. 105 மீற்றர் நீளமான இந்தக் கப்பல்கள் இரண்டும் விரைவில் இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்படவுள்ளன.

முதலாவது கப்பல் நீரில் இறக்கப்பட்டு வெள்ளோட்டம் விட்டுப் பார்க்கப்பட்டு, அதன் தொழில்நுட்பக் கருவிகள் உள்ளிட்டவற்றைப் பொருத்தும் இறுதிக்கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் பயிற்சிகளைப் பெறுவதற்காக இலங்கைக் கடற்படை அதிகாரிகள் குழுவொன்று ஏற்கனவே கோவா சென்றுள்ளது. இரண்டாவது ஆழ்கடல் ரோந்துக் கப்பல் நேற்று நீரில் இறக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. இதையடுத்து, கப்பலில் இறுதிக்கட்டத் தொழில்நுட்பக் கருவிகள் பொருத்தப்பட்ட பின்னர், இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கைக் கடற்படையிடம் கப்பல் ஒப்படைக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4)



## மைத்திரியின் மே தினத்தில் மகிந்த குடும்ப உறுப்பினர்

கொழும்பு, மே 4
முன்னாள் அரச தலைவர் மஹிந்த ராஜபக்சவின் குடும்ப அங்கத்தவர்களில் ஒருவரும் முன்னாள் பிரதியமைச்சருமான நிரூபமா ராஜபக்ச, மகிந்த ஆதரவு மே தினத்தில் கலந்துகொள்ளாது மைத்திரியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவருக்கு, அங்கு மூன்றாவது வரிசையிலேயே ஆசனமும் ஒதுக்கப்பட்டிருந்தது.

கூட்டு அரசினால் வழங்கப்பட்ட உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து விலகிய பிரியங்கர ஜயரத்னவும் கண்டிக் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தார். (த-4)

## இ.போ.சவுக்கு மே தினத்தில் வருமானம் ரூ. 82 மில்லியன்

கொழும்பு, மே 4
உலகத் தொழிலாளர் தினத்தன்று இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 83 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளுக்குப் பேருந்துகளை வழங்கியதால் மாத்திரம் 58.6 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார். (4)

## மத்திய மாகாண அமைச்சராக திலின பண்டார நியமிப்பு

கொழும்பு, மே 4
மத்திய மாகாண விளையாட்டு, கைத்தொழில், இளைஞர் விவகாரம், மகளிர் விவகாரம், விவசாய அமைச்சராக திலின பண்டார தென்னக்கோன்நியமிக்கப்பட்டுள் ளார்.

தனது தந்தையின் ஸ்ரீ ல.சு.க. அமைப்பாளர் பதவி பறிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மத்திய மாகாண சபையின் அமைச்சர் பிரமித் பண்டார தென்னக்கோன் பதவி விலகியதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க குறிப்பிட்டார். (த-4)

# தேர்தல் ஒன்று நடந்தால் மகிந்தவுக்கு தோல்வியே

### கூட்டங்களை நடத்தினாலும் பயனில்லை என்கிறார் சம்பிக்க



கொழும்பு, மே 4
மஹிந்த ராஜபக்ச எந்த வடிவத்தில் கூட்டங்களை நடத்தினாலும் தேர்தல் ஒன்று வந்தால் தோல்வியையே சந்திப்பார் என்று ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
"மஹிந்த ராஜபக்ச கடந்த தேர்தலுக்கு முன்னர் எத்தனை கூட்டங்களை நடத்தினார் என்பதை அறிவீர்கள். ஆனால் தோல்வியையே சந்தித்தார். அடுத்த தேர்தலிலும் என்ன நடக்கப் போகின்றது என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம். இந்த நாட்டு மக்கள் சரியானதீர்மானத்தை எடுப்பார்கள்.

தேர்தல் தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியினர் என்னதான் சொன்னாலும், அடுத்துவரும் செப்ரெம்பர் மாதம் ஆகும்போது மாகாண சபைத் தேர்தலை நடத்தவுள்ளோம்" என்றார். (த-4)

> “ மஹிந்த ராஜபக்ச கடந்த தேர்தலுக்கு முன்னர் எத்தனை கூட்டங்களை நடத்தினார் என்பதனை அறிவீர்கள். ஆனால் தோல்வியையே சந்தித்தார்

## பன்னாட்டு வெசாக் நிகழ்வுக்காக சிறப்பு ரயில் சேவைகள் ஏற்பாடு

கொழும்பு, மே 4
இலங்கையில் இடம்பெறவுள்ள பன்னாட்டு வெசாக் தினத்தை முன்னிட்டு சிறப்பு ரயில் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் மே மாதம் 14ஆம் திகதி முதல் சிறப்பு ரயில் சேவைகள் ஆரம்பமாகும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

உலக பௌத்த சம்மேளன வைபவத்துக்கென வருகை தரும் விருந்தினர்களின் நன்மை கருதி இந்தச் சிறப்பு ரயில்சேவை சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி நகருக்கு காலை 6.30 மணி மற்றும் காலை 7 மணி என இரண்டு சேவைகள் இடம்பெறும். குறித்த பிரதேசத்திலிருந்து மீளத் திரும்புவதற்கான ரயில் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-4)



## சம்பூர் இடப்பெயர்வு குறித்து நூல் வெளியீடு சனியன்று

மூதூர், மே 4
டாக்டர் அ.ஸதீஸ்குமார் எழுதிய சம்பூர் இடப்பெயர்வும் மீள்குடியேற்றமும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சம்பூர் மகாவித்தியாலய முன்னாள் மாணவர் வெளியகச் சங்கம், திருகோணமலை அமைப்பினரின் அனுசரணையில் சங்கத்தின் உபதலைவர் சி.ஜெயராசா ஆசிரியர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாணசபை அமைச்சர் சி.தண்டாயுதபாணி கலந்து கொள்ளவுள்ளார்.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கு.நாகேஸ்வரன், மூத்த சட்டத்தரணி ஆ.ஜெகசோதி மற்றும் இலக்கிய ஆர்வலர்களும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். நூல் அறிமுகவுரையை கவிஞர் க.யோகானந்தன், நூலாய்வை கவிஞர் தி.பவித்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ய-40)

## ஏறாவூர் இரட்டைக்கொலை; 6 சந்தேகநபர்கள் மறியலில்

செங்கலடி, மே04
மட்டக்களப்பு ஏறாவூர் இரட்டைக்கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள ஆறு பேரினதும் விளக்கமறியல் மே மாதம் 17ஆம் ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் மட்டக்களப்பு மேலதிக நீதிபதி எம்.ஐ.எம் றிஸ்வியிடம் முற்படுத் தப்பட்டபோது நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த 11.09.2016 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஏறாவூர் முகாந்திரம் வீதி முதலாம் ஒழுங்கையிலுள்ள வீட்டில் 56 வயதான என்.எம்.சித்தி உசைரா மற்றும் அவரது திருமணமான மகளான 32 வயதுடைய ஜெனீரா பாணு மாஹிர் ஆகியோர் பொல்லால் அடித்து கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 24 வயதுடைய முஹம்மது பாஹிர், வசம்பு என்றழைக்கப்படும் 28 வயதுடைய உசனார் முஹம்மது தில்சான், 23 வயதுடைய கலீலுர் ரகுமான் முஹம்மது றாசிம், 23 வயதுடைய புஹாரி முஹம்மது அஸ்ஹர், 30 வயதுடைய இஸ்மாயில் சப்ரின் மற்றும் 50 வயதுடைய அபூபக்கர் முகம்மது பிலால் என்ற ஆறு பேரும் சந்தேகத்தின் பேரில் கைசெய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றனர். (த-ய-47)

## போதை வர்த்தகருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, மே 4
பிரபல போதைப் பொருள் வர்த்தகரான மொஹமட் வசீம் மொஹமட் சித்தீக்குக்கு எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப் பட்டுள்ளது.

கொழும்பு முதன்மை நீதிவான் மன்றில் நீதிவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது மறியல் நீடிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட சித்தீக் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கிணங்க ஆறு மாதங்கள் தடுப்பில் வைக்கப்பட்டு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

போதைப் பொருள் கடத்தியமை, பணச் சலவை மற்றும் வெலே சுதா என்றழைக்கப்படும் கம்பொல விதானகே சமன் குமாரவுடன் தொடர்பு வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதுடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபரின் விளக்கமறியலை இம்மாதம் 16ஆம் திகதி வரை நீடித்ததுடன், வழக்கு ஜூலை 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உத்தரவிட்டார். (த-4)

## இந்து சமுத்திர நீரில் கழிவு - இலங்கைக்கும் பேராபத்து

கொழும்பு, மே 4
இந்து சமுத்திர நீரில் கழிவுகள் பரவுவதன் காரணமாக இலங்கை உள்ளிட்ட பல்வேறு தீவுகளுக்குப் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பூகோளவியல் பேராசிரியர் அதுல சேனாரத்ன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அண்மையில் வெளியிடப்பட்ட வரைபடமொன்றில் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்திய மற்றும் பங்களாதேஷ் நாடுகளின் சில நதிகளிலிருந்து சமுத்திரத்தில் சேரும் கழிவுகளால் இந்த நிலை ஏற்பட்டுள் ளது.

எனவே, இந்து சமுத்திர நாடுகள், பன்னாட்டுச் சட்டத்துக்கமைய செயற்படவேண்டும் என்று பேராதனைப் பல்கலைக்கழக பூகோளவியல் பேராசிரியர் மேலும் கூறினார். (த-4)

## முறையான அடிப்படையிலேயே ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு

அரச சேவை ஆணைக்குழுவின் உரிய அனுமதி மற்றும் முறையான ஒழுங்கு என்பனவற்றின் அடிப்படையிலேயே இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ளவர்களுக்குப் பதவியுயர்வு வழங்குவதற்குச் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் எனும் போர்வையில், ஆசிரியர் சேவையிலுள்ள 4 ஆயிரத்து 200 பேருக்குப் பதவி உயர்வுகளை வழங்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கு மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சட்டமா அதிபர் இவ்வாறு நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

சட்டமா அதிபர் சார்பில் மன்றில்முற்பட்ட மேலதிக சொலி சிட்டர் ஜெனரல் இன்திக தேமுனி டி சில்வா இந்த இணக்கத்தை அறிவித்துள்ளார்.

இந்த உடன்பாட்டுடன் வழக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த உடன்பாட்டுக்கு இரு தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குவ தாகக் கூறப்பட்டது. (த-4)


# ஒளியின் பயணங்களை படம் பிடிக்கவல்ல கமரா


## பிரம்மிக்க வைத்துள்ளது சுவீடன் பல்கலைக்கழகம்

ஒளியின் வேகத்தையும் அதன் பயணத்தின் பாதைகளையும் மிகத்துல்லியமாக படம்பிடிக்கவல்ல கமராவை சுவீடன் விஞ்ஞானிகள் படைத்துள்ளனர்.

சுவீடனில் உள்ள லுண்டு பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானி எலியாஸின் தலைமையிலேயே இந்தப் படைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ''இந்தக் கமராமூலம் ஒரு வினாடிக்கு ஒரு லட்சம் ஒளிப்படங்களை எடுக்க முடியும். ஒளியின் பயணம், விலங்குகளின் மூளைச் செயற்பாடு, இயற்கையின் நுணுக்கமான மாற்றங்கள், குண்டு வெடிப்புக்கள், வேதியல் பொருள்களில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றை ஒளிப்படம் எடுப்பதற்காகவே இந்தக் கமரா உருவாக்கப்பட்டது'' என்று எலியாஸ் தெரிவித்தார்.

இந்தக் கமராமூலம், கண் இமைப்பதை படமெடுத்து தற்போதைய திரைப்படங்கள் உருவாக்கப்படும் வேகத்தில் காணொலியாக மாற்றினால் அதைப்பார்த்து முடிக்க 2 ஆயிரம் ஆண்டுகள் ஆகுமாம். (ம)





# மோசூல் மருத்துவமனை ஈராக் படைகளால் மீட்பு


## உச்சம் தொட்டுள்ளது போர்

பக்தாத், மே 4

ஈராக்கின் மோசூல் நகரின் மேற்குப் பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக நடைபெற்றுவரும் போர் மிகவும் உச்சம் தொட்டுள்ளது. ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்த மேலும் சில இடங்கள் திரும்பக் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமும் வர்த்தக நகருமான மோசூல் இருந்தது. இதன் கிழக்குப் பகுதி கைப்பற்றப்பட்டுவிட்ட நிலையில் மேற்குப் பகுதிக்கான போர் தற்போது நடைபெற்று வருகிறது. மேற்குப் பகுதியிலும் பெரும்பாலான இடங்கள் அரச படையால் மீட்கப்பட்டுவிட்டன. இன்னும் ஒருசில இடங்களே எஞ்சியுள்ளன என்று சொல்லப்படுகிறது.

மேற்கு மோசூலின் முக்கிய தேவாலயம், முக்கிய பள்ளிவாசல்கள், ஆளுநர் அலுவலகம், பல்கலைக் கழகம், கல்லூரிகள், அரச அலுவலங்கள் ஆகியன ஏற்கனவே கைப்பற்றப்பட்டிருந்தன. இந்த நிலையில் அந்த நகரின் முக்கிய மருத்துவமனை நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது. மோசூல் பல்கலைக் கழகத்தின் ஆய்வுகூடங்களை ஆய்வுகூடங்களையும் இரசாயன ஆயுதங்களை உருவாக்க அந்த அமைப்பு பயன்படுத்தியுள்ளது என்று ஈராக் இராணுவம் தெரிவித்தது. எனினும் அவ்வாறு தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் மிகவும் சக்திவாய்ந்தவையாக இருக்கப் போவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.



ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இரசாயன ஆயுதங்களை உருவாக்கப் பயன்படுத்தியதைப்போல் மருத்துவமனையின்

### மக்களின் மீட்பு மந்த கதியில்

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து முக்கிய இடங்களைக் கைப்பற்றிய போதிலும், ஆயுததாரிகளின் பகுதிகளில் உள்ள மக்களை மீட்கும் பணிகள் மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. ஐ.எஸ். அமைப்பினர் அவர்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்தும் சந்தப்பங்கள் தற்போது அதிகரித்துள்ளன. அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து தப்ப முயல்கிற்வர்களை அந்த அமைப்பு படுகொலை செய்கிறது.

இதனாலேயே மக்களின் மீட்பு மந்தமாகியுள்ளது. கிட்டத்தட்ட மூன்று லட்சம் மக்கள் மீட்கப்படவேண்டியவர்களாக உள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

ஏவுகணை தடுப்பு விவகாரம்

# அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை

பீஜிங், மே 4

தென்கொரியாவில் அமெரிக்கா அமைத்துவரும் ஏவுகணை தடுப்பை திரும்பப் பெறவேண்டும் என்றுசீனா எச்சரிக்கை விடுத்தது.

வடகொரியா ஏவுகணைகளை வீசினால் அதை நடுவானில் தடுத்து நிறுத்தி அழிக்கும் திறன் கொண்ட ஏவுகணை தடுப்பு சாதனத்தை தென் கொரியாவில் அமெரிக்கா நிறுவியுள்ளது. இதற்கே சீனா தனது கண்டனத்தையும் எச்சரிக்கையையும் தெரிவித்தது.

இதுகுறித்து சீன அயலுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் ஜெங், பீஜிங்கில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில், "தாட்எனப்படும்ஏவுகணை தடுப்பு சாதனத்தை தென் கொரியாவில் அமெரிக்கா நிறுவியுள்ளது. இதனை உடனடியாக அகற்ற வேண்டும். இல்லையெனில் சீனாவின் தற்காப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்" என்று எச்சரிக்கை விடுத்தார். வடகொரியாவுக்கு எதிரான தனது நகர்வுக்கு சீனா ஆதரவு தரக்கூடிய சூழ்நிலைகளை அமெரிக்கா ஏற்படுத்தியிருந்தது. சீன அதிபர் ஜிங் பிங்கின் அமெரிக்கச் சுற்றுப்பயணம், சீனா, சீனமக்களுக்கு ட்ரம்ப் கடந்த சில நாள்களாக கொடுத்துவந்த திடீர் புகழாரம் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இந்த நிலையில், வடகொரிய விவகாரத்தில் அமெரிக்காவை சீனா எச்சரிப்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. ஒருவேளை அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் முறுகல் ஏற்பட்டால் அது கொரியத் தீபகற்பத்தில் கூட்டுப்படைகளின் மோதலுக்கு வித்திடலாம். (ம)



# பாரிஸ் ஒப்பந்த விடயத்தில் ட்ரம்புக்
# தொடரவேண்டும் என்று உச்சக்க

வொஷிங்டன், மே 4

உலகின் வெப்பநிலையை இரண்டு செல்சியஸ் குறைவடையச் செய்ய வேண்டும் என்று கடந்த 2015 ஆம் ஆண்டு பிரான்ஸின் தலைநகர் பரிஸில் செய்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிக்கொள்ளக்கூடிய அறிகுறிகளை அதிபர் ட்ரம்ப் வெளிப்படுத்தினார்.

இதையடுத்து அவரது நிலைப்பாட்டுக்கு எதிராக அமெரிக்காவின் பல பாகங்களிலும் கடந்த நான்கு நாள்களாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப், பொறுப்[illegible] 100 நாள நி[illegible]



# வெனிசுலா அதிபருக்கு எதிராகப் பரவலாக வெடித்த வன்முறை



கரஸ்கஸ், மே 4
தென்னமரிக்கநாடான வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக அங்கு ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தற்போது மிகப்பெரும் வன்முறையாகநீண்டு செல்கிறது.

மதுரோவின் ஆட்சியில்வரலாறுகாணாத பொருளாதார வீழ்ச்சியையும் உணவுத் தட்டுப்பாட்டையும் அந்த நாடு எதிர்கொண்டது, கொள்கிறது. மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளை அட்டைப் பெட்டியில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றன. உணவு, உலர் உணவு என்பன கிடைப்பதென்பது அரிதிலும் அரிது. உண்வகங்கள், நட்சத்திர விடுதிகள் ஆகியவற்றால் கொட்டப்படும் கழிவு உணவை தெரிந்து எடுத்து பசியாற்றுவதற்கும் அங்கு வரிசையில் நிற்க வேண்டிய நிலமை. இவ்வாறு சென்றால் அந்த நாடு இன்னும் சில மாதங்களில் 700 சதவீதம் பணவீக்கத்தை எதிர்கொள்ளும் என்று உலக நாணய நிதியம் எச்சரித்துள்ளது. இத்தகைய பின்னணியிலேயே ஆட்சி மாற்றத்துக்கான போராட்டம் ஆரம்பித்தது.

எதிர்கட்சித் தலைவர் லொபாஸ் இந்தப் போட்டங்களுக்கு வித்திட்டார். தற்போது அவர் கைதுசெய்யப்பட்டு சிறையிடப்பட்டுள்ளார். லொபாஸின் விடுதலையையும், மதுரோவின் பதவி விலகலையும் வலியுறுத்தி தலைநகர் கரஸ்கஸ் உள்ளிட்டு பல்வேறு நகர்களில் கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன.

அரச தரப்பினருக்கும் இளைஞர்களுக்கும் இடையே கலவரம் வெடித்துள்ளது. தற்போது இந்தக் கலவரங்கள் பெரும் வன்முறைகளாக உருப்பெற்றள்ளன. இதேநிலை தொடர்ந்தாலும் பதற்றம் மேலும் அதிகரிக்கும் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## சிரியப் போரை முடிக்க ட்ரம்ப் - புடின் ஆலோசனை

வொஷிங்டன், மே 4
சிரியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பில் ரஷ்ய அதிபர் புடினும், அமெரிக்க அதிபர் ட்ரம்பும் தொலைபேசியில் ஆலோசனை நடத்தினர் என்று வெள்ளை மாளிகை தெரிவித்தது.

ஏற்கனவே இரு தடவைகள் ட்ரம்ப் - புடின் இருவரும் தொலைபேசியில் சந்தித்து உரையாடியுள்ளனர். நேற்றுமுன்தினம் நடந்த இந்த உரையாடல் மூன்றாவது உரையாடலாகப் பதிவானது.

சிரியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப்போரை (சிரிய அதிபர் அல் அசாத்தை பதவி விலக வேண்டும் என்று தோற்றம் பெற்ற கிளர்ச்சிக் குழுவுக்கு எதிரான போர்) முடிவுக்கு கொண்டு வரவேண்டும், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள திவிரவாத அச்சம், வடகொரியாவுடன் உள்ள போர்ப் பதற்றநிலை ஆகியவை தொடர்பில் இந்த உரையாடல் அமைந்தது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## ஐ.எஸ். தாக்குதல் சிப்பாய்கள் சாவு

பக்தாத், மே 4
ஈராக்கின் அன்பர் மாகாணத்தில் உள்ள இராணுவ நிலைகள் மீது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 10 சிப்பாய்கள் உயிரிழந்தனர். அன்பர் மாகாணத்தின் மேற்கு பகுதியில் அல் ரூட்பா என்ற இடத்தில் ஈராக் இராணுவத்தில் முக்கிய நிலை உள்ளது. அங்கு அவ்வப்போது போர்ப்பயிற்சிகளும் இடம்பெறும். சிப்பாய்களைப் போன்று வேடமிட்ட ஆயுததாரிகள் அங்கு நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது.

உயிரிழந்த 10 சிப்பாய்களை விட மேலும் ஆறுபேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

## ஸ்பைடர்மனுக்கு வந்த சோதனை



சீனாவின் ஆபத்தான மலைப் பகுதிகளைப் பல லட்சக்கணக்கான மக்கள் ஆண்டுதோறும் பார்வையிடுகிறார்கள். சினாவின் முக்கிய சுற்றுலா மையங்களாக இவ்வாறான ஆபத்தான மலைகள் மாறியுள்ளன. இந்த மலைகளில் பயணிகளால் வீசப்படும் குப்பைகளை சுத்தம் செய்வதற்கு ஸ்பைடர்மன் வேலையாள்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர்.

செங்குத்தான பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள குப்பைகளைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுபவர்கள் ஸ்பைடர்மனின் உடையை அணிந்து செல்கின்றனர். 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் தற்போது மிகவும் வெற்றியளித்திருக்கிறது என்று சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. மலைகளைப்பார்ப்பதற்காகவருகிறார்களோ இல்லையோ ஸ்பைடர்மன் வேலையாள்களைப் பார்க்க கூட்டம் தற்போது முட்டிமோதுகிறதாம். என்ன இது ஸ்பைடர்மனுக்கு வந்த சோதனை. (ம)

## த எதிராகப் பேரணி;
## கட்ட வலியுறுத்தல்

விழா பென்சில்வேனியாவில் கடந்த சனிக்கிழமை கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில்வைத்தே பரிஸ் ஒப்பந்தத்தில் விலகுவது தொடர்பான நிலைப்பாட்டை ட்ரம்ப் வெளிப்படுத்தினார்.

இதையடுத்து கடந்த 31 ஆம் திகதி, உலகத்தொழிலாளர் தினமான இந்த மாதம் முதலாம் திகதி, நேற்றுமுன்தினம், நேற்று என அமெரிக்காவின் பல பாகங்களிலும் ட்ரம்பின் நிலைப்பாட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் நடத்தப்பட்டன. நேற்றுமுன்தினம் அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பென்சில்வேனியா, மெச்சிக்கன், வொஷிங்டன், நியூயோர்க், மிசிசிபி, கலிபோர்னியா, லொஸ் ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் மிகத் தீவிரமாகநடத்தப்பட்டனஎன்று பன்னாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டன. (ம)



உக்ரைனில் உள்ள தேசிய மிருகக் காட்சிச்சாலையில், பார்வையாளர்கள் வன விலங்குகளை மிக அருகில் இருந்து பார்க்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வனவிலங்குகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அறைகளைச் சுற்றி கண்ணாடிச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. பார்வையாளர்களுக்குத் 'திரில்' அனுபவமொன்றை ஏற்படுத்துவதற்காகவே இந்த முயற்சி என்று மிருகக்காட்சிச் சாலையின் [illegible]ாகம் தெரிவித்தது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை

உலக சுதந்திர தினமான நேற்று அதிர்ச்சியளிக்கும் உண்மையைப் போட்டுடைத்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் குழுமத்தின் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன். பனையால் விழுந்தவனைமாடேறிமிதித்தகதையைப்பட்டவர்த்தனமாக்கியிருக்கிறது அவரது கருத்து. இலங்கையில் மிக மோச மான ஊடக அடக்குமுறைக்குள் சிக்கியிருந்த ஊடகங்கள் அதிலிருந்து மீண்டுவரும் முயற்சியில் இருக்கையில் அதனைக்கட்டுப்படுத்தும்வகையில் இந்திய அதிகாரிகளும் நடந்துகொண்டிருப்பது ஒரு துன்பியல் நிகழ்வு.

உலகில் மக்களாட்சிக்கு, பன்மைத்துவத்துக்கு சகிப்புத் தன்மையைப்போதித்த அகிம்சைக்குஉதாரணமாகக்கொள்ளப்படும்இந்தியநாட்டின்அதிகாரிகள்இலங்கையில், தமிழ் மக்கள்விடயத்தில் இவ்வளவு மோசமாக நடந்து கொள்வது வெட்கப்பட வேண்டியது; வேதனைப்பட வேண்டியது.

உலகுக்கு அகிம்சையைப் போதித்த காந்தியின் அடிநாதமே சகிப்புத்தன்மைதான். ஆனால் இந்திய அதிகாரிகள் தமது சகிப்புத் தன்மையைத் தூர எறிந்துவிட்டு ஊடகங்களின் சுதந்திரத்தை, அதுவும் மற்றொரு நாட்டின் ஊடகத்தைக் கட்டுப்படுத்த முயன்றிருப்பதும், அதில் எழுதாதீர்கள் என்று எழுதுபவர்களைத் தனது பலம் காட்டி மிரட்டுவதும் மிக மோசமான செயல்.

உதயன் பத்திரிகையில் தன்னுடைய கருத்தை ஒருவர் தெரிவித்தார் என்பதற்காக, அதுவும் புனைபெயரில் எழுதப்பட்ட ஒன்றுக்காக அவரை விசாரணைக்கு உட்படுத்தி அவருக்கு விசா வழங்க மறுத்து, அவரது கலாநிதிப்பட்ட ஆய்வைப் பாழ்படுத்தியிருப்பது மிலேச்சத்தனமானது. ஒரு நாட்டைச் சேர்ந்தவர் மற்றொரு நாட்டுக்குச் செல்வது அவரது பிறப்புரிமை இல்லை என்றாலும்கூட, கருத்துச் சுதந்திரத்தைப் பறிப்பதற்காக ஒரு நாட்டின் விசாவைப் பயன்படுத்துவது கொடுமையிலும் கொடுமையானது.

அதுவும் இங்கே இசையை வளர்க்கிறோம், கலாசாரத்தை வளர்க்கிறோம், உறவை வளர்க்கிறோம் என்று கூறிக்கொள்ளும் இந்தியத்துணைத்தூதரகமே இசைத்துறையைச்சேர்ந்த ஒருவர்தனதுகலாநிதிப்படிப்பைநிறைவுசெய்வதைத்தடுத்திருக்கிறது எவ்வளவு கொடுமையானது. அதிலும் இந்தியாவுக்கு எதிரான செய்திகளையும் ஆக்கங்களையும் வெளியிட்ட ஒருபத்திரிகையில் எழுதிய நீங்கள் பின்னர் ஏன் இந்தியாவுக்குப் படிக்கச்செல்கிறீர்கள் என்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் சீறிச் சினந்திருப்பது அவர்களின் உள்நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

இது சரியா? உள்ளூர் கலைஞர்கள் இருக்கும்போது அவர்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தாமல் ஏற்கனவே வளம்பெற்றிருக்கக்கூடிய கலைஞர்களை அழைத்து வருவதும், அவர்களுக்குச் செலவு செய்வதும் நியாயமா என்று கேட்ட ஒருவரை, அப்படிக் கேட்டதே இந்தியாவுக்கு எதிரானது என்று கூறி விசா வழங்க மறுப்பது எந்த விதத்தில் நியாயமானது?

இந்தியத் தூதரகத்தின் நிகழ்வுகளிலே, அதன் அனுசரணையில் நடக்கும் நிகழ்வுகளிலே, முதன்மை வரிசையில் அமர்ந்திருக்கக்கூடிய யாழ்ப்பாணத்தின் கற்றறிந்த பெருமக்களிடம் இந்தக் கேள்வியை முன்வைக்க உதயன் விரும்புகிறது. உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச்சொல்லுங்கள். இதற்காகத்தானா, இந்திய வல்லாதிக்க மனோபாவத்தை யாழ்ப்பாணத்தில் மேலோங்கச் செய்வதற்குத்தானா நீங்கள் பக்கத்துணையிருக்கப் போகிறீர்கள்?

இப்படிப் பத்திரிகையில் எழுதுபவர்களைத் தடுப்பதற்கும் அவர்களைத்தண்டிப்பதற்கும் முயல்வதன் மூலம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் ஊடகங்களை மிரட்டவும் கட்டுப்படுத்தவும் முயன்றிருக்கிறார்கள். இந்தியாவின் கொள்கைகளை விமர்சிப்பவர்கள் எதிர்காலத்தில் அந்த நாட்டுக்குச்செல்ல முடியாது என்ற எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்கள்.

இராணுவத்தினதும் படைகளினதும் புலனாய்வாளர்களதும் கெடுபிடிகள், அடக்குமுறைகளில் இருந்து மீண்டு கொஞ்சமாவது சுதந்திரமாகச் செயற்படலாம் என்று ஊடகங்கள் முனையும்போது அவற்றின் மீது இந்திய அதிகாரிகளின் செயல் இடியெனஇறங்கியிருக்கிறது. இதுஉடனடியாகநிறுத்தப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும்.



# மோடியின் வருகையை கணக்கில் எடுக்காத தமிழ் மக்கள்

சேரலாதன்

யாழ்ப்பாணம் உட்படத் தமிழர் பகுதிகளுக்குச் சென்று இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி அங்குள்ள நிலமைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு இலங்கைக்குப் பயணமொன்றை மேற்கொள்ளவிருக்கும் இந்தியத் தலைமை அமைச்சரிடம் தமிழ்த் தேசிய இயக்கத்தலைவர்பழ. நெடுமாறன் கேட்டுக் கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வேண்டுகோளுக்குத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி செவி சாய்ப்பாரென எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், இந்தியமத்திய அரசின்கணிப்பில் இந்தியத் தமிழர்கள் எப்போதுமே இரண்டாவது பட்சம்தான். இலங்கையின் இறுதிப் போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படுவதற்கும், தமிழர்கள் அழிக்கப்படுவதற்கும் இந்தியாவே முக்கிய காரணமாக இருந்துள்ளது. விடுதலைப்புலிகள்மீதானவஞ்சத்தைத் தீர்க்கவெனப் புறப்பட்ட இந்தியா, ஈழத்தமிழர்களின்உயிர்களையும், உடமைகளையும் ஒருபொருட்டாக மதிக்கவில்லை. விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதில் இலங்கையைவிட இந்தியாவுக்குத்தான் அதிகளவில் மகிழ்ச்சி ஏற்பட்டது.

### ஈழத்தமிழர்கள் விடயத்தில் மனச்சாட்சியுடன் நடக்காத இந்தியா

இந்தியா ஒரு மனச்சாட்சியுள்ள நாடாக இருந்திருந்ததால், போரினால் சின்னாபின்னமாக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்குத்தேவையான உதவிகள் அனைத்தையும் வழங்கியிருக்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகள்தொடர்பாகஇலங்கை அரசுடன் பேசி ஒரு முடிவைக் கண்டிருக்க வேண்டும்.

ஆனால் இலங்கை அரசுக்குச் சார்பாக நடந்து கொள்வதற்கே இந்தியா முயன்று வருகின்றது. ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்குஇலங்கைதொடர்ந்து பின்னடித்து வருகின்றது. குறிப்பாக இறுதிப் போரின் போது இடம் பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றைப் பன்னாட்டுநீதிபதிகளின் பங்களிப்புடன் விசாரணை செய்யவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டதை இலங்கை கருத்தில் கொள்ளாது காலத்தைக் கடத்துவதில் ஈடுபட்டு வருகின்றது. இறுதியாக இடம் பெற்ற மனித உரிமைகள் சபையின் அமர்வில் சபையின் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்குமேலும் இரண்டுவருடகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு இந்தியாவும் உதவி புரிந்துள்ளது. போரின்போது பாதிக்கப்பட்ட தமிழர்கள் மீது இந்தியாவுக்குச் சிறிதும் அக்கறையில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. மேலும் பன்னாட்டு ஆதரவிலான போர்க்குற்ற விசாரணையொன்று இடம் பெற்றால், தானும் மாட்டிக்கொள்ள நேரிடுமோ என்ற அச்சமும் இந்தியாவிடம் நிறையவே உள்ளது.

> “ தமக்கு இந்தியா புரிந்த துரோகத்தை அவர்கள் இன்னமும்மறக்கவில்லை. தமது போராட்டத்தை ஒடுக்குவதற்கு இந்தியா கொண்டிருந்த ஆர்வம் அளவுக்கு, தம்மீது சிறிதளவும் அனுதாபம் இல்லையென்பது இவர்களது ஆதங்கமாகும்.

### தெற்காசியாவில் சீனாவின் ஆதிக்கம் வலுக்கிறது

தெற்காசியாவில் தன்னையொரு வல்லரசாகப்பாவனைசெய்துவருகின்றது இந்தியா. 1947 இல் பாகிஸ்தான் என்ற நாடு இந்தியாவிலிருந்து பிரிந்து உருவாகுவதற்குமுன்னர் இந்தியாவை ஓர் உபகண்டம் என்றே அழைத்தார்கள். அந்த அளவுக்கு நிலப்பரப்பில் மட்டுமல்லாது மக்கள் தொகையிலும் இந்தியா தெற்காசியாவில் முதன்மை நாடாகத் திகழ்ந்தது. சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகளில் மிகப் பெரியது இந்தியாதான். ஆனால் ஏனைய சார்க் அமைப்பிலுள்ள நாடுகள் அனைத்தும் இந்தியாவின் கொள்கைகளை ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. சீனா தெற்காசிய நாடுகளுக்கு பொருளாதார மற்றும் இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றது. சீனாவிடமிருந்து உதவிகளைப் பெறுகின்ற நாடுகள் அதற்காகசீனாவுக்குத்தமது விசுவாசத்தைக் காட்ட முனைகின்றன.

இலங்கையும் இதற்கு விதி விலக்கல்ல. விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற போரின்போது சீனா இலங்கைஅரசுக்குத்தேவையான அளவு ஆயுத உதவிகளை அள்ளி வழங்கியது.

அத்துடன்போர்முடிவுக்குவந்ததன் பின்னரும் கடன்களைப் பெருமளவில் வழங்கியது. மகிந்த ராஜபக்ச அரச தலைவரராக இருந்தபோது, சீனாவுடன் நெருக்கமான உறவுகளைப் பேணிவந்தார். இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி ஏற்கனவே இலங்கைக்கு வருகை தந்திருக்கின்றார். இந்த முறை அவரது வருகை பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### மோடியின் வருகையைக் கணக்கில் எடுக்காத தமிழ் மக்கள்

இந்திய வம்சாவழி மக்கள் அதிகமாகவாழ்கின்ற மலையகத்துக்கும் அவர் செல்வாரெனத்தெரிகின்றது. மோடியை வரவேற்பதற்கான ஏற்பாடுகளில்ஒருசாரார்முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளனர். மறுசாரார் அது குறித்து ஆர்வம் காட்டாத நிலையிலுள்ளனர்.

இலங்கைத்தமிழர்களைப்பொறுத்தவரையில்மோடியின்வருகையை அவர்கள்முக்கியமானவிடயமாகக் கருதவில்லை என்பது தெளிவானது. தமக்கு இந்தியாபுரிந்த துரோகத்தை அவர்கள் இன்னமும்மறக்கவில்லை.தமதுபோராட்டத்தைஒடுக்குவதற்கு இந்தியா கொண்டிருந்த ஆர்வம் அளவுக்கு, தம்மீது சிறிதளவும் அனுதாபம் இல்லையென்பது இவர்களது ஆதங்கமாகும். இந்த நிலையில் மோடியின் வருகையால் தமிழர்களுக்கு எதுவுமே கிடைத்துவிடப்போவதில்லை என்பது தான் யதார்த்தம்.

சி.நற்குணலிங்கம்

# வியட்நாம் நாட்டுடனான உறவை மேம்படுத்த முயலும் இலங்கை

தென்கிழக்காசிய வளர்முக நாடுகளுள் வியட்நாம்நாடும்ஒன்று. இது கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகளுக்கு அண்மையில் இருப்பதுடன், இந்த நாடுகளுடன் நட்புறவையும் பேணி வருகின்றது.

ஹனோய்இந்தநாட்டின் தலைநகர். அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளின்தலையீட்டுக்குஉட்பட்டிருப்பினும் வியட்நாம், இன்று நிமிர்ந்து நிற்கும் ஒரு நாடாகும். இது வட வியட்நாம், தென்வியட்நாம்எனஇரு பகுதிகளைக் கொண்டது. வடக்கு தெற்காக இந்த நாட்டின் நீளம் 2000 கி.மீ ஆகும். 63 மாகாணங்களாகப்பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 310060 ச.கி.மீஆகும். நாட்டின்சனத்தொகை இன்று, 92.7 மில்லியனாகஉள்ளது. ஆரம்ப காலங்களில் ஒரு குடும்பத்துக்கு 2 குழந்தைகளே இருக்கமுடியும் என்ற சட்டம் நிலவியது. 2004ஆம் ஆண்டு அந்தச் சட்டம் நீக்கப்பட்டு, இரண்டுபிள்ளைகளுக்கு கூடுதலாகவும் பெற்றுக்கொள்ள முடியும் எனச் சட்டம்உருவாக்கப்பட்டது. இன்று வியட்நாமின் சனத்தொகை அடர்த்தி ச.கி.மீக்கு 308 பேர் ஆகும்.


### வியட்நாம்நாடு தொடர்பான புள்ளி விவரத் தகவல்கள்


பணப் பெறுமதி குறைந்த இந்த நாட்டின் நாணய அலகு 'டொங்' என அழைக்கப்படுகின்றது. வைகாசி மாதம் முதல் புரட்டாதி மாதம் வரை மழை காலமாகவும், ஐப்பசி மாதம் முதல் பங்குனி மாதம் வரை கோடை காலமாகவும் இந்த நாட்டின் காலநிலை காணப்படுகின்றது. கோடை காலத்தில் சராசரி வெப்பநிலை 320 செல்சியஸ் ஆகும். வியட்நாம் மக்கள் சிவப்பு, மஞ்சள் நிறங்களை தமது அதிர்ஷ்ட நிறங்களாகக் கருதிப் பயன்படுத்துகின்றனர். அதிர்ஷ்ட எண்ணாக 9 ஐயும், துரதிர்ஷ்ட எண்ணாக 13ஐயும் கருதுகின்றனர்.

அரிசியைக் கூடுதலாக ஏற்றுமதி செய்வதன் மூலமும், எண்ணெய் ஏற்றுமதி மூலமும், சுற்றுலாத்துறை மூலமும் இந்த நாடு அதிக வருமானத்தை ஈட்டுகின்றது. வியட்நாமின் நிலப்பரப்பில் 42 வீதம் அயனமண்டலக் காடுகளாகவும், 40வீதமலைகளாகவும்,20வீதத்துக்குக் கூடாமல் சமதரையாகவும் காணப்படுகின்றன.

வியட்நாமின் மிக உயரமான மலை பாங்ஷிபாங்மலையாகும்.இதன்உயரம் 10312 அடியாகும்.

வியட்நாமின் பிரதான இனமாக 'வியட்' அல்லது 'கின்ச்' என அழைக்கப்படும் இனம் விளங்குகின்றது. இந்த இனம் முழுச் சனத்தொகையில் 85.8 வீதமாகும். முற்றிலும் வேறான 54 வகை மக்கள் குழுக்களை இந்த நாட்டில் காணலாம். குழுக்கள்ஒவ்வொன்றும்தமக்கெனச் சொந்த மொழி, வாழ்க்கை முறை, கலாசாரம் என்பவற்றைக் கொண்டுள்ளன. வியட்நாம்மக்களின்பிரதானமதம் மகாஜானபௌத்தமாகும். 85வீதமான மக்கள்பௌத்தர்களாகவும், 7 வீதமான மக்கள் கத்தோலிக்க மதத்தவர்களாகவும் காணப்படுகின்றனர். வியட்நாம் மக்கள் பிரதானமாக இரண்டு வகையான மொழியைப் பயன்படுத்துகின்றனர். பொதுமக்களுக்கான மொழி, எழுதப்பட்ட மொழி என்பவை அவை.





வியட்நாமின்இருமுக்கியநகரங்களாக ஹனோய், சைகோன் காணப்படுகின்றன. இவை வட வியட்நாமிலுள்ள நகரங்களாகும்.

### வியட்நாம் மக்களது வாழ்க்கை நிலை

தலைநகரானஹனோயில்7மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இவர்களின் 5 மில்லியன் மக்களிடம் மோட்டார் சைக்கிள்கள் உள்ளன. இவை இந்த நாட்டின் உற்பத்தியாக இருப்பதால் குறைந்த விலையில் மக்கள் அவற்றை கொள்வனவு செய்யக் கூடியதாக உள்ளது. வீதியில் மோட்டார் சைக்கிள்கள் அதிகம் காணப்பட்டாலும், விபத்துக்களும்மிகக் குறைவாகவே நிகழ்கின்றன. ஹனோயில் சுவேட் ஏரி, நாகோசன் கோயில், கவர்ச்சியான நீர்ப்பொம்மலாட்டக் காட்சியகம்,புன்னைமரத்திலானஉல்லாசக் கப்பல்பிரயாணம்,கைத்திறன்வேலைத் தளங்கள், மாபிள் கற்களாலான சிலைகள்,சுண்ணாம்புக்கற்களாலானபாறைகள், மிதக்கும் கிராமம் ஆகியவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்பவை.

ஹனோயிலிருந்து 17000 கி.மீ. தூரத்தில் சைகோன் நகரம் காணப்படுகின்றது. சைகோனுக்கு உள்ளூர் விமான சேவைமூலம் செல்ல இரண்டுமணித்தியாலயங்கள்தேவை. 13மில்லியன்மக்கள்சைகோனில்வாழ்கிறார்கள். சைகோனில்1975புரட்டாதி04ஆம்திகதிஅமைக்கப்பட்ட, வியட்நாம் நாடு எதிர்கொண்ட போரைநினைவுபடுத்தும்பொருட்காட்சி நிலையம், மற்றும்4500ச.கி.மீபரப்பளவுள்ள 26 மீற்றர் உயரமான 95 அறைகளைக்கொண்டதும்,1962ஆம்ஆண்டு அமைக்கப்பட்டதுமான அரண்மனை, 1886ஆம் ஆண்டு பிரெஞ்சுக்காரரால் அமைக்கப்பட்டதபாற்கந்தோர், தேங்காயுடன் தொடர்பான தொழிற்சாலைகள், நீண்ட கால்வாய்கள், சீன நாட்டில் உற்பத்தியாகி சைகோனில் கழிமுகமாகும் 4320 கி.மீநீளமான மீகொங் நதி, 250 கி.மீநீளமான சைகோன் நதி, மலை நதி முதலியவற்றின் அடியில் துளைத்த குகைப் பாதைகள், போர்க்காலங்களில் பயன்படுத்திய ஆயுதங்கள், ஆயுதக் கிடங்குகள், ஆயுத உற்பத்தி மாதிரித் தொழிற்சாலைகள், எதிரிகளைப் பிடிப்பதற்குப் பயன்படுத்திய பல்வேறு வகையான பொறிகள் , வேறுபட்ட பங்கர்கள், தாங்கிகள் என்பவற்றை பார்வையிட முடியும். எம்முடன் கூட வந்திருந்த சுற்றுலாப்பயணிகளுள் ஐரோப்பியநாட்டவர்களும், எமது நாட்டைச் சேர்ந்த பெரும்பான்மை இனமக்களும், குறிப்பாக பங்கர்களுக்குள் இறங்கி படங்களும் எடுத்துக் கொண்டனர். அவ்வேளை சிலர் என்னை ஏன் பங்கருக்குள் இறங்கிப் பார்க்கவில்லை எனக் கேட்டனர். அப்போது, எமது நாட்டின் போர்க்கால நினைவுகளை என்னால் மனதுக்குள் மீட்டிப் பார்க்கக் கூடியதாக இருந்தது. வருடம் தோறும் 10 லட்சம் மக்கள் இவற்றைப் பார்வையிட வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எமது நாடும் வியட்நாம் நாட்டுடன் நல்லுறவைப் பேணி வரும் ஒரு நாடாகும். அண்மையில் எமதுநாட்டுதலைமைஅமைச்சர்வியட்நாம் நாடு சென்று அந்த நாட்டுஅரசுடன் கல்வி,விவசாயம்தொடர்பானஉடன்படிக்கைகளில்கைச்சாத்திட்டதுடன்,இருநாடுகளுக்குமிடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதில் அக்கறை செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

> “ 2004ஆம் ஆண்டு அந்தச் சட்டம் நீக்கப்பட்டு, இரண்டு பிள்ளைகளுக்கு கூடுதலாகவும் பெற்றுக்கொள்ள முடியும் எனச் சட்டம் உருவாக்கப்பட்டது. இன்று வியட்நாமின் சனத்தொகை அடர்த்தி ச.கி.மீக்கு 308 பேர் ஆகும்.





## ஆசிரியருக்கான கடிதம்


### நாய்களின் தொல்லை நீங்க வழி செய்யப்படுமா?

கடந்து போன மகிந்த ஆட்சியில் கடும் சிரமம் தருவதாக இருந்த போதிலும், இன்றைய நல்லாட்சியிலும் கூட நாய்களது தொல்லை குறைந்தபாடாய் இல்லை. நாய்களால் நாங்கள் நாய்படாப்பாடு படுகின்றோம். ஆறு நாய்கள் ஒன்றுசேர்ந்து ஒரு சிறுவனைக் கடித்து குதறியதாக ஒரு பத்திரிகைச் செய்தி. ஒருவர் வளர்த்த குட்டி நாய், விசர் நோய்க்கு உட்பட்ட நிலையில், அது கவ்விக் காயம் ஏற்படுத்தியதால் அந்தக் குட்டி நாயை வளர்த்தவரும் நீர் வெறுப்பு நோய்க்குள்ளாகி இறந்தார் என்ற செய்தியும் அண்மையநாளொன்றில்வெளியான பத்திரிகைச் செய்தியே.

பல விபத்துக்களுக்கும் காரணமாக நாய்களே அமைகின்றன. உள்ளூராட்சி நிறுவனங்கள் இன்ன இன்ன இடங்களில் இன்னின்ன நாள்களில் நாய்களுக்கான விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவித்து. அதன் படியே நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அந்த பகுதிகளைச் சேர்ந்த அத்தனை நாய்களும் குறிப்பிட்ட இடத்துக்குக் கொண்டு வரப்பட்டுதடுப்பூசி ஏற்றுவிக்கப்படுவதில்லை. ஆயினும் பெரும்பாலும் வீட்டுக்கு வீடு நாலைந்து நாய்களுக்குக் குறைவில்லை.

நாயைக் கட்டி வளர்த்துக் கொள்ளுங்கள் என உரிமையாளரிடம் பக்குவமாகச் சொன்னாலும் அவர்கள் "வள்" ளென்று விழுகின்றனர். தெருவில் இறங்கவே பயமாக உள்ளது. குறிப்பாகக் குறுக்கொழுங்கைகளில் இத்தகைய அவல நிலை நீடிக்கின்றது. சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பான அதிகாரமிக்கவர்கள் ஆவன செய்ய வேண்டும்; அவசியம் செய்ய வேண்டும்.

எஸ்.செல்வா
கொக்குவில்




## போக்குவரத்துச் சபையின் வருமான ஈட்டம் அதிகரிப்பு

*40 மில்லியனுக்கும் அதிகமான வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக தகவல்*

மே தினத்தை முன்னிட்டு பேருந்துகள் வழங்கப்பட்டதன் மூலமாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வருமான ஈட்டம் அதிகரித்துள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி 40 மில்லியனுக்கும் அதிகமான வருமானத்தை இலங்கைப் போக்குவரத்துச் சபை பெற்றுக் கொண்டுள்ளது.

தவிர, விசேட தொடருந்து சேவை மூலம் ஏறத்தாழ 7 லட்சம் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் போக்குவரத்து அத்தியட்சகர் என்.ஜே. இதிபாலகே சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்ணளவாக 4 ஆயிரம் பேருந்துக்கான கட்டணம் அறவிடப்பட்டு பத்து அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் பயணித்த தூரத்துக்கு அமையவே அனைத்து கட்டணங்களும் அறவிடப்பட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை மே தினத்தை முன்னிட்டு பல்வேறு அரசியல் கட்சிகள் 7 ஆயிரம் பேருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்திருந்ததாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.



இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதம நடவடிக்கை அத்தியட்சகர் எச்.எம்.எ.சந்திரசிறி

> “மே தின பேரணிக்காக பஸ்களை வழங்கியதன் மூலம் இலங்கை போக்குவரத்துச் சபையின் வருமானத்தை நூற்றுக்கு 15 வீதமாக அதிகரிக்க முடிந்துள்ளது.

## பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்தத் திட்டங்கள்




மத்திய வங்கியை மீளமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதான தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் நடப்பாண்டில் நிரந்தர பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைத் திட்டங்கள் தயார் நிலையில் உள்ளதான கருத்தும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி யால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் 2017ஆம் ஆண்டுக்கான நாணய மாற்றம் மற்றும் நிதியியல் துறை கொள்கைகள் உள்ளடங்கியதான “2017 வழிகாட்டல்” திட்டம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளை உள்ளடக்கிய நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவொன்று மீண்டும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

2017 ஆம் ஆண்டு சர்வதேச மற்றும் உள்ளூர் முதலீடுகளை மேற்கொள்ளவும் அவற்றை ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. அந்தவகையிலே இந்த வருடத்தில் பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்தில் தொடர்ந்தும் பேண தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் 5.5 முதல் 6 சதவீதமான பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் வரட்சியான காலநிலை மற்றும் உலக பொருளாதார நிலைமைகள் காரணமாக வளர்ச்சி வீதத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படலாமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நடப்பாண்டில் 25 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருவர்

*சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு*

2017 ஆம் ஆண்டில் 25 லட்சம் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வரவுள்ளதான தகவல் எதிர்வுகூறல் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேசச் செய்திச் சேவை ஒன்றுக்கு சுற்றுலாத்துறை முன்னேற்றம் தொடர்பிலும், சுற்றுலா வரும் வெளிநாட்டவர்கள் குறித்தும் கருத்துரைக்கையிலேயே இவ்வருடம் நாட்டினுள் வருகை தருவார்கள் என அரசு எதிர்பார்த்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறித்தான மேற்படி தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் இதுகுறித்து கருத்துரைத்துள்ள அமைச்சர், “சுற்றுலாப்பயணிகளின் உள்வருகையில் உள்ள பிரச்சினைகள் குறித்து அதிகாரிகள் மட்டத்தில் கவனம் செலுத்தப்படுகின்றது.

இவ்வாண்டிலும் இயன்றளவு செயற்றிறனோடு நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர்ப்பார்த்த இலக்கை அடைவதுடன் அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேநேரம் இலங்கையின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக உலகின் பல்வேறு நகரங்களில் விளம்பரப்படுத் தல் திட்டங்களை முன்னெடுக்க தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது” என்றார்.

> “கடந்த ஆண்டில் 20 லட்சம் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றச் சூழமைவுகளும் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணியாக அமையவுள்ளது.



## சீனாவுடனான நெருக்கத்தால் வர்த்தகத்தில் முன்னேற்றம்

*வர்த்தக நடவடிக்கைகள் 4 மில். டொலர்களாக அதிகரிப்பு*




இலங்கை அரசுக்கும் ஆசிய பிராந்தியத்தின் பிரதான வல்லாதிக்க நாடாக காணப்படுகின்ற சீன அரசுக்கும் இடையேயான அயலுறவுக் கொள்கை மீதான இணைவு என்பது இரு நாடுகளுக்கு மிடையேயான வர்த்தக நடவடிக்கைகளில் முன்னேற்றத்தை கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான பரஸ்பர வர்த்தக நடவடிக்கைகள் முதன்முறையாக நான்கு பில்லியன் டொலர்களை கடந்துள்ளதாக அமைச்சர் ரிசாத் பதியுதீனால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்றிருந்ததான இரண்டாவது சீன உற்பத்திகள் தொடர்பிலான கண்காட்சி நிகழ்வின் தொடக்க நிகழ்விலேயே மேற்கண்ட விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக செயற்பாடுகள் எதிர்காலத்திலும் வளர்ச்சிப் போக்குடன் தொடர்புற்றிருக்கும் எனவும் அவரது உரை மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.



## வெளிநாட்டு முதலீடுகள் 45.6 சதவீதம் வீழ்ச்சி

*ஒப்பீட்டு ரீதியான கணிப்பாக பதிவு*


இலங்கையின் பன்னாட்டுக்கான நேரடி தன்மை வாய்ந்த முதலீடுகள் கடந்த 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 45.6 சதவிகிதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொகை மதிப்பீடு என்பது அண்ணளவாக 300 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை கடந்த 2016 ஆம் ஆண்டில் இந்தத் தொகையானது 658 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையிலே 2015 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும், கொள்கை மாற்றங்களும் இந்த வீழ்ச்சியில் பிரதான பங்களிப்பை வழங்கியிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடாக எய்துவதற்கான நிர்ணயங்களைக் கொண்டிருந்த போதும் அந்த இலக்கை அடைவதற்கு போதியளவு வழிகாட்டல்களை அரசு வழங்கவில்லை என முதலீட்டு செயற்பாடுகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் கருத்துரைத்துள்ளனர்.

மேலும் வரி விதிப்புகளில் உறுதியற்ற நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.




### பங்குச் சந்தை தகவல்கள்

CSE COLOMBO STOCK EXCHANGE — 3/5/2017 — www.cse.lk

147-2/3, K.K.S Road Jaffna - 212221455

| சுட்டெண் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -44.31 | 6,563.85 | 6,608.16 |
| S&P SL20 | -20.99 | 3,757.65 | 3,778.64 |
| வியாபாரப்புரள்வு | | 608,039,490 | 471,495,168 |
| உள்நாடு- கொள்வனவு | | 301,436,288 | 269,848,800 |
| விற்பனை | | 361,582,080 | 240,042,816 |
| வெளிநாடு- கொள்வனவு | | 306,603,200 | 201,646,368 |
| விற்பனை | | 246,457,392 | 231,452,352 |




| கம்பனி - அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| டயலொக் | DIAL.N | 12.00 | 8,691,317 | 104,295,804.60 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி | COMB.N | 145.00 | 493,961 | 71,620,725.90 |
| யுனைட்டட் மோட்டாஸ் லங்கா | UML.N | 77.60 | 963,416 | 71,599,311.60 |
| சிலோன் டுபாக்கோ கம்பனி | CTC.N | 985.00 | 57,211 | 56,350,220.00 |
| சேன்றல் பைனான்ஸ் | CFIN.N | 90.50 | 396,050 | 35,650,218.60 |
| அக்சஸ் இஞ்சினியரிங் | AEL.N | 26.00 | 1,373,277 | 35,636,872.20 |
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 72.30 | 445,899 | 31,603,579.90 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 160.00 | 197,215 | 31,372,705.40 |
| களனி கேபிள்ஸ் | KCAB.N | 120.00 | 245,004 | 29,400,468.40 |
| மெல்ஸ்ரா க்ரோப் | MELS.N | 68.00 | 394,754 | 27,172,728.90 |

**அறிவித்தல்கள்**

பங்குலாபம்
பைராபாம் (BFL)- பங்கு ஒன்றிற்கு Rs. 4.00

ஹற்றன் நஷனல் வங்கி - உரித்து வழங்கல்

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 230 |
| விலை உழைப்பு | 12.6 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 2.7 |

கேசவன் நடராஜா

# சுக வாழ்வு தரும் உடற்பயிற்சி

மனித இனம் பூமியில் வாழும் இலட்சக்கணக்கானவருடங்களாக வேட்டையாடுதல்,பயிர்ச் செய்கை, எதிரிகளிடமிருந்துபாதுகாத்தல் போன்றஎல்லாத் தேவைகட்கும் உடலுழைப்பபிலும்,தசை இயக்கத்திலும் தங்கியிருந்துள்ளது. மனித உடல் அத்தகைய வாழ்க்கைமுறைக்கு இசைவாக்கம் பெற்றதால் உடற்திணிவின் 40 மூதசைகளாகவும், 10மூஎலும்புகளாகவும் அமைந்துள்ளது.

### தொழிற் புரட்சி

கடந்த நூற்றாண்டில் ஏற்பட்டதொழிற்புரட்சியும் அதன் விளைவாகியகருவிகளும் மனிதன் எவ்விததசை இயக்கமுமின்றி தனது தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியவசதிகளை ஏற்படுத்தின. இது நாகரிகம் என்பதற்கு சோம்பலைவளர்த்தல் எனும் அர்த்தத்தை ஏற்படுத்தியதோடு, உடல் உழைப்பைக் கேவலமாக எண்ணும் மனப்பான்மையையும் வளர்த்துவிட்டது.

இத்தகைய மாற்றத்தினால் ஆட்கொள்ளப்பட்டமேற்குலகு இன்று மக்களிடையே காணப்படும்நோய்களிற்பெரும்பாலானவை உடலமைப்பிற்கு ஒவ்வாத சொகுசான வாழ்க்கை முறையினாலேயே ஏற்படுகின்றன எனக் கண்டறிந்துள்ளது. இதன் விளைவாக அங்கு மக்களின் அன்றாடக் கடமைகளில் ஒன்றாக உடற்பயிற்சியும் இடம்பிடித்துவிட்டது.


எல்லாவிதத் தசை இயக்கங்களுமே உடற்பயிற்சி என வரையறுக்கப்படுகின்றது. நாம் அன்றாடம் மேற்கொள்ளும் நடத்தல்,சைக்கிள் ஓடுதல்,விறகுவெட்டுதல்,துலாமிதித்தல் எல்லாம் தசை இயக்கங்களின் விளைவுகளாதலால் அவையும் உடற்பயிற்சிகளாகின்றன.

### ஆபத்து வேளையில் உதவும் உடற்பயிற்சி

உடற்பயிற்சியினால்; ஆபத்து வேளைகளில் ஏற்ற உடல் இயக்கத்தை ஏற்படுத்த வேண்டிய பயிற்சியை மூளை பெற்றுக் கொள்கின்றது. தசைகள், எலும்புகள், மூட்டுக்கள் விருத்தியடைந்து பலமடைகின்றன. போசணைப் பொருள்களைத் திறம்பட உபயோகிக்கும் தன்மை இழையங்களில் ஏற்படுகின்றது. சுவாசகுருதிச் சுற்றோட்டத் தொகுதிகள் சீரடைகின்றன. இருதயம் விருத்தியடைவதுடன் ஆரோக்கியம் பெறுகின்றது. வயது முதிர்ந்தகாலத்தில் ஏற்படப் போகும் உயர் குருதிஅமுக்கம், இருதயநோய்கள்,சலரோகம், மூட்டுவியாதிகள் போன்றநோய்கள் ஏற்படும் தன்மை பெருமளவுகுறைகிறது.

உடற்பயிற்சி உளநலத்துக்கும் உதவுவது அறியப்பட்டுள்ளது. உடற்பயிற்சியாளர்கள் பொதுவாகப் பின்வரும் குண இயல்புகளை வெளிக்காட்டுகின்றனர். தமதுஉடல் ஆரோக்கியமாக இருப்பதை உணர்ந்து அமைதியடைகின்றனர். பதட்டம், விரக்தி, கவலை என்பவற்றால்அதிகம்பாதிப்படைவதில்லை. வாழ்வில் பற்றும் நம்பிக்கையும் உடையவராகின்றனர். தன்னம்பிக்கையும் ஆக்கபூர்வமான சிந்தனையும் உடையவராக விளங்குகின்றனர். மேலும், உடற்பயிற்சி பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றலை அதிகரிப்பதுடன் புத்திசாதுரியம் கற்கும் ஆற்றல் என்பவற்றை அதிகரிப்பதாக்வும் பலர் நம்புகின்றனர்.

மேலும், பலர் சேர்ந்து



விளையாட்டுக்களில் ஈடுபடும் போதும், சிரமதான அடிப்படையில் உடலுழைப்பில் ஈடுபடும் போதும் கிடைக்கும் சமூகமுன்னேற்றம்,புரிந்துணர்வு என்பவற்றின் நன்மைகளை அளவிடமுடியாது.

மேற்கூறியநன்மைகளைப் பெறுவதற்கு எவ்வயதில்,எவ்வளவு உடற்பயிற்சிசெய்ய வேண்டும் என்றகேள்விஎழலாம். எல்லாவயதினரும் ஆண், பெண் பேதமின்றி உடற்பயிற்சி செய்யஆரம்பிக்கலாம். ஆனால்எடுத்தஎடுப்பிலேயே கடுமையான பயிற்சிகளில் ஈடுபடக் கூடாது. படிப்படியாகத் தமக்கு உள்ள நேரம், ஆற்றல் என்பவற்றிற்கேற்ப உடற்பயிற்சியின் அளவை நிர்ணயிக்க வேண்டும்.

> எல்லாவிதத் தசை இயக்கங்களுமே உடற்பயிற்சி எனவரையறுக்கப்படுகின்றது. நாம் அன்றாடம் மேற்கொள்ளும் நடத்தல்,சைக்கிள் ஓடுதல்,விறகுவெட்டுதல்,துலாமிதித்தல் எல்லாம் தசை இயக்கங்களின் விளைவு களாதலால் அவையும் உடற்பயிற்சிகளாகின்றன.

### உடற்பயிற்சியின்போது பின்பற்ற வேண்டியது

உடற்பயிற்சியின் போது இலேசாக மூச்சு வாங்கும் நிலை ஏற்படவேண்டும். சிரமமாக இருந்தால், அல்லது மூச்சுத் திணறல் ஏற்பட்டால் உடற்பயிற்சியை நிறுத்திக் கொள்ளல் வேண்டும். இருதயத்துடிப்புவீதம் நிமிடத்துக்கு 90 வரை அதாவதுஓய்விலிருந்ததைவிட 20 வீதம் அதிகரிக்க வேண்டும். தினசரி அல்லதுஒன்றுவிட்ட ஒருநாளில் உடற்பயிற்சியில் ஈடுபடுவதுவிரும்பத்தக்கது.

தினசரியாயின் 20 - 30 நிமிடங்கள் போதுமானது. ஒன்றுவிட்டஒருநாளாயின் இந்நேரத்தைச் சற்றுஅதிகரிக்கலாம்.


வியர்வைவெளிப்படுவது சூழல் வெப்பநிலையிலும் வளியின் ஈரப்பதனிலும் தங்கியிருப்பதால் உடற்பயிற்சியின் அளவைத் தீர்மானிக்கும் சரியானகாட்டியாக இதனைக் கொள்ளமுடியாது. இத்தகைய பயிற்சிகளை உடற்பயிற்சிக் கூடத்திலோ,விளையாட்டுமைதானத்திலோதான் பெறப்படவேண்டுமென்பதில்லை. சைக்கிள் ஓட்டுவதும்,நடப்பதும்,விறகுவெட்டுவதும்,நீரிறைப்பதும் கூட உடற்பயிற்சியாக அமையலாம். அதற்கு இவை சற்றுவிறுவிறுப்பாக முன் கூறப்பட்ட தாக்கங்களைஉடலில் ஏற்படுத்தக் கூடியவாறு செய்யப்படல் வேண்டும்.

"சுகவாழ்வு என்பது உங்களிடமுள்ளது; உங்கள் வைத்தியரிடமில்லை. அதற்குத் தேவையான நடவடிக்கைகளில் இறங்குவதுஉங்கள் பொறுப்பு"

சில ஆராய்ச்சியாளர்கள் அவதானித்த போது கடும் உடற்பயிற்சியாளர் 'அதிகதசை' அமைப்பையும்,உடற்பயிற்சி-உடலுழைப்பு சற்றும் இல்லாதவர் 'கொழுத்த'உடலமைப்பையும், இடைநிலை அளவு உடற்பயிற்சி செய்பவர் மிகவும் விரும்பத்தக்க 'ஆரோக்கியமான' உடலமைப்பையும் கொண்டிருப்பதை அவதானித்துள்ளனர். இதிலிருந்து அளவான உடற்பயிற்சி உடல் நலத்துக்கு அவசியமானது என்பது தெளிவாகின்றது.

### அளவான உணவு

உடற்பயிற்சியில் ஈடுபடும் போது அதிகசக்தி தேவைப்படுவது வெளிப்படை. உடற்பயிற்சியின் அளவுக்கு ஏற்ப உணவில் உள்ளெடுக்கப்படும் சக்தியின் அளவும் அதிகரிக்கப்படல் வேண்டும். ஆனால் உடற்பருமன் அதிகரிப்பதால் அதைக் குறைப்பதற்கு உடற்பயிற்சியில் ஈடுபடுபவர் அளவாகஉண்ண வேண்டும். சாதாரணமாக உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு இரண்டு அல்லது மூன்று மணித்தியாலயங்களுக்குமுன் காபோவைதரேற்று உணவு உண்டால் அது ஈரலிலும் தசைகளிலும் கிளைக்கோசனாக சேமிக்கப்பட்டுஉடற்பயிற்சியின் போது உதவும். போதியஆகாரம் இன்றி உடற்பயிற்சியில், உடலுழைப்பில் ஈடுபட்டால் தேவையான சக்தியைசேமிப்புக் கொழுப்பிலிருந்தும் தசைப் புரதத்திலிருந்தும் பெறவேண்டியநிலைஏற்படும். இது உடலமைப்பில் மாற்றங்களையும் ஆரோக்கியக் குறைவையும் ஏற்படுத்தும். உடற்பயிற்சி முடிவடைந்த



பின்னர் உண்பதால் பாதிப்படைந்த இழையங்கள் பயனடைவதில்லை.

### உங்கள் உடல் நலம்?

* உடற் திணிவுச் சுட்டி® நிறை (கிலோ. கி) / உயரம் (மீற்றர்)

இப்பெறுமானம் 18.5- 22.9 (ஆசியர்)ஆக இருப்பதுவரவேற்கத்தக்கது. குறைவது உடல் மெலிவைக் காட்டும். கூடுவது கொழுப்பு அதிகரிப்பைக் காட்டும். 30க்கு மேல் இருந்தால் ஆரோக்கியக் குறைவைக் காட்டும்.

* வயிற்றுக் கொழுப்பின் அளவு® தொப்புள் மட்டசுற்றளவு / இடுப்புச் சுற்றளவு


இந்த விகிதம் 0.85 இற்குக் குறைவாக இருப்பதுஆண்களுக்கும,; 0.75 இற்குக் குறைவாக இருப்பது பெண்களுக்கும் நல்லது. கூடினால் ஆரோக்கியத்துக்கு ஆபத்து எனப் பொருள்படும். சிலசமயங்களில் உடற்பயிற்சி யினால், அளவுக்கு மிஞ்சிய உடலுழைப்பினால் தீங்குகளும் ஏற்பட்டுவிடுகின்றன. நோயுற்றசந்தர்ப்பங்களில் உடலுக்குப் பூரண ஓய்வு தேவை. நோய் கட்டுப்பாட்டின் கீழ் வந்தபின்னர், வைத்தியரின் அனுமதியுடன் மட்டுப்படுத்தப்பட்ட உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது நன்மைபயக்கும்.

### உடலின் உணர்வுகள்

உடல் அனுமதிக்கும் எல்லையைக் கவனித்து, உடலின் உணர்வுகளைமதித்து, அளவான உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது பாதுகாப்பானதும் பயனுள்ளதும் ஆகும்.


எமது பிள்ளைகளை,இரவுபகலாக'படிப்புமேசையில்' இருத்திவைப்பது, அவர்களது உடல் வளர்ச்சியில்,மனவளர்ச்சியில்,ஆளுமைவிருத்தியில்,எதிர்காலவாழ்வில் பாரதூரமான விளைவுகளைஏற்படுத்தும் என்பதைநாம் கவனத்திற் கொள்ளவேண்டும். எனவே,சிறுபிள்ளைகள் மட்டுமல்ல,சகலரும் ஒவ்வொருநாளும் குறைந்தது அரை மணி நேரமாவதுஉடற்பயிற்சிக்கென ஒதுக்கி, அல்லதுவீட்டுவேலைகளில்விறுவிறுப்புடன் ஈடுபட்டு, அதன் மூலம் அன்றாடநிகழ்ச்சிகளால் இழந்த தமது மனோவலிமையை மீளப் பெறுவதுடன் சுகவாழ்வையும் பெறவேண்டும்.

கட்டுரையாளர்: கால்நடை மீன்பிடி மற்றும் போசாக்கு பீடம், பிரயோக போசாக்கு திணைக்களம், இலங்கை வயம், பல்கலைக்கழகம்.



# அதிர்ஷ்டக் கற்கள்

## நீலம்



நீலம் அலுமினியம் டிரை ஆக்ஸைடு என்ற மூலப்பொருளால் ஆனது. இக்கல்லுக்கு நீல நிறத்தைத் தருவதற்கு டைட்டானியம் என்ற வேதிப்பொருளும் உதவுகின்றது. ஆழ்ந்த நீலநிற முள்ளநீலக்கல்லில்டைட்டானியம்அதிகம்இருக்கும். இதன் நிறத்தின் பெயரே கல்லின் பெயரானது. தற்போது தாய்லாந்து, இலங்கை, கென்யா, தன்சானியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து கிடைக்கப்பெறுகிறது . நீலம் கடினத்தன்மை அதிகமுடையதாக இருப்ப தால் நீண்ட நாள்களுக்கு, பளபளப்பு குன்றாமல் இருக்கும். வெளிர் நீலக் கற்கள் பாங்கொங்கில் அடர் நீலமாக மாற்றப்பட்டு பாங்கொங் நீலம் என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது.

அதிக எடையும், சுத்தமான தன்மையும் கொண்ட கல்லை கெட்டி நீலம் என்கிறார்கள்.

பர்மா மற்றும் காஷ்மீரில் அற்புதமான நீலக் கற்கள் கிடைக்கின்றன.

இவை அழகான ஒளிமிகுந்த, கண்களைக் கவரக்கூடியவையாக இருக்கும். நீலக்கல்லை அணிவதால் போட்டி, பொறாமை மற்றும். கண் திருஷ்டிகள் விலகும். மன அமைதியையும், சுகமான, ஆபத்தில்லாத பயணங்களையும் தரும். இடமாறுதலையும், நாள்பட்ட துன்பங்கயும் போக்கும். நீலக் கல்லிலேயே தோஷமற்ற இந்திர கல் கிடைக்கப்பெற்று அதை அணிபவர்களுக்கு ஏழ்மை விலகி செல்வம், செல்வாக்கு, புகழ், பெருமை போன்ற யாவும் தேடி வரும். கஷ்டங்கள் அனைத்தும் விலகும். நீலக் கல்லை நீல நிற சனிக் கிரகத்தின் ஆதிக்கத்திற்குள்ளோரானான மகர, கும்ப ராசி உடையவர்களும், ஏழரைச் சனி, அஷ்டமச் சனி, சனி திசை போன்றவை எண் கணிதப்படி 8,17, 26 எண்ணில் பிறந்தவர்களும் அணியலாம்.

மருத்துவ ரீதியாகவும் வாதநோய், பாரிச வாய்பு, எலும்பு வியாதி, பல் நோய், தடிமல், சித்த சுவாதீனம், உடல் சோர்பு, மந்த நிலை போன்ற நோய்களிலிருந்தும் ஓரளவுக்கு விடுதலை கிடைக்கும்.

நீலக்கல்லை வெள்ளியில் பதித்து உடலில் படும்படி நடுவிரல் அல்லது ஆள்காட்டி விரலில் அணிந்து கொள்ள வேண்டும். சனிக்கிழமைகளில் அணிவது உத்தமம். நீலக்கல் அணிவதால் நம்மை பிடித்துள்ள நீச குணங்கள் விலகி சனி கிரகத்தின் அருளை முழுமையாகப் பெறமுடியும்.

அக்கோமரின், நீலக்கல்லுக்குப் பதிலாக இந்த அக்கோமரின் கற்களையும் அணியலாம். இதுவும் பார்ப்பதற்கு அழகாகவும், வெளிர்நீல நிறமுடையதாகவும் விலையில் சற்று குறைவாகவும் கிடைக்கின்றது. சனியால் ஏதாவது பாதிப்பு உடையவர்கள் அக்காலங்களில் மட்டும் இக்கற்களை அணிந்து கொள்ளலாம். மற்றோர் அணிவது கூடாது. அழகுக்காக சிலர் அணிகிறார்கள்.



# வரலாற்றில் இன்றைய தினம்

1886 - சிக்காக்கோவில் தொழிலாளர் பேரணியைக்கலைக்கமுயன்றபொலிஸார்மீது குண்டு எறியப்பட்டதையடுத்து 8 பேர் உயிரிழந்ததுடன் 60 பேர் காயமடைந்தனர். பொலிஸார்மக்களின்மீதுதுப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

1904 - பனாமாக்கால்வாய் அமெரிக்காவால் தொடங்கப்பட்டது.

1910 - றோயல் கனடா கடற்படை தொடங்கப்பட்டது.

1912 - கிரேக்க தீவான ஹொபீஸில் இத்தாலி நிலை கொண்டது.

1926 - ஐக்கியராச்சியத்தில்பொதுவேலைநிறுத்தம் தொடங்கியது.

1945 - ஹம்பேர்க்கக்அண்மித்துஅமைந்திருந்த 'நியோன் கேம்' வதை முகாம், பிரிட்டன் படைகளால் விடுவிக்கப்பட்டது.

1945 - லூன்பேர்க்கீத்தில்ஜேர்மனியப்படைகள் சரணடைந்தன. இதில்நெதர்லாந்துடென்மார்க் மற்றும் வடமேற்கு ஜேர்மனி படைப்பிரிவுகள் அனைத்தும் அடங்கும்.

1949 - தனிப்பட்டகாரணங்களால்விமானத்தில் பயணிக்காத இரண்டு வீரர்களைத் தவிர ரொறினோ அணியின் ஏனையகால்ப்பந்தாட்டவீரர்கள்விமான விபத்தொன்றில் உயிரிழந்தனர்.

1959 - முதன்முதலாககிராம்மிவிருதுவழங்கப்பட்டது.

1979 - ஐக்கிய இராச்சியத்தில் முதல் பெண் பிரதமரானார் மார்கரெட் தாட்சர்.

2014 - கென்யாவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 3பேர் உயிரிழந்ததுடன் 62பேர் காயமடைந்தனர்.

2003 - ஈ.பி.டி.பி.அரசிடம்ஆயுதஉதவிகோரல்

2003 - பெரும் பரப்புக்கு மத்தியில் சோயுஸ் கலம் தரையிறங்கியது.

2003 - சார்ஸ் நோய் தாக்கி மருத்துவர்கள் இறப்பது சீனாவில் அதிகரிப்பு

2006 - உதயன் மீதான தாக்குதலைக் கண்டித்துக் கிளிநொச்சியில் பேரணி

2007 - 35 தமிழர்கள் வெள்ளவத்தையில் கைது.

2007 - அனைத்துக் கட்சி யோசனை மூலம் சரியான இணக்கத்தைஏற்படுத்தமுடியும் என அமைச்சர் திஸ்ஸ விதாரண நம்பிக்கை

2016 - வடக்கின் தீர்வு வரவை நிராகரித்து வடமேல் மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றம்.

**நாளை**

**சித்திரை-22**
வெள்ளிக்கிழமை -05.05.2017
திதி: தசமி மு.இ.11.22
நட்சத்திரம்: மகம் மு.ப.08.55
சுபநேரம்:05.56-07.26 வரை
ராகுகாலம்:10.26-11.56 வரை

# கூட்டுப் படையில் குழப்பம் வரலாமா?

சிரியாவில் போரிட்டுவரும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையில் குழப்பம் வந்துள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த மோதல் மேலும் அதிகரித்தால் அது உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான போரை மந்த கதிக்குத் தள்ளக்கூடிய சாத்தியம் அதிகம் உள்ளது.

உலகின் பொது எதிரியாக உள்ள ஆயுத அமைப்புக்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மிகவும் ஆபத்தானதாக அறியப்படுகிறது. அந்த அமைப்பின் பிடியில் ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகள் இருந்தன. இந்தப் பகுதிகளை ஒன்றிணைந்து அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பை உலகத்தின் பொது எதிரியாக பல்வேறு நாடுகளும் கருதிப் போரிட்டு வருகின்றன. குறிப்பாக ரஷ்யா, அமெரிக்கா ஆகியன ஐ.எஸ்ஸுக்கு எதிரான போரில் கடும் முனைப்புடன் செயற்படுகின்றன.

ஈராக்கிலிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை விரட்டும் பொறுப்பை கையிலெடுத்துக் கிட்டத்தட்ட வெற்றிகாணும் நிலையில் உள்ளது அமெரிக்கா. சிரியாவிலிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை விரட்டும் நடவடிக்கைஸ்ய ரஷ்யா எடுத்து வருகிறது. ரஷ்யாவை விட அமெரிக்கா தலைமையில் சில நாடுகள் இணைந்து கூட்டுப்படையையும் உருவாக்கி அங்கு போரிட்டு வருகின்றன. இந்தக் கூட்டுப்படையில்துருக்கியும் உள்ளது. சிரியாவின் குர்து இனக் கிளர்ச்சியாளர்களும் ஐ.எஸ்ஸுக்கு எதிராகப் போராடுகின்றனர். ஆனால் துருக்கிக்கும் குர்து இன மக்கள் மற்றும் கிளர்ச்சியாளர்களுக்கும் நீண்டகாலமாகவே கசப்புணர்வு நிலவி வருகின்றது. இதனால் அந்த இனத்தையே அந்த நாடு பயங்கரவாதிகளாகப் பார்க்கிறது.

சிரியாவின் கராசக் மலைப் பகுதி மற்றும் வடக்கு ஈராக்கின் சின்ஜார் மலைப் பகுதியில் துருக்கி போர் விமானங்கள் அண்மையில் நடத்திய தாக்குதலில் 25 குர்து இனப் படையினர் உயிரிழந்தனர். குர்துக் குழுவினர் அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றவர்கள் என்பதால், இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு தனது கண்டனத்தைத் தெரிவித்தது அமெரிக்கா. இதைவிட துருக்கியின் நடவடிக்கைகளை வேவு பார்க்கவும் குர்து இன மக்களுக்கும், குர்துக் கிளர்ச்சியாளர்களுக்கும் கூடுதல் பாதுகாப்பை வழங்கவும் அமெரிக்கா திட்டமிட்டு அதை நடைமுறைப்படுத்தவும் தொடங்கியுள்ளது. அமெரிக்காவின் அதிநவீன டாங்கிகள் மற்றும் போர்த் தளபாடங்கள் கராசக், சின்ஜார் மலைப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பத்தி எழுத்து

தமக்கு எதிரான துலங்கல்களை அமெரிக்கா வெளிப்படுத்தியதை அடுத்து, துருக்கி அமெரிக்காவுடன் முரண்டு பிடிக்கிறது. கடந்த வருடம் துருக்கியில் நடத்தத்திட்டமிட்ட இராணுவப் புரட்சி தோல்வியில் முடிந்தது. இந்தப் புரட்சியை தூண்டியவர் ஒரு மதகுரு. அவர் தற்போது அமெரிக்காவிலேயே உள்ளார். எனவே அவரைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி துருக்கி ஏற்கனவே அமெரிக்காவுடன் கருத்து மோதலில் ஈடுபட்டுள்ளது.

தற்போது குர்து இனமக்களின் விவகாரத்திலும் அமெரிக்கா நேரடித் தலையீட்டைக் காட்டியுள்ளதால் கூட்டுப்படையில் இருந்து துருக்கி விலகிச் சென்றாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அவ்வாறானதொரு நிலை வந்தால் அது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரை மந்த கதிக்குத் தள்ளிவிடும். இந்த மந்தகதி கடும்பின்னடைவைச் சந்தித்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு புத்துயிர் பெறவும் வித்திடலாம்.



# மூன்று வேடங்களில் நடிக்கவுள்ள விஷால்

நடிகர் விஷால் முதல் முறையாக மூன்று வேடங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தமாகி இருக்கிறார். அந்தப் படத்துக்கு `நாளை நமதே' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. சி.வி.குமாரின் திருக்குமரன் எண்டர்டெயின்மெண்ட் மற்றும் அபினேஷ் இளங்கோவனின் அபி அபி பிக்சர்ஸ் இணைந்து தயாரிக்கும் புதிய படம் `நாளை நமதே'. இந்தப் படத்தில் நடிப்பதற்கு நடிகர் விஷால் ஒப்பந்தமாகி இருக்கிறார். அதுவும் இந்தப் படத்தில் அவர் மூன்று வேடங்களில் நடிக்கவுள்ளார் என்று படக்குழு தெரிவித்துள்ளது. இயக்குனர் பொன்ராமிடம் உதவி இயக்குனராகப் பணியாற்றிய வெங்கடேசன் இப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமாகிறார். விஷாலுக்கு ஜோடியாக இரு கதாநாயகிகள் நடிக்கவுள்ளனர். மேலும் நகைச்சுவைக் கதாபாத்திரத்தில் நடிகர் சதிஷ் ஒப்பந்தமாகி இருக்கிறார். பிரம்மாண்டமாக உருவாக உள்ள இப்படத்தில், பல முன்னணி நட்சத்திரங்களும் நடிக்கவுள்ளனர்.

**ராமாயணப் போர் - பெண்ணுக்காக**
**மகாபாரதப் போர் - பெண்ணுக்காக**
**பாகுபலிப் போர் - பெண்ணுக்காக...**

இதில் இருந்து என்ன தெரியுது. அப்போ இருந்து இப்போ வரைக்கும் பொண்ணுகளாலே ஒரே அக்கப் போர் தான்......




**வடகொரிய அதிபரை இளம் பெண் போன்று கவர்ச்சியாக இருக்கிறார் என வர்ணித்தார் ட்ரம்ப்**



**சண்டை போடுறதை விட்டுட்டு சைட் அடிக்க ஆரம்பிச்சிட்டாங்களா...!**

**உண்மையான மேல் படிப்பு இது தானுங்கோ....**




**மண்டை மேல உள்ள கொண்டையை மறந்துட்டாங்களே...!**



**உமா:** அலுவலகத்துக்கு போகும்போது உன் கணவர் 'குட்நைட்'ன்னு சொல்லிட்டுப் போறாரே எதுக்கு?

**ரமா:** அங்க போய் தூங்கத்தானே போறார்.

"பணம்" நிம்மதி தராது என்று எந்த
ஏழையும் சொன்னதில்லை,
நிம்மதி தராத அந்தப் "பணத்தை"
இழக்க எந்தப் பணக்காரனும்
தயாராக இல்லை.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தினர் ஒத்துழைப்பர். அத்தியாவசிய செலவுக்கு கடன் வாங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப லாபம் கிடைக்கும். சீரான ஓய்வு உடல் தரும். தாயின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** வாழ்வில் புதிய அனுபவத்தைப் பெறுவீர்கள். எதிரித் தொல்லை மறையும். தொழில், வியாபாரத்தில் எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தாராள லாபம் கிடைக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கப்பெறுவீர்கள்.

**மிதுனம்:** யாரிடமும் சொந்த விஷயம் பேசுவது கூடாது. தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடும்.

**கடகம்:** புத்துணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்..

**சிங்கம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். எதிர்பார்த்த சுபசெய்தி உங்களைத் தேடி வரும்.

**கன்னி:** எதிர்பாராத வகையில் வருமானம் அதிகரிக்கும். தொழில், வியாபார ரீதியாக வெளியூர்பயணம் மேற்கொள்வீர்கள். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. மனைவியின் செயல்பாடு மகிழ்ச்சி அளிக்கும்.

**துலாம்:** நேர்மை எண்ணத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது. சீரான ஓய்வு உடல் நலம் பெற உதவும்.

**விருச்சிகம்:** பொது விஷயங்களில் அக்கறை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். விழா, விருந்து எனச் சென்று மகிழ்வீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறுவீர்கள்.

**தனுசு:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணவரவு கூடும். பிள்ளைகள் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** அன்றாட பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் ஆதாயம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் செலவு உண்டாகும். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

**கும்பம்:** எதிரிகளை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். சொத்து, முக்கிய ஆவணங்களை பிறர் பொறுப்பில் தரக் கூடாது. பிள்ளைகளின் நலனில் அக்கறை ஏற்படும்.

**மீனம்:** நண்பர்களின் உதவியால் மனம் நெகிழ்வீர்கள். அன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 4 | | | | | |
| 3 | 6 | 1 | | | | | | |
| 2 | | 8 | | 7 | | | 3 | |
| | | 6 | | 1 | | | | 7 |
| 7 | | | 9 | | 5 | | | 2 |
| 8 | | | | 2 | | | | |
| | 3 | | | 4 | | 7 | | 6 |
| | | | | | | 3 | 4 | 1 |
| | | | | | 1 | | 2 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 3 | 4 | 2 | 6 | 1 | 7 | 8 |
| 2 | 4 | 1 | 3 | 8 | 7 | 6 | 9 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 1 | 5 | 4 | 2 | 3 |
| 1 | 3 | 7 | 6 | 4 | 8 | 9 | 5 | 2 |
| 4 | 2 | 6 | 5 | 3 | 9 | 8 | 1 | 7 |
| 8 | 5 | 9 | 1 | 7 | 2 | 3 | 4 | 6 |
| 3 | 8 | 5 | 7 | 9 | 4 | 2 | 6 | 1 |
| 7 | 1 | 4 | 2 | 6 | 3 | 5 | 8 | 9 |
| 9 | 6 | 2 | 8 | 5 | 1 | 7 | 3 | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# உணவைத் தாங்கிய உறி



நவீனங்களால் அழிந்து கொண்டும், மருவிக் கொண்டும் இருக்கும் தமிழ் மக்களின் பழமைகளுள் ஒன்றுதான் உறி. அடிப்பாகம் வளைவாக அரைக் கோள உருண்டையாக, நிலத்தில் வைத்தால் சரிந்து உணவைச் சிந்தி விடும் தன்மைகளைக் கொண்ட பாத்திரங்களை சரிய விடாது அல்லது உருண்டு கவிழ விடாது தாங்கிக் கொள்வதற்காக வாகனத்தின் ரயரைப் போன்ற சிறிய வடிவில் பாத்திரங்களின் அடிப்புற வட்டத்துக்கு அமைவாக பனம் நார், ஈர்க்கு ஓலையினால் வரியப்பட்டிருக்கும் பொருள் திருகணை. இந்தத் திருகணையின் நாலா புறத்திலும் பனை நார்களில் பின்னிய கயிறுகளைக் கட்டி கீழே விழாதவாறு அதன் நடுவில் சட்டி பானைகளை வைத்து உயரத்தில் கட்டி வைக்கப்படும் பொருளையே உறி என்பர். இது எமது முன்னோர் காலத்திலே சமயலறையுள் வளர்ந்தவர்களின் கைக்கு எட்டிய உயரத்தில் கூரை மரத்தில் கட்டித் தொங்கிக விடப்பட்டிருக்கும் இது. உணவு உள்ளிட்ட சட்டி, பானைகளை ஏந்தி நிற்கும்.

நம் முன்னோர் தமது உணவுப் பொருள்களான மீன் கறி, மீன் பெரியல், கருவாடு, தயிர், வெண்ணெய் போன்றவற்றை இவ் உறிகளில் வைத்தே இவற்றைக் களவாட வரும் பூனை, நாய், எலி போன்றவற்றிலிருந்து பாதுகாத்தனர். அதே போல் குழந்தைகளின் கைகளுக்கு எட்டாதவாறு இனிப்புப் பண்டங்களையும் இவற்றில் பாதுகாத்தனர். இந்த வழக்கம் காலப் போக்கில் பலகையால் செய்யப்பட்ட பெட்டிகளில் சமையல் பொருள்களை பாதுகாப்பதாயும் அதன் பின் தற்பொழுது குளிர் சாதனப் பெட்டிகளில் பாதுகாப்பதாகவும் மாறிவிட்டது. இன்று இந்த உறிகள் புதுமனைப் புது விழாக்களின் போது மட்டும். நீத்துப் பூசனிக்காயை ஏந்தியவாறு வீட்டின் கொல்லைப் புறங்களில் கட்டப்பட்டு தொங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

# நிலவுக்கு ஒளிக்கலாம்



தெரிந்தோ தெரியாமலோ நாம் செய்த குற்றத்தால் எமக்கு அவப் பெயர் ஏற்படலாம்: ஆபத்து நேரலாம்: தண்டனை கிடைக்கலாம் எனப் பயப்படுபவர்கள் தாம் வாழுமிடத்தை விட்டு வேறிடங்கள் சென்று வாழ முயல்வதுண்டு. இப்படி தப்பி ஓடுபவர்களைப் பார்த்து நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் போகலாமா? என ஏனையோர் கேட்பதுண்டு. எங்கு சென்றாலும் குற்றம் சம்பந்தமான தகவல்கள் புதிய இடங்களுக்கும் பரவி விடுவதுண்டு. ஆதலால் பிரச்சினை எல்லா இடத்திலும் இருக்கும். இருக்குமிடத்தில் இருந்து கொண்டே எதையும் எதிர் கொள்ள வேண்டும். தப்பி ஓடுவதில் பயனில்லை என்பதை வற்புறுத்தவே நிலவுக்கு ஒளித்து பரதேசம் போகலாமா? என்று கூறப்பட்டது.

நிலவு என்பது எல்லா இடமும் தெரியும். அதன் பார்வையில் இருந்து எவரும் தப்ப முடியாது. ஆதலால் நிலவுக்கு ஒளிக்க முடியாது என்பது ஒரு கருத்து. இரவு மட்டுமே நிலவுக்குரியது. பூரணை தினத்தில் மட்டுமே நிலவு இரவு முழுவதும் ஆட்சி செய்யும். நிலவு இல்லாத இரவுப் பகுதிகள் பல உள. சில நாடுகளில் தொடர்ந்து பல இரவுகளில் நிலவு தோன்றுவதே இல்லை. ஆகவே நிலவுக்கு ஒளித்து வாழ முடியாது என்ற கருத்தும் சரியாக இல்லை. நிலவுக்கு ஒளித்தும் வாழ முடியும் என்றே கருத இடமுண்டு. அப்படியாயின் இந்தப் பழமொழியின் சரியான வடிவம் என்ன?

குற்றம் செய்த ஒருவன் தண்டனைகளிலிருந்து தப்பலாம். இடமாறி வாழலாம். அதாவது சட்டத்துக்கு தப்பலாம். ஆனால் அவன் எங்கு சென்றாலும் குற்றம் செய்த அவனது மனம் மட்டும் குறுகுறுத்த படியே தான் இருக்கும். ஆகவே நிலவுக்கு கூட ஒளிக்கலாம் ஆனால் நினைவுக்கு ஒளிக்க முடியாது என்ற பொருளிலேயே இந்தப் பழமொழி கூறப்பட்டிருக்கும்.

ஆதலால் நினைவுக்கு ஒளித்து பரதேசம் போகலாமா? என வழங்கப் பட்டிருக்க வேண்டும். அது காலப்போக்கில் மருவி நிலவுக்கு என்று திரிபடைந்திருக்கலாமென சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

இது பற்றி அனுபவம் மிக்கோர் சிந்திக்கலாம்.



## தவறுகள் என்ன?

மேலே உள்ள படத்தில் வழக்கத்துக்கு மாறாக சில விடயங்கள் உள்ளன.
அவற்றைக் கண்டு பிடியுங்கள்



# மழை நாள்

- சடுதியாக வானம் இருண்டு கறுத்தது.
- கரு மேகங்கள் சூழ்ந்து வானை மூடி மறைத்தன.
- மின்னல் வெட்டியது.
- இடி இடித்து காதுகள் அதிரும்படி முழங்கியது.
- குளிர் காற்று சுழன்றடித்து வீசியது.
- சோ... என்று மழை கொட்டியது.
- வரண்ட நிலம் மழைநீரை உறிஞ்சிக் குடித்தது.
- வாடிய பயிர்கள் சிலிர்த்தது நிமிர்ந்தன.
- கால் நடைகள் (ஆடு, மாடு) பட்டிகள், தொழுவங்களில் குளி ரினால் முடங்கின.
- கோழிகள் நனைந்து ஒதுக்கிடம் தேட, பறவைகள் மரக் கிளைகளுள் ஒதுங்கின.
- எருமைகள் ஆனந்தமாக மழையில் நனைந்து மகிழ்ந்தன.
- மழைத் துளிகள் சேர்ந்து பெருமழையாகி அருவிகளாகின.
- அருவிகள் ஒன்று சேர்ந்து ஆற்று வெள்ளமாக ஓடின.
- சிறுவர்கள் மழை வெள்ளத்தை ரசித்தனர்.
- அவர்கள் கடதாசியில் கப்பல்கள் செய்து மிதக்க விட்டனர்.
- தரை எங்கும் கடல் போல் வெள்ளம் சூழ்ந்தது.

# சீதனம்



ஒரு அரசன் வேட்டையாடுவதில் பெரு விருப்புடையவனாக இருந்தான். அடிக்கடி காடுகளுக்குச் சென்று அங்குள்ள மிருகங்களையெல்லாம் வேட்டையாடி வந்தான். இந்தச் செயல் அவனது மந்திரிக்குப் பிடிக்கவில்லை. மிருகங்கள், காடுகளை விட்டு நாட்டுக்குள் வந்து துன்புறுத்தினால் மட்டுமே அவைகளைக் கொல்ல வேண்டுமென்ற கொள்கையுடையவர் மந்திரி. அரசன் இப்படி கண்ட படி மிருகங்களை வேட்டையாடி வருவதால் மிருகங்களின் இனமே அழிந்து விடக் கூடும் என மந்திரி அஞ்சினார். இதனை எப்படியாவது தடுக்க வேண்டும் என நினைத்தார்.

ஒருமுறை அவர் அரசனுடன் வேட்டைக்குச் சென்றிருந்த பொழுது "அரசே நேற்று அபூர்வமான ஓலைச் சுவடி ஒன்று கிடைத்தது. அதில் மிருகங்கள் பறவைகளின் பரிபாஷைகளை (தமக்குள் பேசிக் கொள்ளும் மொழி) அறிந்து கொள்ளும் முறை எழுதப்பட்டிருந்தது" என்றார். அரசரோ "அப்படியானால் உனக்கு பறவைகள் மிருகங்களின் மொழி தெரிந்திருக்க வேண்டுமே" என்றார். மந்திரி "நன்றாகத் தெரியும். அரசே மேலும் இந்த மிருகங்கள் பறவைகளின் சிந்தனைகள் ஆசைகளை எல்லோரும் அறியும்படி செய்யவேண்டும். இவை மனிதர்களுக்கு மிகவும் சுவாரசியமான, அறிவு பூர்வமான விடயங்களாகவும் இருக்கும்" என்றார்.

அவ்வேளை அவர்கள் பக்கத்தில் இருந்த ஒரு மரக்கிளையில் இருந்து இரண்டு ஆந்தைகள் கத்திக் கொண்டிருந்தன. அதனைக் கவனித்த அரசர் "மந்திரியாரே! இந்த ஆந்தைகள் என்ன பேசிக்கொள்கின்றன என்று உமக்குத் தெரியுமா?" என்று கேட்டார். மந்திரி ஆந்தைகளின் சத்தத்தை கூர்ந்து கவனிப்பது போல பாசாங்கு செய்து விட்டு "அரசே ஒரு ஆந்தை பெண் ஆந்தையின் தகப்பனார். மற்றது ஆண் ஆந்தையின் தகப்பனார். இவையிரண்டும் தமது பிள்ளைகளின் திருமண விடயமாகப் பேசிக் கொள்கின்றன. மாப்பிள்ளையின் தகப்பன், பெண்ணின் தகப்பனிடம் சீதன விடயமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்" என்றார். ஆஹா! அப்படியா? மனிதர்களிடம் மட்டுமல்ல பறவைகளிடமும் இந்த சீதன விவகாரம் பரவியுள்ளதா? வேடிக்கையாகவும் சுவராசியமாகவும் இருக்கிறதே. மேலே சொல்லும்" என்றார். "என் மகனை உமது மகளுக்கு மணம் முடிப்பதாக இருந்தால் மிருகங்கள் எதுவுமே இல்லாத பாழடைந்த ஐம்பது காடுகளை உமது மகளுக்கு சீதனமாகத் தரவேண்டும் என்று மாப்பிள்ளையின் தந்தை கேட்க. அதற்கு பெண்ணின் தந்தை இப்பொழுது இருபது பாழடைந்த காடுகளைத் தருவதாகவும், இன்னும் ஆறு மாதங்களில் மீதி முப்பதைத் தருவதாகவும் கூறினார்" என்றார். அரசர் "எப்படி ஆறு மாதத்துள் தர முடியும் என மாப்பிளையின் தந்தை கேட்கவில்லையா?" "கேட்டாரே: பெண்ணின் தந்தை, மன்னர் இப்பவே பெரும் காடுகள் பலவற்றில் மிருகங்களை எல்லாம் வேட்டையாடி விட்டார். இன்னும் ஆறு மாதத்துள் இந்த பெரும் காட்டில் மிருகங்கள் எல்லாமே அழிக்கப்பட்டு விடும். அப்போது ஐம்பது என்ன? அதற்கு மேலும் பாழடைந்த காடுகளைத் தர முடியும் என்று கூறியுள்ளார்" என்றார் மந்திரி.

அப்பொழுதுதான் அரசருக்குத் தான் தேவையற்ற விதமாக மிருகங்களை வேட்டையாடி காட்டு வளங்களை அழிக்கும் தவறு புரிந்தது. அன்று முதல் வேட்டையைக் குறைத்து நாட்டு நலன்களில் கவனம் செலுத்தத் தொடங்கினார் அரசன்.



## மெய் எழுத்துக்களை வைத்து இடைவெளிகளைப் பூர்த்தி செய்வோம்



| | |
|---|---|
| 1. கிழ—கு | 6. வெ__எம் |
| 2. குர—கு | 7. பாட__ |
| 3. அடு__பு | 8. ப__சு |
| 4. அ__பு | 9. க__ணீ__ |
| 5. கா__று | 10. பா__வை |

## அடை மொழிகளைப் பொருத்தமான பெயர்ச் சொற்களுடன் இணைப்போம்

உ+ம் வெள்ளை → பசு

| | |
|---|---|
| 1. ஆழமான | இட்லி |
| 2. நீண்ட | மரம் |
| 3. மென்மையான | மருந்து |
| 4. கசப்பான | உணவு |
| 5. அழகான | கிணறு |
| 6. உயர்ந்த | பாதை |
| 7. சுவையான | படம் |

Galaxy Star

வெற்றி வாரம் 157 / திகதி 03.05.2017

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்

02 14 18 42 48

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919

அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,750,828/-
07.05.2017 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில் இரண்டுவருடங்கள் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய இரு பணிப்பெண்கள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு - 076 848 1298
077 5659 888

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2873 திகதி: 03.05.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 01 09 22 44 V
போனஸ் இல.: 07
சனிக்கிழமை ஜக்பொட்: ரூ. 59,608,282/-


தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

பச்சை நிற டிக்கட்டுக்கள்
2017.05.06 ஆம் திகதி சனிக்கிழமை
சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றியீட்டும் டிக்கட்டுக்கள்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிவலிங்கம்



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், 'தேவவாச' மானிப்பாய் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவலிங்கம் (02.05.2017) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னத்தம்பி - இலட்சுமிப் பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் சூரிய குமாரியின் அன்புக்கணவரும் தனுசன், பிரதாப், திலீபன், கஜன், கார்த்தீகன், துஸ்யந்தினி, விஜிந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும் மதுரா, ராதிகா, தர்சிகா ஆகியோரின் அன்புமாமனாரும் சோபிகா, தனிஸ்கா, பிரதீப், மதுமிதா, மதுரக்ஷன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2017) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'தேவவாச,'
சிவஞானப்பிள்ளையார் கோயிலடி
மானிப்பாய் வீதி, உடுவில்.
தொடர்பு - 077 935 2707

தகவல்:
குடும்பத்தினர்

## Vacancies

எமது யாழ்.நகர் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Course Counselor - Female
Assistant Center Manager - Male
Management Trainee - Male / Female
French / German Language Lecturer (Part-time)

சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்
info@mayzone.lk

MayZone College
The Capstone of Success
021 722 3444
0768508894

## மருந்தாளர் தேவை

மந்திகை வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சிறீ பானு மெடிக்களிற்கு மருந்தாளர் உடனடியாகத் தேவை. சம்பளம் 45000/=+ போக்குவரத்து வசதி+ மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு - 071 303 6879
077 395 2353

## மரண அறிவித்தல்

### திருமதி பவளமல்லிகை திருச்செல்வம்

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை, யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி)



மானிப்பாய் லோட்டன் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளமல்லிகை திருச்செல்வம் 02.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றதிருச்செல்வம் (Technical Officer - Highways) அவர்களின் மனைவியும் சித்திரா, சசிகலா (கொமர்ஷல் வங்கி - யாழ்ப்பாணம்) ரேனுகா (கனடா) ஆகியோரின் தாயாரும் பத்மநாதன் (இயக்குநர் - பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம், இணுவில், Barathy கல்வி நிறுவனம் - சித்தங்கேணி) சிவாஜிலிங்கம் (கனடா) ஆகியோரின் மாமியாரும் அபிராம் (யாழ் இந்துக்கல்லூரி), தரணீசன் (யாழ் ,இந்துக்கல்லூரி), பிரஜீத் (கனடா), சஞ்ஜீத் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் (பிரதம லிகிதர் இலங்கை மின்சார சபை, கொழும்பு), தெய்வேந்திரம் (புகையிரத நிலை அதிபர்), அருந்ததி, சூரியகாந்தி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

லோட்டன் வீதி, மானிப்பாய் (C/29721)

தகவல்:
குடும்பத்தினர்.

# Congratulates to

## our Asst. District Secretary



**Mr. S. Sutharsan**

B.Sc(Agri)(Hons), M.Sc(Peradeniya), MPA(Col), SLAS

has been selected as one of over hundred fellows from all over the participating countries for

**the Hubert H. Humphrey North – South Fellowship Award for 2017–2018,**

the 37th year of the programme in United States. Best wishes for complete the fellowship programme successfully.

Staff (Admin.)
District Secretariat,
Jaffna District.


04.05.2017

(AJA CS 003708)

## மரண அறிவித்தல்

### சுவக்கீன்பிள்ளை மரியநாயகம்

(பொன்ராசா)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24.09.1939 | 03.05.2017 |

கரவூரைப் பிறப்பிடமாகவும், சில்லாலை வசிப்பிடமாகவும் கொண்ட சுவக்கீன்பிள்ளை மரியநாயகம் (பொன்ராசா) கடந்த 03.05.2017 புதன் கிழமை காலமானார்.

அன்னார் சுவக்கீன்பிள்ளை - மரியமுத்து தம்பதியரின் பாசமிகு புதல்வரும் கிறிஸ்தினாப் பிள்ளையின் அன்புக் கணவரும் செல்லம்மா, இராசேந்திரம், றஞ்சி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற மைக்கொற்றா மாலினி, குலேந்திரன் (டென்மார்க்), அனற் புளோரின் றாஜினி (டென்மார்க்), சுகோதினி, டினேஸ்குமார் (றமேஸ் - பிரான்ஸ்), மாலினி (றமணி - பிரான்ஸ்), யஸ்ரின் ஜேசுரட்ணம், ஆகி யோரின் பாசமிகு தந்தையும் சவுந்தரன் (டென்மார்க்), சறோ (டென்மார்க்), வவா (பிரான்ஸ்), றமேஸ்குமார் (கொழும்பு), மேரிறாஜினி (கொழும்பு), யோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஜென்சிகா, ஜெனிதா, ஜெனோஜன், லெறோனி ஸ்ரெலா (டென்மார்க்), லக்சிகன், பிரவீன், அஸ்மிதா, டிதுஷா, அனுசா, ஜெனிஸ் (பிரான்ஸ்), ஜெனார்த்தன், ஜெஸ்மினி ஆகியோரின் பாசமிகுபாட்டனும் கவிசாவின் (டென்மார்க்) அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.
076 6559 829

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி இராசையா

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)




கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசையா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) 03.05.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் குகதாசன், ஜெகதாசன், செல்வரதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரதிவாசம்
நாவலடிகோப்பாய்தெற்கு.
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்



### சிவபாலன் கோகுலதாசன்

காரைநகர், களபூமியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை (நல்லூர்) வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாலன் கோகுலதாசன் நேற்று (03.05.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் K.K.K.சிவபாலன் வசந்தகுலநாயகி தம்பதியரின் அன்புப் புதல்வரும் சிவநந்தினி, சிவதர்சினி, சிவாம்சன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் வே.கிருபாகரனின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2017) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 786 6527

50/16, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

### கந்தையா அருணாசலம்

(இளைப்பாறிய அதிபர்)



வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தற்போது மெல்போர்ண், ஆஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா அருணாசலம் (முன்னாள் அதிபர், பட்டிருப்பு மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி , மற்றும் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி) 01.05.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதபிள்ளை கந்தையா நாகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான தங்கராசா மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவராணியின் அன்புக் கணவரும் Dr.சிதம்பரநாதன்(London), தேவிகா(London), Dr.பவானி(Australia), மீனா(Australia), அம்பிகா(NewZealand) கணநாதன் (London) ஆகியோரின் அன்புத்தந்தையும் சதாச்செல்வி, சிங்ககிரீஷன், கிருபாகரன், இளங்குமரன், சிற்சபேசன், லதா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சண்முகசுந்தரம், மங்களேஸ்வரி மற்றும் கணேசலிங்கம் (இளைப்பாறிய உப அதிபர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரண்யா, சுபாசினி, ஸ்கந்தன், ஆஷா-கஜன், சௌமியன், திவ்யா, குமரன், சதீபன், பவன், ருக்ஷிகா, சகாயன், சேயவன், சீரோன், பவித்திரா ஆகியோரின் அன்புப்பேரனும் மைலாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2017) வியாழக்கிழமை மெல்போர்ண், ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
077 226 7053 க.கணேசலிங்கம் (சகோதரன்)

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

## ஐ.நா...

டினார் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்

ஐ.நாவின் ஒரு அலகின் திட்டமிடல் அதிகாரியான விக்னராஜா தலைமையிலான குழுவினரைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சந்திப்புக் குறித்து முதலமைச்சர் தெரிவித்ததாவது:

ஐ.நாவின் பல்வேறு அலகுகள் பல்வேறு பணிகளைச் செய்கின்றபோதும் அவை ஒன்றையொன்று தொடர்புகள் அற்றுப் பணிபுரிவதனால் அவற்றை ஒருங்கிணைத்துச் செயற்படுவதற்கான திட்டமிடலுக்காகப் புதிய ஐ.நா. செயலாளரின் பணிப்பில் குறித்த அதிகாரி வருகை தந்திருந்தார். அவர் இலங்கையைச் சேர்ந்தவர்.

ஐ.நா சற்று வேகம் காட்டியிருந்தால் இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்களில் அதிகமானோரைப் பாதுகாத்திருக்க முடியும் என அவரிடம் சுட்டிக்காட்டினேன். போருக்குப் பின்னரும் போரினால் பாதித்த எம்மைவிட்டு மத்தியுடனேயே ஐ.நாவும் அதிக தொடர்பைப் பேணுவதாகவும் கூறினேன். இவ்வாறு புரிந்துணர்வும் கருத்தொருமிப்பும் இன்றிச் செயற் படுகின்றனர் என்பதை தெரிவித்தேன். இவை தொடர்பில் கேட்டறிந்து கொண்ட நிலையில் இனி அவ்வாறான நிலைமை காணப்படாது என்று அவர் பதிலளித்தார்என்றார் முதலமைச்சர். (த-101)




## மரண அறிவித்தல்கள்

### நீலயினார் வேலாசிப்பிள்ளை



நெடுந்தீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நீலயினார் வேலாசிப்பிள்ளை நேற்று (03.05.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராமநாதன் - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் நீலயினாரின் அன்பு மனைவியும் வசந்தகுமாரின் (கனடா) அன்புத் தாயாரும் கோவிதாவின் அன்பு மாமியும் காலஞ்சென்ற நல்லம்மா, சோமசுந்தரம், கோவிந்தன்(கனடா), இலட்சுமி, கந்தையா(கனடா), டில்லி ராசபாலன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கந்தையா, கனகலச்சுமி, சறோஜினிதேவி, நுவரெட்ணம், அருந்ததி, வனிதா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.05.2017 சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு பாண்டியன்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாண்டியன்குளம் பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தையா-76 330 5478
கோவிந்தன்-416 431 6587

தகவல்:
R.கந்தையா

### திருமதி ராசமணி சுந்தரம்



கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராசமணி சுந்தரம் (01.05.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பு சுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான் சுப்பு கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகளும் கதிரவேலு, பரமேஸ்வரி, திருக்கேதீஸ்வரி, பீதாம்பரம், இராமநாதன் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் தயானந்தன் , குணசிங்கம்(ஜேர்மனி), கலாதேவி, வசந்தாதேவி, விக்நேஸ் வரி, ராஜேஸ்வரி, குலசிங்கம் (ஜேர்மன்), யோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அருணாதேவி, றதிதேவி (ஜேர்மன்), அமிர்தலிங்கம், இந்திரமூர்த்தி, தவம், கணேசலிங்கம், சுகி(ஜேர்மன்), யுவராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தபேசன், நிறோஜன், கம்சிகா, லக்ஷி, ஸகிந், நிஜந்தன், கஸ்பிரியா, நிறோஜா, தர்சன், அஜோஜன், கிரிஷானி, மயூரன், அமீரா, சஸ்மீரா, கிஷாரா, கோபிநாத், ஹரிகரன், அபிநாஸ், அக்ஷா, ஐஸ்ஷர்யா, யுமேஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் டனுஷா, கவினாஸ், கஸ்மியா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2017) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

M.S வீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## குருநாகலில்...

இவர்கள் அனைவரும் அதே வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குருநாகல் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்திருப்பதால் வைத்தியசாலைக்கு நாளாந்தம் வரும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பதாகவும், தற்போது அங்குள்ள 1, 2, 3, 4, 7, 57ஆம் இலக்கப் பெண் விடுதிகளும் ஆறு ஆண்கள் விடுதிகளும் நிரம்பி வழிவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

**காணி தேவை**

எழுதுமட்டுவாழ் சந்திக்கும், பளைச் சந்திக்கும் இடைப்பட்ட A9 வீதியோரத்தில் காணி தேவை.

077 385 1345

**அறை வாடகைக்கு உண்டு**

தனிநபர்களுக்கேற்ற வகையில் சகல வசதிகளுடனும் கூடிய தனி அறை வாடகைக்கு உண்டு. (பெண்களுக்கு மட்டும் வழங்கப்படும்)

077 385 1345

**வேலைவாய்ப்பு**

வடமராட்சியில் பிரசித்தி பெற்ற
தனியார் கம்பனி ஒன்றில்.
தகைமை - G.C.E. O/L
(கணிதம் உட்பட 6 பாடம்)
தொடர்பு - 076 937 9384

**பார ஊர்திக்கான சாரதி தேவை**

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள தரணீஸ் மோட்டார்ஸ் நிறுவனத்துக்கு 10 Wheal பார ஊர்திச் சாரதிகள் தேவைப்படுகின்றார்கள். கனரக வாகனம் செலுத்துவதில் போதிய அனுபவமும் திறமையும் உடையவராகவும் கிளி நொச்சியில் இருந்து குறிப்பாக திருமலை, கொழும்பு சென்று வரக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தொர்பு: 077 772 2305

**MayZone College**
The Capstone of Success

விசேட கட்டணக்கழிவுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்

GRAPHICS . ANIMATION . MULTIMEDIA

Diploma in Digital Pre-Press

Diploma in Digital Video Production

Duration : 3 Months

Diploma in Web Animation

Diploma in 2D & 3D Animation

IELTS A1

திறமையும் முடித்து வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கான புதிய பிரிவு 10.05.2017

NO.61,3rd Floor,Palaly Road,Jaffna

021 722 3444/ 0768508894

## 6 பொலிஸாருக்கு...

செலுத்தத் தவறின் மேலும் 1 வருடம் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

**தற்கொலையாக சோடிப்பு**

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதியில் 2011ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதிக்கு முன்னரான காலப் பகுதியில் இடம்பெற்ற 35 லட்சம் ரூபா மதிக்கத்தக்க திருட்டுச் சம்பவம் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் 2011ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி சுன்னாகம் பொலிஸாரால் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் சிறிஸ்கந்தராஜா சுமணன் முதலாவது சந்தேகநபராகக் கைது செய்யப்பட்டார். எனினும் விசாரணைக்காக கிளிநொச்சி, வட்டக்கச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்ட சுமணன் பொலிஸ் காவலிலிருந்து தப்பித்து இரணைமடுக் குளத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிஸாரால் கிளிநொச்சிநீதிவான்மன்றில்அறிக்கையிடப்பட்டது. இந்தச் சம்பவம் 2011ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி மாலை இடம்பெற்றதாகவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

**பொலிஸ் தடுப்புக் காவல் கொலை வெளிக்கொணர்வு**

இந்த நிலையில் ஏனைய 4 சந்தேகநபர்களுக்கு எதிராகவும் பெரும் குற்ற வழக்கு மல்லாகம் நீதிவான் மன்றில் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன. கடந்த ஆண்டு இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணையின் போது சந்தேகநபர்கள் இருவர், சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸார் மீது சுமணனை சித்திரவதை செய்து கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

மல்லாகம் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் சந்தேகநபர்களின் குற்றச்சாட்டுத் தொடர்பில் பொலிஸாரிடம் விசாரணைகளை மேற்கொண்டு சித்திரவதை மற்றும் கொலை ஆகிய இரு பிரிவுகளில் வழக்குகளை முன்னெடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார். அத்துடன், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் நீதிவான் அறிவித்தல் வழங்கினார்.

**மேல் நீதிமன்றம் வந்தது வழக்கு**

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபரை கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்ட சிந்திக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாருக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டுப் பத்திரத்தை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முன்வைத்தனர். அத்துடன், சட்டமா அதிபர் திணைக்களத்தால் பொலிஸ் அதிகாரி சிந்திக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸாருக்கு எதிராக 1994ஆம் ஆண்டு சித்திரைவதைகள் சட்டத்துக்கு அமைவாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தநிலையில் நேற்று வழக்குத் தொடுனர் மற்றும் எதிரி தரப்புச் சட்டத்தரணிகளின் தொகுப்புரைகள் இடம்பெற்றன.

வழக்குத் தொடுனர் சார்பில் வழக்கை நெறிப்படுத்திய சட்டமா அதிபர் திணைக்கள பிரதி மன்றாடியார் அதிபதி குமார் ரட்ணம் தொகுப்புரையில், 8 சந்தேகநபர்களுக்கும் எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் வகையில் மன்றில் சமர்ப்பித்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை வைத்து ஒப்புவிப்புக்களைச் செய்தார்.

**அரச தரப்பு உறுதி**

"3ஆவது சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகத்தர் தயாளன் தவிர்ந்த ஏனைய 7 சந்தேகநபர்களும் தடுப்புக் காவலிலிருந்த சுமணனை சித்திரவதைக்குட்படுத்தினர். சுமணன் கைது செய்தது முதல் அவரை வெளியில் அழைத்துச் செல்லப்பட்டமை வரையான பொலிஸாரின் பதிவுப் புத்தகங்களின் குறிப்புக்கள் உறுதி செய்கின்றன.

சட்ட மருத்துவ அதிகாரியால் வழங்கப்பட்ட சாட்சியத்தின் அடிப்படையில் சமணனின் உடலில் 16 உட்காயங்களும் 6 வெளிக்காயங்களும் உள்ளமை அவர் மீது சித்திரவதை செய்யப்பட்டமையை உறுதி செய்கிறது. முதலாவது மற்றும் மூன்றாவது சிவில் சாட்சியங்கள் சித்திரவதை செய்தமையைக் கண் கண்ட சாட்சியங்களாக மன்று ஏற்றுக் கொள்ளவேண்டும்.

முக்கியமாக, சந்தேகநபரான சுமணன் நவம்பர் மாதம் 26ஆம் திகதி மாலை இறந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அன்று இரவு 7 மணிக்கு சுமணனுடன் கைது செய்யப்பட்ட ஏனைய 4 சந்தேகநபர்களும் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது, சுமணன் கைது பற்றிய எந்தத் தகவலையும் பொலிஸார் நீதிவானிடம் முன்வைக்கப்பட்ட முதல் அறிக்கையில் வெளிக்காட்டவில்லை. டிசெம்பர் மாதம் முதலாம் திகதியே சுமணன் கைது பற்றிய விவரம் முதல் அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த விடயத்தை முக்கிய விடயமாக மன்று ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அத்துடன், சுமணன் சித்திரவதைக்குள்ளாகி உயிரிழந்ததை மூடி மறைப்பதற்காக அரங்கேற்றப்பட்டதே வட்டக்கட்சிக்கு அவரை அழைத்துச் சென்ற சம்பவம் என மன்றில் உறுதியாகக் கூறுகின்றேன்" என்று பிரதி மன்றாடியார் அதிபதி தொகுப்புரையில் மேலும் தெரிவித்தார்.

**எதிரிகள் தரப்போ விடாப்பிடி**

தொடர்ந்து சந்தேகநபர்களின் சட்டத்தரணிகளான அன்ரன் புனிதநாயகம், சர்மினி விக்கினேஸ்வரன், ரஞ்சித் குமார் மற்றும் மு.றெமிடியஸ் ஆகியோர் முறையே தொகுப்புரைகளை வழங்கினர்.

சிவில் சாட்சிகள், பொலிஸ் சாட்சியங்கள், நிபுணத்துவ சாட்சியங்கள் ஒன்றுக்கு ஒன்று முரணானவை என்று அவர்கள் முதன்மையாக எடுத்துக் கூறினர். பொலிஸார் மீது திருட்டுச் சந்தேகநபர்களுக்கு ஏற்பட்ட விரக்தியே இந்த வழக்கின் அடிப்படை என்றும் அரசியல் நாடகம் என்றும் எதிரி தரப்புச் சட்டத்தரணிகள் மன்றில் எடுத்துரைத்தனர். (அவர்களால் முன்வைக்கப்பட்ட சில கருத்துக்கள் திறந்த மன்றில் பலரையும் இடையிடையே சிரிக்க வைத்தன).

இரு தரப்பு தொகுப்புரைகளும் நிறைவடைந்தவுடன் 30 நிமிட இடைவேளையின் பின் தீர்ப்பு அறிவிக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று அறிவித்தது.

**சித்திரவதையை நிரூபித்தவை**

மாலை 4.35 மணிக்கு மன்று மீண்டும் கூடியது. மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பை வழங்கினார்.

"பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலிலிருந்த சந்தேகநபர் ஒருவரை கொடுமை செய்த குற்றச்சாட்டில் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்புச் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட தொகுப்புரைகளில் சாட்சியங்களுக்கு இடையே காணப்பட்ட முரண்பாடுகள் தொடர்பில் மட்டுமே கூறப்பட்டது. ஆனால் இந்த வழக்கில் சாட்சியங்களே இல்லாமல் வேறு முக்கிய சில விடயங்களை மன்று சீர் தூக்கிப் பார்க்கின்றது.

சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டால், 24 மணி நேரத்துக்குள் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட வேண்டியது அரசமைப்பில் கூறப்பட்ட சட்டமாகும். ஆனால் சந்தேகநபர் சுமணன் நவம்பர் மாதம் 25ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்குக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை மறுநாள் 26ஆம் திகதி காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி, வட்டக்கச்சிக்கு விசாரணைக்காகப் பொலிஸார் அழைத்துச் சென்றுள்ளனர். அன்றைய தினம் பி.ப. வேளை சுமணன் பொலிஸ் காவலிலிருந்து தப்பித்து மாலை இரணைமடுக் குளத்திலிருந்து மீட்கப்பட்டார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டால் 24 மணி நேரத்துக்குள் அண்மையாகவுள்ள நீதிவான் முன்னிலையில் அவரை முற்படுத்த வேண்டும். நீதிவானின் அனுமதியுடன் மறியல் சாலை உத்தியோகத்தர் ஒருவருடன் சந்தேகநபரை விசாரணைக்கு எங்கு வேண்டும் என்றாலும் அழைத்துச் செல்லலாம் என்று குற்றவியல் சட்ட நடைமுறைக் கோவையில் கூறப்பட்டுள்ளது. எனினும் இந்த வழக்கில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டில் சுமணனை நீதிவானிடம் முற்படுத்தாமல் பொலிஸார் செயற்பட்டமையே அவர்கள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் செயற்பாடு. சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்ட பின்னர், அவர் மீதான அனைத்து நடவடிக்கைகளுக்கும் அந்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியே பொறுப்புக் கூற வேண்டியவர்.

மேலும் இந்த வழக்கில் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையையும் அவரால் வழங்கப்பட்ட சாட்சியங்களையும் மன்று ஏற்றுக் கொள்கின்றது. கொல்லப்பட்ட சுமணின் உடலில் 16 உட்காயங்களும் 6 வெளிக்காயங்களும் இருந்தன என்று சட்ட மருத்துவ அதிகாரி குறிப்பிட்டார். 'அந்தக் காயங்கள் உடலம் சோதனை செய்யப்பட்ட போது, எத்தனை நாட்களுக்கு முன்னர் ஏற்பட்டது' என்று 2ஆம் எதிரியின் சட்டத்தரணி சட்ட மருத்துவ அதிகாரியிடம் வினவிய போது, அவர் 2 நாள்களுக்கு முன்னர் ஏற்பட்டவை என்று தெளிவாகப் பதிலளித்தார். எனவே பொலிஸார் கைது செய்த பின்னர்தான் சுமணனுக்கு அந்தக் காயங்கள் ஏற்பட்டன என்று மன்று எண்பிக்கின்றது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மீது மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைக்கு கண்கண்ட சாட்சியம் அவசியம் இல்லை. எனினும் இந்த வழக்கின் முதலாவது சாட்சியின் சாட்சியத்தில் கூறப்பட்டவைகள் சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியத்துடன் ஒப்பீடு செய்கின்றன. முதலாவது சாட்சி கூறியதற்கு அமைவாக, சுமணன் தூக்கில் தொங்கவிடப்பட்டு அவருக்குப் பின்புறத்தில் பொல்லுகளால் அடிக்கப்பட்டமை, சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்ட பிண்டத்தில் ஏற்பட்ட 3 காயங்கள் நிரூபிக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக பொலிஸ் நிலையத்தில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தரால் பதிவு செய்யப்பட்ட பதிவுப் புத்தகங்களின் குறிப்புக்களின் அடிப்படையில் வழக்குத் தொடுனரால் பொலிஸ் சந்தேகநபர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

வழக்குத் தொடுனரால் 1 தொடக்கம் 11ஆ வரை முன்வைக்கப்பட்ட ஆவணங்களை மன்று ஏற்றுக் கொள்கிறது. 3ஆவது சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் தயாளனுக்கு எதிராக வழக்குத் தொடுனரால் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. அவரை வழக்கிலிருந்து மன்று விடுவிக்கின்றது. அத்துடன், 8ஆவது சந்தேகநபரான லலித் என்பவர் சாரதியாகக் கடமையாற்றினார். அவர் வட்டக்கச்சிக்குச் செல்லவில்லை. ஆனால் சுமணன் மீதான சித்திரவதைக்கு பொல்லுகள் மற்றும் வயர்களை அவர் வழங்கினார் என்று சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்ட போதும் அது நிரூபிக்கப்படவில்லை என்பதால் அவரையும் மன்று விடுவிக்கின்றது.

ஏனையவர்களான முதலாவது எதிரி முன்னாள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார, மயூரன், ராஜபக்ச, ஜெயந்த,சோமதாஸ வீரசிங்க மற்றும் கோபி கிருஷ்ணா ஆகியோர் மன்றால் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் மனித குலத்துக்கு எதிராக கொடுமைகளை மேற்கொண்ட குற்றவாளிகள் என மன்று முடிவுக்கு வருகிறது" என்று மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

அத்துடன், போர்க்காலத்திலோ, அமைதிக் காலத்திலோ, அவசரகாலநிலையிலோ சந்தேகநபர்கள் மீது கொடுமைகள் இடம்பெறுவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குற்றவாளிகள் சார்பிலும் வழக்குத் தொடுனர் சார்பிலும் மன்றால் கருத்துக்கள் கேட்கப்பட்டன. குற்றவாளிகள் தரப்பில் எதுவுமே தெரிவிக்கப்படவில்லை. வழக்குத் தொடுனர் தரப்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் அதிபதி, குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்குமாறு கோரினார். அத்துடன், பாதிக்கப்பட்ட சுமணனின் குருதி உரித்து உறவுகளுக்கு ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாதவாறு குற்றவாளிகளால் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந் மன்றிடம் வலியுறுத்தினார்.

**தண்டனைத் தீர்ப்பு**

தொடர்ந்து குற்றவாளிகளான 6 பொலிஸாருக்குமான தண்டனைத் தீர்ப்பை மேல் நீதிமன்ற நீதபதி அறிவித்தார்.

"1994ஆம் ஆண்டு 22ஆம் இலக்க சித்திரவதைகளுக்கு எதிரான மாநாட்டுச் சட்டம், இலங்கை சித்திரவதைகள் சட்டம், உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சித்திரவதைக்ளுக்கு எதிரான தீர்ப்புக்கள், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், பன்னாட்டு நீதிமன்ற போர்க்குற்றத் தீர்ப்புக்கள், உகண்டா நீதிமன்ற சித்திரவதைக்கு எதிரான தீர்ப்பு உள்ளிட்டவைக்கு அமைவாக 6 குற்றவாளிகளுக்கும் அதிகூடிய தண்டனையாக தலா 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது.

அத்துடன், குற்றவாளிகள் 6 பேரும் தலா 2 லட்சம் ரூபாவை சித்திரவதைக்குள்ளான சுமணனின் குடும்பத்துக்கு இழப்பீடாக வழங்க வேண்டும். செலுத்தத் தவறின் தலா ஒரு வருடம் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். குற்றவாளிகள் 6 பேரும் தலா 25 ஆயிரம் ரூபாவை தண்டமாகச் செலுத்த வேண்டும். அதனையும் செலுத்தத் தவறின் மேலும் தலா 1 வருடம் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்" என்று யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ள கோபிகிருஸ்ணா வெளிநாடு ஒன்றில் வசித்து வருகிறார் என்று மன்றில் தெரிவிக்கப்பட்டது. அவர் இல்லாமலேயே வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன. அவர் சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் மன்றில் முன்னிலையானார். கோபிகிருஸ்ணாவுக்கு எதிராக பன்னாட்டுப் பொலிஸார் ஊடாகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைப் பொலிஸாரின் தடுப்புக் காவல் சித்திரவதைகள் அதிகரித்துள்ளன என்று பன்னாட்டு மன்னிப்புச் சபை உள்ளிட்ட மனித உரிமை அமைப்புக்கள் ஐ.நா வரை குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன. இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக தடுப்புக் காவல் சித்திரவதை குறித்த பொலிஸார் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. (உ-வ-12)

## இனவாத...

பெற்ற மேதினக் கூட்டத்தோடு கிழித்தெ[illegible] பட்டுள்ளதாக மீன் பிடித்துறை அ[illegible] மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பு டார்லி வீதியில் அமைந்[illegible] சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலை[illegible]தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலா[illegible]திப்பில் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 2ஆம் திகதி கண்டி கெட்டம்பே [illegible]னத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டம் சு.க[illegible]குப் பெருவெற்றியளித்துள்ளது. மேதி[illegible] கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு நாங்க[illegible] அனைத்து சு.கவினருக்கும் அழைப்பு விடுத்திருந்தோம்.

ஆனால், சிலர் காலிமுகத்திடலில் ஜி.எல். பீரிஸின் கட்சி நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்டனர். அவர்கள் தொடர்பில் கட்சியின் மையக் குழு ஆராய்ந்த பின்னர்தான் நடவடிக்கையெடுக்கப்படும். என்றாலும், அனைத்து சு.கவினரும் ஒன்றிணைந்து பயணிப்பதையே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விரும்புகின்றார்.

நாங்களும் பலமுறை இரண்டு அணியினரும் ஒன்றிணையப் பேச்சுக்களை முன்னெடுத்தோம். ஆனால், அவை வெற்றியளிக்கவில்லை. 2020 சு.க தலைமையிலான அரசு கட்டாயம் அமையும். அதற்காகவே அரச தலைவரின் கட்சியை வலுப்படுத்தி வருகின்றார். அனைவரும் ஒன்றிணைந்தால் சாதாரண வெற்றி சிறந்த வெற்றியாக மாறும்.

இதேவேளை, இம்முறை நடைபெற்ற மேதினக் கூட்டத்துடன், சு.க. மீது சுமத்தப்பட்டிருந்த இனவாதக் கட்சி என்ற முத்திரை கிழித்தெறியப்பட்டுள்ளது. வரலாற்றில் என்றும் இல்லாதவாறு வடக்கில் இருந்து மக்கள் கலந்து கொண்டனர்.

சு.கவை இனவாதம், மதவாதத்துக்கு அப்பால் நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களையும் இணைத்துக்குக் கொண்டு முன்நோக்கிப் பயணிக்கும் ஒரு ஜனநாயகக் கட்சியாகக் கட்டியெழுப்பவேண்டும் என்பதே அரச தலைவர் மற்றும் அனைவரினதும் விருப்பம் என்றார். (த-4)

## ஆயுதங்களுடன்...

றைய தினம் முல்லைத்தீவில், இராணுவத்தினரின் பேருந்து மீது இனந்தெரியாதோரால் கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

இராணுவத்தினர் அன்றைய தினம், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இந்தச் சம்பவம் நடைபெற்று ஒரு வாரம் நெருங்கும் நிலையிலும், இராணுவத்தினரின் பிரசன்னம் குறையவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு நகரிலிருந்து சிலாவத்தை ஊடாக முள்ளியவளை நோக்கிச் செல்லும் பாதை, சிலாவத்தைச் சந்தி, மூன்றாம் கட்டைச் சந்தி, வற்றாப்பளைச் சந்தி எனப் பல்வேறு இடங்களிலும் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் குவிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு இடத்திலும் ஆகக் குறைந்தது 5 இராணுவத்தினராவது நிறுத்தப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நெருங்கும் நிலையில், இராணுவத்தினர் தொடர்ச்சியாகக் கண்காணிப்பு நடவடிக்கைளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஈடுபடுவது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாக, வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர்களுள் ஒருவரான து.ரவிகரன் தெரிவித்தார். (த-5)



# வடமாகாண அணி போராடித் தோல்வி

யாழ்ப்பாணம், மே 4
இலங்கை கிரிக்கெட் சபை தேசிய ரீதியில் நடத்தும் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத்தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வடமாகாண அணி போராடித் தோல்வியடைந்தது.
வடமாகாண அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய மாகாண அணி 45.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக கஜித 53 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மதுசன் 4 இலக்குகளையும், கபில்ராஜ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
300 பந்துகளில் 179 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை நோக்கிக் களமிறங்கிய வடக்கு மாகாண அணி 39.1 பந்துப் பரிமாற்றங்களில் 172 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து வெறும் 6 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பெர்னான்டோ அதிக பட்சமாக 87 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்து வீச்சில் அதிகபட்சமாக டிமித்ரி 4 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 4
**சரஸ்வதியின் கால்பந்தாட்டம்**
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தத்திட்டமிட்ட லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது.
பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது.
**பாரதி வி.கழக கரப்பந்தாட்டம்**
நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் நாயன்மார்கட்டுபாரதி விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## கலைமகள் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், மே 4
நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் அச்சுவேலி கலைமகள் அணி முன்னேற்றம் கண்டது.
பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது.
மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கலைமகள் அணி. இரண்டாவது செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி கலைமகளின் நேர்செற் வாய்ப்பை இல்லாமல் செய்தது நவஜீவன்ஸ் அணி.
முதல் இரு செற்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்றிருந்தன. மூன்றாவது செற்றை எந்த அணி கைப்பற்றுகிறதோ அந்த அணியே வெற்றிபெறும் என்ற நிலை இருந்தது.
அந்த செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் முன்னேற்றம் கண்டது கலைமகள் அணி. (ம23)

## காமாட்சியை வென்றது யாழ்ப்பாணப் பல்கலை

யாழ்ப்பாணம், மே 4
இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில், கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறி காமாட்சி அணி, 28.3 பந்துப் பரிமாற்றங்களில் 97 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கஜீவ 42 ஓட்டங்களையும் பிரதாப் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் வர்ணகுலசூரிய 5 இலக்குகளையும், லோகதீஸ்வரன் 2 இலக்குகளையும், நிதர்சன், செந்தூரன், கஜேந்திரன் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
98 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி 17.4 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக துவாரகசீலன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், கபிலன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23)



## தலைமையைப் பின்பற்றும் வீரர்கள் இருந்தால் அணியின் வெற்றிப்பாதை இலகுவாக அமையும்

### ரணதுங்க தெரிவிப்பு

"தலைமையின் கட்டளைகளை கேட்டு அதன்படி செயற்படுபவர்கள் இருந்தால், அணி வெற்றிப்பாதையில் செல்வது இலகுவாக அமையும்" இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கு உலகக்கிண்ணம் வென்றுகொடுத்த முன்னாள் தலைவர் ரணதுங்க.
1996ஆம் ஆண்டு இலங்கைக்கு உலக கிண்ணத்தை வென்று கொடுக்கும் பொருட்டு அப்போதைய அணியின் தலைவர் அர்ஜுன ரணதுங்க வழங்கிய தலைமைத்துவம் மற்றும் கிரிக்கெட் விளையாட்டின் பொருட்டு ஆற்றிய சேவையைப் பாராட்டும் முகமாகவே இந்தியாவின் ஹைதராபாத் நகர கிரிக்கெட் சங்கம் நேற்றுமுன்தினம் பாராட்டு விழாவை ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.
"1996ஆம் ஆண்டு இலங்கை உலகக்கிண்ணத்தை வெற்றிகொள்வதற்கு மிகவும் அர்ப்பணிப்புடன் கூடிய 13 வீரர்களுக்கு தலைமைதாங்கிய என்னை இன்று எல்லோரும் பாராட்டுகின்றார்கள். என்னுடைய தலைமைத்துவத்தின் கீழ் விளையாடிய அனைத்து வீரர்களும் எப்பொழுதும் என்னுடைய அறிவுறுத்தல்களையே பின்பற்றினார்கள். வீரர்கள் தங்களுடைய தலைவருக்கு மதிப்பளித்து, அவரின் கட்டளைகளைப் பின்பற்றி விளையாடும் பொழுது அந்தத் தலைவரால் முன்னோக்கிச் செல்லவியலும் என்பதை அவர்கள் அறிவார்கள். அன்றிருந்த 13 வீரர்களும் பணத்தைப் பற்றிச் சிந்திக்காது மிகவும் அர்ப்பணிப்புடன்நாட்டுக்காக விளையாடினார்கள். இந்த அணி கிடைத்தது எனக்குக் கிடைத்த வாய்ப்பு" என ரணதுங்க மேலும் குறிப்பிட்டார். (ம)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 4
வடமாகாண மெய்வல்லுநர் மற்றும் பெருவிளையாட்டுகளில் பங்குபற்ற இருக்கும் போட்டியாளர்களின் பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணக்கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.
இதில் யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்து பொறுப்பாசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண கல்வி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் அறிவித்தார். (ம-422)

## அதிகரிப்பு!

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் தொடருக்கான பரிசுத்தொகை அதிகரிக்கப்பட்டது.
பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் விம்பிள்டன் தொடரும் (இங்கிலாந்துத் தொடர்) ஒன்று. கடந்த வருடம் பட்டம் வென்றவர்களுக்கு தலா 2 மில்லியன் பவுண்டுகள் வழங்கப்பட்டது. இந்தத் தொகை தற்போது அதிகரிக்கப்பட்டது.
இதன்படி நடப்பு வருடம் ஆண், பெண் என இருபால் பிரிவிலும் தலா 2.25 மில்லியன் பவுண்டுகள் வழங்கப்படவுள்ளது. (ம)

## முதலிடத்தில் நியூசிலாந்து

பன்னாட்டு கிரிக்கெட் சபை, தனது தரவரிசைப் பட்டியலைப் புதுப்பித்துள்ளது. ரி-20 ஆட்டங்களைப் பொறுத்தமட்டில் நியூசிலாந்து அணி முதலிடத்தில் உள்ளது.
125 புள்ளிகளுடனேயே நியூசிலாந்து அணி முதலிடம் பிடித்துள்ளது. 121 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணி இரண்டாவது இடத்திலும், 121 புள்ளிகளுடன் பாகிஸ்தான் மூன்றாவது இடத்திலும், 118 புள்ளிகளுடன் இந்தியா நான்காவது இடத்திலும், 111 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா ஐந்தாவது இடத்திலும் உள்ளன.
ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய அணிகள் உள்ளன.
இலங்கை அணி 95 புள்ளிகளையே பெற்றுள்ளது. ஆப்கானிஸ்தான் 90 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இதனால் தரப்படுத்தலில் ஆப்கானிஸ்தான் இலங்கையைப் பின்தள்ள வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. ஆப்கானிஸ்தானுக்குப் பின்னரேயே பங்களாதேஷ் தரப்படுத்தப்பட்டுள்ளது. இதுவும் ஆச்சரியம் தரும் விதத்தில் அமைந்தது. (ம)





# அத்தனையும் ரொனால்டோ

## அத்லெட்ரிகோவை வென்றது ரியல்

ஐரோப்பியக் கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற அரையிறுதி முதல் சுற்று ஆட்டத்தில் அத்லெட்ரிகோ மட்ரிட்டை வென்றது ரியல் மட்ரிட். இந்த ஆட்டத்தில் பதிவான அத்தனை கோல்களையும் ரொனால்டோவே பதிவுசெய்தார்.
ஆட்டம் ஆரம்பித்த பத்தாவது நிமிடத்தில் ராமோஸ் வழங்கிய பந்தை நேர்த்தியான கோலாக மாற்றினார் ரொனால்டோ. முதல்பாதியின் முடிவுவரை வேறெந்த மாற்றமும் ஏற்படவில்லை. 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது ரியல் மட்ரிட்.
1:0 என்ற நிலையிலேயே இரண்டாம் பாதியும் நகர்ந்து கொண்டிருந்தது. ரொனால்டோவுக்குக் கடும் போட்டி கொடுத்தார் கிரீஸ்மன். ஆனால் நீண்டநேரம் ரொனால்டோவை கட்டிப்போட இயலவில்லை. 73 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ இரண்டாவது கோலைப் பதிவு செய்தார். 86 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ தனதும் அணியினது மூன்றாவது கோலையும் பதிவு செய்தார். முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றி பெற்றது.
அரையிறுதியின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அத்லெட்ரிகோ மட்ரிட் அணி மூன்று கோல்கள் வித்தியாசத்தில் ரியல் மட்ரிட்டை வீழ்த்தினாலேயே அந்த அணியால் இறுதிக்குத் தகுதிபெறமுடியும். (ம)


## டெஸ்ட் புள்ளிப் பட்டியல்; இந்தியா கடும் ஆதிக்கம்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் அதிகளவான புள்ளிகள் வித்தியாசத்தில் இந்திய அணி முதலிடத்தில் தொடர்கிறது.
இந்திய அணி 122 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது. அடுத்த இடத்தில் உள்ள தென்னாபிரிக்கா அணி 109 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையில் 13 புள்ளிகள் வித்தியாசம் உள்ளது.
ஆஸ்திரேலியா 108 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், இங்கிலாந்து 101 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், பாகிஸ்தான் 97 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளன.
ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே நியூசிலாந்து, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், சிம்பாப்வே ஆகிய அணிகள் உள்ளன.
பாகிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையே டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் தரப்படுத்தலைத் தீர்மானிக்க வல்ல தொடராக அமைய வாய்ப்புள்ளது என்றும் கருதப்படுகிறது. (ம)



## தென்னாபிரிக்காவின் ஆதிக்கம் வலுநிலை

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் தென்னாபிரிக்க அணி முதலிடத்தில் உள்ளது.
பன்னாட்டு கிரிக்கெட் சபை, தனது தரப்படுத்தல் பட்டியல்களை நேற்றுமுன்தினம் புதுப்பித்தது. 123 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா முதலிடத்தில் உள்ளது. 118 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியா இரண்டாவது இடத்திலும், ஆஸ்திரேலியாவை விட ஓர் புள்ளி குறைவாகப் பெற்றுள்ள இந்தியா மூன்றாவது இடத்திலும், 115 புள்ளிகளுடன் நியூசிலாந்து நான்காவது இடத்திலும், 109 புள்ளிகளுடன் இங்கிலாந்து ஐந்தாவது இடத்திலும் உள்ளன.
ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் உள்ளன.
மினி உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தத் தொடருடன் தரப்படுத்தலில் மாற்றங்கள் வர அதிக வாய்ப்புக்கள் உள்ளன. (ம)



# ஒரு ஓட்டத்தால் தவறியது மிஸ்பாவின் சதம் பாகிஸ்தான் அணி மீண்டும் முன்னிலையில்


மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் 99 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மிஸ்பா. எனினும் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங் ஸில் முன்னிலை பெற்றது.
பாகிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் மேற்கிந்தியத் தீவுகளின் கிங்ஸ்டன் ஓவல் மைதானத்தில் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது தீவுகள். அந்த அணி 312 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சேஸ் 131 ஓட்டங்களையும், கோல்டர் 58 ஓட்டங்களையும், பவல் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் அப்பாஸ் 4 இலக்குகளையும், ஆமிர் 3 இலக்குகளையும், யாசிர் 2 இலக்குகளையும்,



சடப்கான் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் இரண்டாம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அசார் அலி 81 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் மிஸ்பா 7 ஓட்டங்களுடனும் நேற்றுமுன்தினம் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். சதம் கடந்தார் அசார் அலி. அவர் 105 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மிஸ்பா 99 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். முதலாவது டெஸ்ட் ஆட்டத்திலும் மிஸ்பா 99 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தபோது மறுமுனையால் இலக்குச் சரிவு ஏற்பட்டு அணி சகல இலக்குகளையும் இழந்தது. மொத்தத்தில் இந்தத் தொடரில் மட்டும் மிஸ்பா இரண்டு சதங்களைத் தவறவிட்டார். பின்வரிசை பெரிதாக செயற்படவில்லை. 393 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது தீவுகள்.
பந்துவீச்சில் கபிரியேல் 4 இலக்குகளையும், கோல்டர், பிஸ்கூ இருவரும் தலா 3 இலக்குகளையும் வீழ்த்தினர். இரண்டாவது இன்னிங்ஸிற்காகப் பதிலுக்குக் களமிறங்கிய தீவுகள் ஒரு இலக்கை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (ம)

## மரண அறிவித்தல்

### அப்பாத்துரை குணசிங்கம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொட்டடியை வசிப்பிடமாகவும் மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக வசித்தவருமான அப்பாத்துரை குணசிங்கம் நேற்று (03.05.2017) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் வரலட்சுமியின் அன்புக் கணவரும் குமாரசாமி (கொழும்பு), புவனேஸ்வரி தியாகராஜா (சுவிஸ்), கனகமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லிங்ககஜன், யசிந்தன், யசோதரன், யசிகரன், யாழினி, யசிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகனா, சந்துரு ஆகியோரின் அன்பு மாமனும் மற்றும் அபிஷாந், அஸ்வின், நிருஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2017) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 25, மின்சாரநிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 188 2518**




# கொல்கத்தாவுக்கு புனே தக்கபதிலடி



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், கொல்கத்தாவை வீழ்த்தியது புனே. அந்த அணியின் இந்த வெற்றி முதல் சுற்றில் கொல்கத்தாவிடம் அடைந்த தோல்விக்குப் பதிலடியாகவும் பதிவானது.

நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பைத் தீர்மானித்தது புனே. கொல்கத்தாவின் ஆரம்ப வீரர் நரைன் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்து தடுமாற்றத்தை ஆரம்பித்து வைத்தார். அந்த அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் 8 இலக்குகள் இழப்புக்கு 155 ஓட்டங்களையே எடுத்தது. அதிகபட்சமாக பாண்டே 37 ஓட்டங்களையும், கிரான்ட்ஹோம் 36 ஓட்டங்களையும், சூரியக்குமார் யாதவ் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய புனே ஆரம்ப வீரர் திரிபதியின் அதிரடியாட்டத்தால் வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் புள்ளிப்பட்டியலில் ஹைதராபாத்தை பின்தள்ளி மூன்றாவது இடத்துக்கு முன்னேறியது புனே. அதிகபட்சமாக திரிபதி 92 ஓட்டங்களைக் குவித்தார்.

(ம)

**A/L பௌதிகவியல்**
English, தமிழ் மூலம்
அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.
1. The Science Corner
2. Physics World Ariyalai
**077 618 3064**

**தவறிவிட்டது**
கீரிமலை வீதி, பெரியவிளான் உதயன் வெல்டிங் வேக் சொப்பிற்கும் அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்திற்கும் இடையில் பெரியவிளான், அளவெட்டி டச்சுவீதியில் (01.05.2017) திங்கட்கிழமை பவுண் நெக்லஸ் (வெள்ளை முத்தும் பவுண்குண்டும் கலந்த) ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
**தொடர்பு: 077 020 3447**




*திருமணம், பூப்புனித நீராட்டு, பிறந்தநாள் விழா*
**Video Editing**
பயிற்சி முடிவில் 100% வேலைத் திறனிற்கு உத்தரவாதம்
தொலைக்காட்சியில் பணிபுரியும் ஆசிரியரால் கற்பிக்கப்படும்
10 Days 20 Hours
Adobe Premiere CC, Edius 7, Adobe After Effect, Video Plug-ings, Adorage filter, Gold Make-up, New Blue Skin Touch-up, Video Color Tune-up, Looks, Song Editing Technic, Blu-ray Burning
புதிய பிரிவுகள் ஆரம்பம் 06th May 2017
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
விபரங்களிற்கு: MCS IT Campus-Jaffna 0773903123

**யாழில் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி Mobile Phone Repairing Course, திருத்தும் துறையில் 10 வருடங்களுக்கும் மேல் அனுபவம் கொண்ட முதல்தர ஆசிரியர் **Ganesh Sir** அவர்களினால் நடத்தப்படுகின்றது.
May - 06 சனிக்கிழமை காலை - 09 மணி முதல்
Reg fee - 2500/=
Course fee - 10000/=
6, 7,8,9 ஆகிய நான்கு நாள்களில் Smart Phone கள் உட்பட அனைத்து Phoneகளும் திருத்தும் முறை பற்றிய பயிற்சியளிக்கப்படும் சுயமாக வேலை செய்யும் அளவிற்கு பயிற்சி வழங்கப்படும். குறைந்த முதலீட்டில் உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய ஒரு சுயதொழில். **பதிவுகளுக்கு முந்துங்கள்**
**Soft Vitw**
No.221 Kandy Road, Jaffna. 077 747 5783

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.